Presented to the

LIBRARIES *of the*

UNIVERSITY OF TORONTO

by

François Gros

[illegible]

Sri Vaidyanatha Iyer
B.A. B.L.
Junior IV class
Kumbakonam

ஸ்ரீ

ஸ்ரீமத்கம்பராமாயணம்.

கம்பநாட்டாழ்வார்

அருளிச்செய்தது.

இரண்டாவது

அயோத்தியாகாண்டம்.

இஃது

சென்னைக்கல்விச்சங்கத்துத்தமிழ்ப்புலவர்.

திரு-வேங்கடாசலமுதலியார்

பிரதிக்கிணக்க

க-பு ஸ்ரீமாந்-தேவராசகவிராயரவர்களால்

பரிசோதித்து

சி - இராகவலுநாயுடவர்கள்

கேட்டுக்கொண்டபடி

சித்தூர்,

வீராசாமிநாயுடவர்களது

வித்தியாவிநோதவச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1884-ஷ

அறிவிப்பு.

இப்புத்தகம் வேண்டுபவர்கள் சென்னப்பட்டணம் புரசைப்பாக்கம் நாராயணபாளயம் வடமலைபிள்ளை வீதியில் - 2 - வது கதவிலக்கமுள்ளவீட்டிலும், கோயமுத்தூர் பெரியகடைவீதியில் எனது புஸ்தகஷாப்பிலும், விலைக்குப்பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு.

ஞா சி - வீராசாமிநாயுடு

அயோத்தியாகாண்டத்திற்குப் பிழைபாடும் திருத்தமும்

பக்கம்	பாட்டு	வரி	பிழை.	திருத்தம்.
௩௧	௫௨	௨	புளை	புனை
௩௨	௬௪	௩	அச்	அஞ்
௩௬	௯௨	௨	சுரை	சுரரை
௩௭	௱	௪	தோங்யை	தோங்கிய
௩௯	௮	௪	ருல்	ருன்
௪௨	௩௰	௨	மெ	யெ
௪௬	௫௯	௩	மே	யே
௬௨	௱௯௩	௨	வொ	வா
௭௰	௰௭	௩	ருடு	ருரு
௭௧	௨௩	௪	தூகி	தூதி
௭௯	௧	௨	டையோ	டையா
௮௫	௪௫	௪	தா	யா
,,	௪௯	௧	ரூ	கு
,,	௬௰	௪	உல	உற
௮௭	௬௬	௩	றென்	லென்
௯௰	௪௫	௩	பாம்	யாய்
௯௩	௩௮	௨	கழு	கலை
,,	௪௩	௩	லன்	யின்
௯௬	௰௮	௩	ளவி	ளவி
௯௯	௪௨	௧	நது	நறு
௱	௪௫	௪	எறு	எறி
௱௨	௪	௧	கற்	சுற்
,,	௯	௧	சுற்டுனை	சுற்றினை
௱௬	௩௮	௧	சிங்	சிளங்
,,	௪௧	௨	நூ	தூ
௱௭	௪௩	௪	டகை	டை
௱௮	௫௬	௩	சாணு	காண
௱௰	௬௮	௨	வில்	வில்
௱௨௨	௨௭	௩	காரி	கரி
௱௨௮	௰௪	௪	சுள்	கள்
௱௨௯	௨௧	௧	கொட	கொடை
௱௩௫	௬௭	௪	ஒவிர்	ஒருவிர்
,,	௬௮	௪	சனை	சனை
௱௫௪	௱௪௧	௧	ஞான்	ஞம்

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto

https://archive.org/details/gc-sh5-0277

விளம்பரம்.

இதினாலே சகலருக்கும் தெரியப்படுத்துகிறது என்ன என்றால்.

இந்த ஸ்ரீமத்கம்பராமாயணம் அயோத்தியாகாண்டத்தில்-சூய ஆம் பக்கம்தொடங்கி, பின்தொடர்ந்து வருகிற அந்தந்த திருவிருத்தத்திலும், அடிதோறும் உள்ள சொற்கள் எல்லாத்தையுமேஎழுத்துச்சந்தி பண்ணாமலும் விகாரப்படுத்தாமலும், அடி தொடை நோக்கியும், வேண்டும் இடம் அறிந்தும், சிலதுகளைமாத்திரம்எழுத்துச்சந்திபண்ணியும் விகாரப்படுத்தியும், மற்றதுகளைஎல்லாம்சந்திபிரித்தும்அச்சிற்பதிப்பித்து இருக்கிறோம், அப்படி எதுக்காக செய்யப்பட்டதுஎன்றால், இதற்குமுன்னமே லோகோபகாரம்ஆக, எம்மால்அச்சிற் பதிப்பிக்கப்பட்டிருக்கின்ற சிலசுவடிகளை பார்வைஇட்டவர்களில், இந்த பிராந்தியத்துபிரபுக்களும் வித்துவான்களும் புலவர்களும் கவிராயன்மார்களும் உபாத்தியாயர்களும் ஆயிருக்கிற சில பெயர்கள், அந்த சுவடிகளில் பயன் இல்லாத சந்தியையும் விகாரத்தையும், விலக்கி பயன் உள்ள சந்தியையும்விகாரத்தையும் வைத்துக்கொண்டு,அதுகள்அச்சிற்பதிப்பிக்கப்பட்டிருக்கையினாலே, இத்தமிழ் ஆனதுலோகத்து உபகாரம் ஆகவேணும் என்று நமதுமுன்னோர்கள் நினைத்தபடிக்கு நாங்கள் பிரயோசனம் கண்டோம், ஆகையால் அப்படியே இதிலும்செய்யப்படவேணும் என்று எம்மைக் கேட்டுக் கொண்டார்கள், இதுவும் அல்லாமல் தமிழ் இலக்கணம் படித்தும், பலசொற்களுக்கும் உறுப்புகளுக்கும் சொன்ன பொது விதிகளையும், சிலசொற்களுக்கும்உறுப்புகளுக்கும் சொன்ன சிறப்பு விதிகளையும் கொண்டு, இன்ன இடத்திலே சந்தியாவது விகார்மாவது வேண்டும், இன்ன இடத்திலே அது வேண்டாம், என்று ஓர்ந்துஉணர்ந்து, பயன் உள்ள சந்தியையும்விகாரத்தையுமே அனுசரித்து, நமது முன்னோர் கருதிய படிக்கு லோகோபகாரத்தை நிலை நிறுத்தாமல், பயன் இல்லாத சந்தியையும் விகாரத்தையுமே எங்கெங்கும் அனுசரிக்கப் புறப்பட்டு,அந்தலோகோபகாரத்தை நிலைகெடுக்கிற இளங்கல்விமான்கள் பலபெயர்கள் இருக்கிறார்கள். அவர்களை சந்திப்பேய் அறையாமலும் விகார வெறிபிடியாமலும், அவர்களுக்கு தெளிவு உண்டாகி, கலக்கம் தீரும்படியாய்,இந்த சந்தியையும் விகாரத்தையும் குறித்து, சந்தி விளக்கம்என்றுஒருநூல்செய்யவேணும் என்றுகூடக்கேட்டுக் கொண்டார்கள்.

அவர்களாலே கேட்டுக்கொள்ளப்பட்ட இந்த இரண்டும்,லோகோபகாரமா இருக்கையால், யாமும் அதுகளுக்கு உடன்பட்டோம்.

அதற்காக,கற்றவர்களுக்கே செம்பாதிபொருள்விளங்காது என்றுலோகவதந்தி ஆயிருக்கிற, இந்த ஸ்ரீமத்கம்பராமாயணத்திலே, மேற்படிசந்தியையும் விகாரத்தையும் தகுந்தபடி பிறிவினைசெய்தால், அதுமுழுதும் பொருள்விளங்கும்என்றுஎண்ணி,முதலிலேஅயோத்தியாகாண்டத்தில் அறுபதாம்பக்கம்தொடங்கி, தேர்ந்தஒருநல்ல கல்விமான் ஆனவர், ஒருவரிடத்தில் தாம்கற்றபோதும், தாமேகற்கிறபோதும்,தாம் ஒருவனுக்கு கற்பிக்கும்போதும், தமக்கும் கேட்போர்க்கும் பொருள்விளங்கி, இவர் கற்றவர்தாம் என்று கேட்டோர் தம்மைமதிக்கும்படியாய், எப்படி சந்தியையும் விகாரத்தையும் விலக்கி, பதங்களை பிரித்து படிப்பாரோ, அப்படியே பிரித்து அச்சிற்பதிப்பிக்கப் பட்டிருக்கிறது. இதினாலே ஆரணியகாண்டம் பாதிவரைக்கும் போயும், இதுவரைக்கும் யாதொரு திருவிருத்தமும் எமக்குஅர்த்தம் ஆகாததுஇல்லை, இப்படி செய்யாததற்குமுன்னே, எமக்குஇதில் இருந்தமயக்கமும் இப்படிசெய்தபின்பு அல்லவோதீர்ந்தது. உங்களுக்கும் இப்படியே அநுபவம் ஆகல் ஆம். ஊன்றிப்பார்த்தால் இந்த விளம்பரத்தினாலே கூட அநுபவம் காணல் ஆம், எப்படி என்றால், இதிலே இருக்கிற சொற்களை, வேண்டும் இடங்களிலே சந்தி விகாரங்களை வைத்துக்கொண்டு, வேண்டா இடங்களிலே அதுகளை விலக்கி, எழுதியபடியால், இதைவாசிக்கிற தற்கும், வாசித்தபின் பொருள் அறிகிற தற்கும் அதி சுலபம் ஆயிருக்கிறதால், இதைக்கண்டுஅறியுங்களேன்.

இனி சந்தியாவது விகாரமாவது, பயன் நோக்கி. இன்னஇடத்திலே வேண்டும், பயன் இல்லாமையால் இன்ன இடத்திலேவேண்டாம், என்று ஓர்ந்து உணராமல், சந்தியையும் விகாரத்தையும்எங்கெங்கும்கொண்டு, நமது முன்னோர்கள் கருதிய லோகோபகாரத்தை கெடுக்கும் சந்தி விகார அபிமானிகள் ஆகியஇளங்கல்விமான்களுக்கு, இச்சந்திவிகாரங்களின் விவரங்களையும், இதுகளால்வரும் பயன்களையும் இலக்கணங்களாலேயும் இலக்கியங்களாலேயும் இதுகள் பயன் உள்ளசந்தியும் விகாரமும் இதுகள் பயன் இல்லாத சந்தியும் விகாரமும் என்று எடுத்துக் காட்டுதற்காக, மேலேசொல்லிய புத்திமான்கள்கேட்டுக்கொண்டபடி, சந்தி விளக்கம் என்று ஒரு நூலும் செய்யப்படும். அதிலே இந்த சந்தியையும் விகாரத்தையும் பிறிவினை செய்தற்கு வயனங்களும், அதினாலே வரும் பயன்களும், அப்படி பிறிவினை செய்யாவிட்டால் வரும் நஷ்டங்களும்,பிறிவினைசெய்து காட்டச்சொல்லி கேட்டுக்கொண்டவர்கள்பெயர்களும்,விளங்கும்.



நன்றாக. குருவாழ்க குருவே துணை.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

ஸ்ரீமத்கம்பராமாயணம்

இரண்டாவது

அயோத்தியாகாண்டம்,

முதலாவதுமந்திரப்படலம்.

காப்பு.

வானின்றிழிந்துவரம்பிகந்தமாபூதத்தின்வைப்பெங்கும் - - . *
ஊனுமுயிருமுணர்வும்போலுள்ளும்புறத்துமுளனென்ப - - - *
கூனுஞ்சிறியகோத்தாயுங்கொடுமையிழைப்பக்கோறுறந்து - - *
கானுங்கடலுங்கடந்திமையோரிடுக்கண்காத்தகழல்வேந்தை. - (க) *

வேறு.

மண்ணுறுமுரசினமழையினார்ப்புற
பண்ணுறுபடர்சினப்பருமயானையான்
கண்ணுறுகவரியின்கற்றைசுற்றுற
எண்ணுறுசூழ்ச்சியினிருக்கையெய்தினான். (உ)

புக்கபின்னிருபரும்பொருவில்சுற்றமும்
பக்கமும்பெயர்கெனப்பரிவினீக்கினான்
ஒக்கநின்றுலகளித்தியோகினெய்திய
சக்கரத்தவனெனத்தமியனாயினான். (ங)

சந்திரற்குவமைசெய்தரளவெண்குடை
அந்தரத்தளவுநின்றளிக்குமாணையான்
இந்திரற்கிமையவர்குருவையேய்ந்ததன்
மந்திரக்கிழவரைவருகவென்றேவினான். (ச)

பூவருபொலன்கழற்பொருவின்மன்னவன்
காவலினணையின்கடவுளாமெனத்
தேவருமுனிவருமுணருந்தேவர்கள்
மூவரினல்வராமுனிவர்தெய்தினன். (ரு)

குலமுதற்றொன்மையுங்கலையின்குப்பையும்
பலமுதற்கேள்வியும்பயனுமெய்தினர்
நலமுதனலியினும்நடுவுநோக்குவார்
சலமுதலறுத்தருந்தருமந்தாங்கினர். (சா)

வேறு.

உற்றதுகொண்டுமேல்வந்துறுபொருளுணருங்கோளார்
மற்றதுவினையின்வந்ததாயினுமாற்றலாற்றும்
பெற்றியர்பிறப்பின்மேன்மைப்பெரியவரரியநூலும்
கற்றவர்மானநோக்கிற்கவரிமாவனையநீரார். (எ)

காலமுமிடனுமேற்றகருவியுந்தெரியக்கற்ற
நூலுறநோக்கித்தெய்வநுணித்தறங்குணித்தமேலோர்
சீலமும்புகழுக்குவேண்டுஞ் செய்கையுந்தெரிந்துகொண்டு
பால்வருமுறுதியாவுந் தலைவற்குப்பயக்குநீரார். (அ)

தம்முயிர்க்குறுதியெண்ணார் தலைமகன்வெகுண்டபோதும்
வெம்மையைத்தாங்கிநீதி விடாதுநின்றுரைக்கும்வீரர்
செம்மையிற்றிறம்பல்செல்லாத் தேற்றத்தார்தெரியுங்காலம்
மும்மையுமுணரவல்லா ரொருமையேமொழியுநீரார். (கூ)

வேறு.

நல்லவுந்தீயவுநாடிநாயகற்
கெல்லையின்மருத்துவனியல்பினென்னுவார்
ஒல்லைவந்துறுவனவுற்றபெற்றியின்
தொல்லைநல்வினையெனவுதவுஞ்சூழ்ச்சியார். (ய)

அறுபதினாயிரரொன்னுமாண்டகைக்
குறுதியிலொன்றிவற்குணர்வென்றுன்னலாம்
பெறலருஞ்சூழ்ச்சியர்திருவின்பெட்பினர்
மறிதிரைக்கடலெனவந்துசுற்றினர். (கக)

முறைமையினெய்தினர்முந்தியந்தமில்
அறிவனைவணங்கித்தம்மரசைக்கைதொழு
திறையிடைவரன்முறையேறியேற்றசொற்
றுறையறிபெருமையானருளுநர்சூடினர். (கஉ)

அன்னவாருளமைந்திருந்தவாண்டையில்
மன்னனுமவர்முகம்மரபினோக்கினன்
உன்னியதரும்பெறலுறுதியொன்றுள
தென்னுணர்வினையநீரினிதுகேட்கென. (௧௩)

வெய்யவன்குலமுதல்வேந்தர்மேலவர்
செய்கையினொருமுறைதிறம்பலின்றியே
வையம்யானுண்டவாண்டுங்கள்மாட்சியால்
ஐயமிலறுபதினாயிரம்மரோ. (௧௪)

கன்னியர்க்கமைவருங்கற்பின்மாநிலம்
தன்னையித்தகைதரத்தருமங்கைதர
மன்னுயிர்க்குறுவதேசெய்துவைகினேன்
என்னுயிர்க்குறுவதுஞ்செய்யவெண்ணினேன். (௧௫)

விரும்பியமூப்பெனும்வீடுகண்டயான்
இரும்பியலனந்தனுமிசைந்தயானையும்
பெரும்பெயர்க்கிரிகளும்பெயரத்தாங்கிய
அரும்பொறையினிச்சிறிதாற்றவாற்றலேன். (௧௬)

நங்குலக்குரவர்கணவையினீங்கினர்
தங்குலப்புதல்வரோதரணிதாங்கப்போய்
வெங்குலப்புலன்கெடவீடுநண்ணினர்
எங்குலப்புறுவதொன்றெண்ணிநோக்குகேன். (௧௭)

வெள்ளநீருலகினில்விண்ணினகரில்
தள்ளரும்பகையெலாந்தவிர்த்துநின்றயான்
கள்ளரிற்கரந்துறைகாமமாதியா
உள்ளுறைபகைஞருக்கொதுங்கிவாழ்வெனோ. (௧௮)

பஞ்சிமென்றளிரடிப்பாவைகோல்கொள
வெஞ்சினத்தவுணர்தேர்பத்தும்வென்றுளேற்
கெஞ்சலில்மனமெனுமிழுதையேறிய
அஞ்சுதேர்வெல்லுமீதருமையாவதோ. (௧௯)

ஒட்டினபகைஞர்வந்துருத்தபோரிடைப்
பட்டவரல்லரோற்பரமஞானம்போய்த்
தொட்டவரல்லரோற்செல்வமீண்டெனை
விட்டவரல்லரோல்யாவர்வீடுளோர். (௨௰)

இறப்பெனுமெய்மையையிம்மையாவர்க்கும்
மறப்பெனுமதனின்மேற்கேடுமற்றுண்டோ
துறப்பெனுந்தெப்பமேதுணைசெயாவிடில்
பிறப்பெனும்பெருங்கடல்பிழைக்கலாகுமோ (உக)

அருஞ்சிறப்பமைவருந்துறவுமவ்வழி
தெரிஞ்சுறவெனமிகுந்தெளிவுமாய்வரும்
பெருஞ்சிறகுளவெனிற்பிறவியென்னுமிவ்
இருஞ்சிறைகடத்தலினினியதியாவதே. (உஉ)

இனியதுபோலுமிவ்வரசையெண்ணுமோ
துனிவருநலனெனத்தொடர்ந்துதோற்கலா
நனிவரும்பெரும்பகைநவையினீங்கியத்
தனியரசாட்சியிற்றாழுமுள்ளமே. (உ௩)

உம்மையானுடைமையினுலகம்யாவையும்
செம்மையினோம்பிநல்லறமுஞ்செய்தனென்
இம்மையினுதவிநல்லிசைநடாயநீர்
அம்மையுமுதவுதற்கமையவேண்டுமால். (உ௪)

இழைத்ததீவினையையுங்கடக்கவெண்ணுதல்
தழைத்தபேரருளுடைத்தவத்தினாகுமேல்
குழைத்ததோரமுதுடைக்கோரநீக்கிவே
றழைத்ததீவிடத்தினையருந்தலாகுமோ. (உ௫)

கச்சையங்கடகரிக்கழுத்தில்கண்ணுற
பிச்சமுங்கவிகையும்பெய்யுமின்னிழல்
நிச்சயமன்றெனினெடிதுநாளாண்ட
ஐச்சிலைநுகருவதின்பமாகுமோ, (உ௬)

மைந்தனையின்மையில்வரம்பில்காலமும்
நொந்தனனிராமனென்னோவைநீக்குவான்
வந்தனனினியவன்வருந்தயான்பிழைத்
துய்ந்தனன்போவதோருறுதியெண்ணினேன். (உ௭)

இறந்திலன்செருக்களத்திராமன்றாதைதான்
அறந்தலைநிரம்பமூப்படைந்தபின்னரும்
துறந்திலனென்னவோர்சொல்லுண்டானபின்
பிறந்திலனென்பதிற்பிறிதுண்டாகுமோ, (உ௮)

பெருமகனென்வயிற்பிறக்கச்சீதையாம்
திருமகள்மணவினைதெரியக்கண்டயான்
அருமகள்நிறைகுணத்தவனிமாதெனும்
ஒருமகள்மணமுங்கண்டுவப்பதாயினேன். (௨௯)

நிவப்புறுநிலனெனுநிரம்புநங்கையும்
செவப்புறுமலர்மிசைச் சிறந்தசெல்வியும்
உவப்புறுகணவனை யுயிரினெய்திய
தவப்பயன்தாழ்ப்பதுதருமமன்றரோ. (௩௰)

ஆதலாலிராமனுக் கரசைநல்கியிப்
பேதைமைதாய்வரும் பிறப்பைநீக்குவான்
மாதவந்தொடங்கிய வனத்தைநண்ணுவேற்
கியாதுநுங்கருத்தென வினையகூறினான். (௩௧)

வேறு.

திரண்டதோளினனிப்படிச்செப்பலுஞ்சிந்தை
புரண்டுமீதிடப்பொங்கியவுவகையராங்கே
வெருண்டுமன்னவன்பிரிவெனும்விம்முறுநிலையால்
இரண்டுகன்றினுக்கிரங்குமோராவெனவிருந்தார். (௩௨)

அன்னராயினுமரசனுக்கதுவலதுறுதி
பின்னரில்லெனக்கருதியும்பெருநிலவளாப்பில்
மன்னுமன்னுயிர்க்கிராமனின்மன்னவரில்லை
என்னவுன்னியும்விதியதுவலியினுமிசைந்தார். (௩௩)

இருந்தமந்திரக்கிழவரதெண்ணமுந்தன்பால்
பரிந்தசிந்தையம்மன்னவன்கருதியபயனும்
பொருந்துமன்னுயிர்க்குறுதியும்பொதுவுறநோக்கி
தெரிந்துநான்மறைத்திசைமுகன்றிருமகன்செப்பும். (௩௪)

நிருபநின்குலமன்னவர்நேமிபண்டுருட்டி
பெருமையெய்தினர்யாவரோயிராமனைப்பெற்றார்
கருமமேயிதுகற்றுணர்ந்தோய்க்கினிக்கடவ
தருமமும்மிதுதக்கதேநினைத்தனைதகவோய். (௩௫)

புண்ணியந்தொடர்வேள்விகள்யாவையும்புரிந்த
அண்ணலேயினியருந்தவமியற்றவுமடுக்கும்
வண்ணமேகலைநிலமகள்மற்றுனைப்பிரிந்து
கண்ணிழந்திலளெனச்செயும்நீதந்தகழலோன். (௩௬)

புறத்துநாமொருபொருளினிப்புகல்கின்றதெவனோ
அறத்தின்மூர்த்திவந்தவதரித்தானென்பதல்லால்
பிறத்தயாவையுங்காத்தவைபின்னுறத்துடைக்கும்
திறத்துமூவருந்திருத்தியதிருத்துமத்திறலோன் (௩௭)

பொன்னுயிர்த்தபூமடந்தையும்புவியெனுந்திருவும்
இன்னுயிர்த்துணையிவனெனநினைக்கின்றவிராமன்
தன்னுயிர்க்கென்கைபுல்லிதுநற்பயந்தெடுத்த
உன்னுயிர்க்கெனநல்லன்மன்னுயிர்க்கெலாமுரவோய். (௩௮)

வாய்மென்னினிப்பகர்வதுவைகலுமனையான்
பேரினல்வருமிடையுறுபெயர்கின்றபயத்தால்
வீரநின்குலமைந்தனைவேதியர்முதலோர்
யாரும்யாஞ்செய்தநல்லறப்பயனெனவிருப்பார். (௩௯)

மண்ணினும்நல்லள்மலர்மகள்கலைமகள்கலையூர்
பெண்ணினும்நல்லள்பெரும்புகழ்ச்சனகியோநல்லள்
கண்ணினும்நல்லன்கற்றவர்கற்றிலாதவரும்
முண்ணுநீரினுமுயிரினுமவனையேயுவப்பார். (௪௰)

மனிதர்வானவர்மற்றுளாரறங்கள்காத்தளிப்பார்
இனியிம்மன்னுயிர்க்கிராமனிற்சிறந்தவரில்லை
அனையதாதலினரசநிற்குறுபொருளறியில்
புனிதமாதவமல்லதொன்றில்லெனப்புகன்றான். (௪௧)

மற்றவன்சொன்னவாசகங்கேட்டலுமகனை
பெற்றவன்றினும்பிஞ்ஞகன்பிடித்தவப்பெருவில்
இற்றவன்றினுமெறிமழுவாளவனிழுக்கம்
உற்றவன்றினும்பெரியதோருவகையனானான். (௪௨)

அனையதாகியவுவகையன்கண்கணீரரும்ப
முனிவன்மாமலர்ப்பாதங்கள்முறைமையினிறைஞ்சி
இனியசொல்லினையெம்பெருமானருள்விழியின்
தனியனானிலந்தாங்கியதவற்கிதுதகாதோ. (௪௩)

எந்தைநீயுவந்திதஞ்சொலவெங்குலத்தரசர்
அந்தமில்லரும்பெரும்புகழவனியினிறுவி
முந்துவேள்வியுமுடித்துத்தம்மிருவினைமுடித்தார்
வந்ததவ்வருளெனக்குமென்றுணாசெய்துமகிழ்ந்தான். (௪௪)

பழுதில்மாதவன்பின்னொன்றும்பணித்திலனிருந்தான்
முழுதுமெண்ணுறுமந்திரக்கிழவர்தம்முகத்தால்
எழுதிநீட்டியவிங்கிதமிறைமகற்கேதித்
தொழுதகையினன்சுமந்திரன்முன்னின்றுசொல்லும். (சரு)

உறத்தகும்மரசிராமற்கென்றுவக்கின்றமனத்தை
துறத்திநீயெனுஞ்சொற்சுடும்நின்குலத்தொல்லோர்
மறத்தல்செய்கிலாத்தருமத்தைமறப்பதும்வழக்கன்
றறத்தினூஉங்கினிக்கொடிதெனலாவதொன்றியாதே. (சசு)

புரைசைமாக்கரிநிருபர்க்கும்புரத்துறைவோர்க்கும்
உரைசெய்மந்திரக்கிழவர்க்குமுனிவர்க்குமுள்ளம்
முரைசமார்ப்பநின்முதன்மணிப்புதல்வனைமுறையால்
அரைசனாக்கிப்பின்னப்புறத்தடுத்ததுபுரிவாய். (சஎ)

என்றவாசகஞ்சுமந்திரனியம்பலுமிறைவன்
நன்றுசொல்லினைநம்பியைநளிர்முடிசூட்டி
நின்றுநின்றதுசெய்வதுவினைவினினீயே
சென்றுகொண்டனைதிருமகள்கொழுநனையென்றான். (சஅ)

அலங்கல்மன்னனையடிதொழுதவன்மனமனையான்
விலங்கல்மாளிகைவீதியில்வினையொடுசென்றான்
தலங்கள்யாவையும்பெற்றனன்றானெனத்தளிர்ப்பான்
பொலன்கொடேரொடுமிராகவன்றிருமனைபுக்கான். (சகூ)

பெண்ணினின்னமுதன்னவள்தன்னொடும்பிரியா
வண்ணவெஞ்சிலைக்குரிசிலுமருங்கினிதிருப்ப
அண்ணலாண்டிருந்தானழகருநறவெனத்தன்
கண்ணுமுள்ளமும்வண்டெனக்களிப்புறக்கண்டான். (ரு0)

கண்டுகைதொழுதையவிக்கடவிடைக்கிழவோன்
உண்டோர்காரியம்வருகெனவுரைத்தலனெனலும்
புண்டரீகக்கட்புரவலன்பொருக்கெனவெழுந்தோர்
கொண்டல்போலவன்கொடிநெடுந்தேர்மிசைக்கொண்டான். (ருக)

முறையின்மொய்முகிலெனமுரசார்த்திடமடவார்
இறைகழன்றசங்கார்த்திடவிமையவரெங்கள்
குறைமுடிந்ததென்றார்த்திடக்குஞ்சியைச்சூழ்ந்த
நறையலங்கல்வண்டார்த்திடத்தேர்மிசைநடந்தான். (ருஉ)

பணைநிரைந்தனபாட்டொலிநிரைந்தனவனங்கள்
கணைநிரைந்தனநாணொலிகறங்கினநிறைப்பேர்
அணைநிரைந்தனவறிவெனும்பெரும்புனலனையார்
பிணைநிரைந்தெனப்பரந்தனர்நாணமும்பிரிந்தார். (௫௩)

நீளெழுத்தொடர்வாயிலிற்குழையொடுநெகிழ்ந்த
ஆளகத்தினொடரமியத்தலத்தினுமலர்ந்த
வாளரத்தவேல்வண்டொடுகெண்டைகள்மயங்கச்
சாளரத்தினும்பூத்தனதாமரைமலர்கள். (௫௪)

மண்டலந்தருமதிகெழுமழைமுகிலனைய
அண்டர்நாயகன்வரைபுரையகலத்துளலங்கல்
தொண்டைவாய்ச்சியர்நிறையொடுநாணொடுந்தொடர்ந்த
கெண்டையும்முளகிளைபயில்வண்டொடுங்கிடந்த. (௫௫)

சரிந்தபூவுளமழையொடுகலையுரத்தாழ்வ
பரிந்தபூவுளபனிக்கடைமுத்தினம்படைப்ப
எரிந்தபூவுளவிளமுலையிழையிடைநுழைய
விரிந்தபூவுளமீனுடைவானின்றும்வீழ்வ. (௫௬)

வள்ளுறைகழித்தொளிர்வனவாணிமிர்மதியம்
தள்ளுலச்சுமந்தெழுதருந்தமனியக்கொம்பில்
புள்ளிநுண்பனிபொடிப்பனபொன்னிடைப்பொதிந்த
எள்ளுடைப்பொரிவிரவினவுளசிலவிளநீர். (௫௭)

ஆயதவ்வழிநிகழ்தரவாடவரெல்லாம்
தாயைமுன்னியகன்றெனநின்றுயிர்தளிர்ப்ப
தூயதம்பியுந்தானுமச்சுமந்திரன்றேர்மேல்
போயகங்குளிர்புரவலனிருந்துழிபுக்கான். (௫௮)

மாதவன்றனைவரன்முறைவணங்கிவாளுழவன்
பாதபங்கயம்பணிந்தனன்பணிதலுமனையான்
காதல்பொங்கிடக்கண்பனியுகுத்திடக்கனிவாய்ச்
சீதைகொண்கனைத்திருவுறைமார்பகஞ்சேர்த்தான். (௫௯)

நலங்கொள்மைந்தனைத்தழுவினனென்பதென்னளிநீர்
நிலங்கடாங்குறுநிலையினைநிலையிடநினைந்தான்
இலங்கலன்னதிண்டோளையுமெய்த்திருவிருக்கும்
அலங்கல்மார்பையுந்தனதுதோண்மார்புகொண்டளந்தான். (௬௰)

ஆண்டுதன்மருங்கிரீஇயுவந்தன்புறநோக்கி
பூண்டபோர்மழுவுடையவனெடும்புகழ்குறுக
நீண்டதோளையநிற்பயந்தெடுத்தயானின்னே
வேண்டியெய்திடவிரைவதொன்றுளதெனவிளம்பும். (௯௧)

ஐயசாலவுமலசினனரும்பெருமூப்பும்
வெய்யதாயதுவியவிடப்பெரும்பரம்விசித்த
தொய்யன்மாநிலச்சுமையுறுசிறைதுறந்தினியான்
உய்யலாவதோர்நெறிபுகவுதவிடவேண்டும். (௯௨)

உருமைமைந்தனைப்பெறுகின்றதுறுதுயர்நீங்கி
இருமையும்பெறற்கென்பதுபெரியவரியற்கை
தருமமன்னநிற்றந்தயான்றளர்வதுதகவோ
கருமமென்வயிற்செய்யிலென்கட்டுரைகோடி. (௯௩)

மைந்தநங்குலமரபினின்மணிமுடிவேந்தர்
தந்தமக்களேகண்டமுறைநெடுநிலந்தாங்க
ஐந்தொடாகியமுப்பகைமருங்கறவகற்றி
உய்ந்துபோயினரூழிநின்றெண்ணினுமுலவார். (௯௪)

முன்னையூழ்வினைப்பயத்தினுமுற்றியவேள்வி
பின்னையெய்தியபலத்தினுமரிதினிற்பெற்றேன்
இன்னம்யானிந்தவரசியலிடும்பையனென்றால்
நின்னையீன்றுளபயத்தினினிரம்புவதியாதோ. (௯௫)

ஒருத்தலைப்பரத்தொருத்தலைப்பங்குவினூர்தி
எருத்தினீங்குநின்றியல்வரக்குழைந்திடருழக்கும்
வருத்தம்நீங்கியவ்வரம்பறுதிருவினைமருவும்
அருத்தியுண்டெனக்கையவிதருளிடவேண்டும். (௯௬)

ஆளும்நன்னெறிக்கமைவருமமைவினனாகி
நாளும்நங்குலநாயகன்நறைவிரிகமலத்
தாளினல்கியகங்கையைத்தந்துதந்தையரை
மீள்வினின்னுலகேற்றினனொருமகன்மேனாள். (௯௭)

மன்னரானவரல்லர்மேல்வானவர்க்கரசாம்
பொன்னின்வார்கழற்புரந்தரன்போலியரல்லர்
பின்னுமாதவந்தொடங்கினோன்பிழைத்தவர்பிறரார்
சொன்மறுமகற்பெற்றவருந்துயர்துறந்தார். (௯௮)

அனையதாதலினருந்துயர்ப்பெரும்பரமரசன்
நினையினென்வயின்வைத்தனனெனக்கொளாவேண்டாம்
புனையுமாமுடிபுனைந்திந்தநல்லறம்புரக்க
நினையல்வேண்டும்யானின்வயிற்பெறுவதீதென்றான். (௬௯)

தாதையப்பரிசுரைசெயத்தாமரைக்கண்ணன்
காதலுற்றிலனிகழ்ந்திலன்கடனிதென்றுணர்ந்தும்
யாதுகொற்றவனேவியததுசெயலன்றோ
நீதியெற்கெனநினைந்துமப்பணிதலைநின்றான். (௭௰)

குருசில்சிந்தையைமனக்கொண்டகொற்றவெண்குடையான்
தருதியிவ்வரமெனச்சொலியுயிருறத்தழுவி
சுருதியன்னதன்மந்திரச்சுற்றமுஞ்சுற்ற
பொருவில்மேருவும்பொருவருங்கோயில்போய்ப்புக்கான். (௭௧)

இவந்தவந்தணர்நெடுந்தகைமன்னவர்நகரத்
துவந்தமைந்தர்கள்மடந்தையருழையர்பின்றொடர
சுமந்திரன்றடந்தேர்மிசைச்சுந்தரத்திரடோள்
அமைந்தமைந்தனுந்தன்னெடுங்கோயில்சென்றடைந்தான். (௭௨)

வென்றிவேந்தனைவருகவென்றுவணம்விற்றிருந்து
பொன்றிணிந்ததோட்டரும்பெறலிலச்சினைபோக்கி
குன்றுசிந்திரநவிர்முடிகவித்தற்குநல்வீர்
சென்றுவேண்டுவவரன்முறையமைக்கெனச்செப்ப. (௭௩)

உரியமாதவனுள்ளிதென்றுரைத்தனன்விரைந்தோர்
பொருவில்தேர்மிசையந்தணர்குழாத்தொடும்போக
நிருபர்கேண்மின்களிராமற்குநெறிமுறைமையினால்
திருவும்பூமியுஞ்சிந்தையிற்சிறந்தனவென்றான். (௭௪)

இறைவன்சொல்லெனுமின்னறவருந்தினர்யாரும்
முறையினின்றிலர்முகந்துறுகளியிடைமூழ்கி
நிறையுநெஞ்சிடைவுவகைபோய்மயிர்வழிநிமிர
உறையும்விண்ணகமுடலொடுமெய்தினரொத்தார். (௭௫)

ஒத்தசிந்தையருவகையரொருவர்க்கங்கொருவர்
இத்தமக்குற்றவரசெனத்தழைக்கின்றமனத்தர்
முத்தவெண்குடைமன்னனைமுறைமுறைதொழுதார்
அத்தநன்றெனவன்பினோடறிவிப்பதானார். (௭௬)

வேறு.

மூவெழுமுறைமையெங்குலங்கள்முற்றுற
பூவெழுமழுவினர்பொருதுபோக்கிய
சேவகன்சேவகஞ்செகுத்தசேவகற்
காவலிவ்வுலகமீதறனென்றாரரோ. (எஎ)

வேறெலாமன்னரும்விரும்பியின்னது
கூறினாரதுமனங்கொண்டகொற்றவன்
ஊறினானுவகையையொளிக்குஞ்சிந்தையான்
மாறுமோராளவைசால்வாய்மைகூறினான். (எஅ)

மகவையினன்பினான்மயங்கியானிது
புகலநீர்புகன்றவிப்பொம்மல்வாசகம்
உகவையின்மொழிந்ததோவுள்ளநோக்கியோ
தகவெனநினைந்ததோதன்மையென்னென்றான். (எகூ)

இவ்வகையுரைசெயவிருந்தவேந்தவை
செவ்வியநின்றிருமகற்குத்தேர்ந்துளோர்
அவ்வவர்க்கவ்வவராற்றவாற்றுறும்
எவ்வமிலன்பினையினிதுகேளென. (அ௰)

தானமுந்தருமமுந்தகவுந்தன்மைசேர்
ஞானமும்நல்லவர்ப்பேணுநன்மையும்
மானவவையநின்மகற்குவைகலும்
இனமில்செல்வம்வந்தியைகவென்னவே. (அக)

ஊருணிநிறையவுமுதவுமாடுயர்
பார்கெழுபழுமரம்பழுத்தற்றாகவும்
கார்மழைபொழியவுங்கழனிபாய்நதி
வார்புனல்பெருகவுமறுககின்றார்கள்யார். (அஉ)

பனையவாநெடுங்கரப்பருமயானையாய்
நினையவர்ந்தன்மையைநினைந்தமன்னுயிர்க்
கினையவாறன்பினனிராமனீண்டவற்
கனையவாறன்பினவ்வையுமென்றனர். (அங)

மொழிந்ததுகேட்டலுமொய்த்துநெஞ்சினைப்
பொழிந்தபேருவகையான்பொங்குகாதலான்
கழிந்ததோரிடரினான்களிக்குஞ்சிந்தையான்
வழிந்தகண்ணீரினான்மன்னன்கூறுவான். (அச)

செம்மையிற்றருமத்திற்செயலிற்றீங்கின்பால்
வெம்மையினொழுக்கத்தின்மெய்ம்மைமேவினீர்
என்மகனென்பதென்னெறியினீங்கிவன்
நும்மகன்கையடைநோக்குமீங்கென்றான். (௮௫)

அனைசனைவிடுத்தபின்னணைமன்னவன்
புனைதடநாளொடுபொழுதுபோக்குவான்
உனைதெரிகணிதனையொருங்குகொண்டொரு
வனைபொருமண்டபமருங்குபோயினான். (௮௬)

வேறு.

ஆண்டவன்னிலையாகவறிந்தவர்
பூண்டகாதலர்பூட்டவிழ்கொங்கையர்
நீண்டகூந்தலர்நீழ்கலைதாங்கலர்
ஈண்டவோடினரிட்டிடையிற்றிலர் (௮௭)

ஆடுகின்றனர்பண்ணடையின்றியே
பாடுகின்றனர்பார்த்தவர்க்கேகரம்
சூடுகின்றனர்சொல்லுவதோர்கிலர்
மாடுசென்றனர்மங்கையர்நால்வரே. (௮௮)

கண்டமாதனைக்காதலிநோக்கினள்
கொண்டல்வண்ணனைநல்கியகோசலை
உண்டுபேருவகைப்பொருளன்னது
தொண்டைவாயினிர்சொல்லுமினீண்டென்றாள். (௮௯)

மன்னெடுங்கழல்வந்துவணங்கிட
பன்னெடும்பகல்பாரளிப்பாயென
நின்னெடும்புதல்வன்றனைநேமியான்
தொன்னெடும்முடிசூட்டுகின்றானென்றார். (௯௰)

சிறக்குஞ்செல்வமகற்கெனச்சிந்தையில்
பிறக்கும்பேருவகைக்கடல்பெட்புற
வறக்குமாவடவைக்கனலானதால்
துறக்குமன்னவனென்னுந்துணுக்கமே. (௯௧)

அன்னளாயுமரும்பெறலாரமும்
நன்னிதிக்குவையுநனிநல்கித்தண்
தன்னுகாதற்சுமித்திரையோடும்போய்
மின்னுநேமியன்மேவிடமேவினான். (௯௨)

மேவிமென்மலராள்நிலமாதெனும்
தேவிமாரொடுந்தேவர்கள்யாவர்க்கும்
ஆவியுமறிவும்முதலாயவன்
வாவிமாமலர்ப்பாதம்வணங்கினாள். (௬௩)

என்வயிற்றருமைந்தற்கினியருள்
உன்வயிற்றதென்றுலகியாவையும்
மன்வயிற்றினடக்கியமாயனைத்
தன்வயிற்றினடக்குந்தவத்தினாள். (௬௪)

என்றிறைஞ்சியவ்விந்திரைகேள்வனுக்
கொன்றுநான்மறையோதியபூசனை
நன்றிழைத்தவணல்லதவர்க்கெலாம்
கன்றுடைப்பசுவின்கடனல்கினாள். (௬௫)

பொன்னுமாமணியும்புனைசாந்தமும்
கன்னிமாரொடுகோசினியீட்டமும்
இன்னயாவையுமீய்ந்தனளந்தணர்க்
கன்னதானமுமாடையுநல்கினாள். (௬௬)

நல்கிநாயகனுண்மலர்ப்பாதத்தை
புல்லிப்போற்றிவணங்கிப்புரையிலா
மல்லன்மாளிகைக்கோயில்வலங்கொளா
தொல்லைநோன்புகள் யாவுந்தொடங்கினாள். (௬௭)

௧-வது. மந்திரப்படலமுற்றும். ஆக திருவிருத்தம்-௬௭.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

உ-வது மந்தரைசூழ்ச்சிப்படலம்.

கடிகமிழ்தாரினான்கணிதமாக்களை
முடிவுறநோக்கியோர் முதன்மைகூறிப்பின்
வடிமழுவாளவற்கடந்தமைந்தற்கு
முடிபுனைகடிகைநாள் மொழிமினென்றனன். (௧)

பொருந்துநாளைநின்புதல்வற்கென்றனர்
திருந்தினாரன்னசொற்கேட்டசெய்கழல்
பெருந்திண்மால்யானையான்பிழைப்பில்செய்தவம்
வருந்தினான்வருகென வசிட்டனெய்தினான். (௨)

நல்லியல்மங்கலநாளும்நாளையவ்
வில்லியல்தோளவற் கிண்டுவேண்டுவ
ஒல்லையினியற்றிநல்லுறுதிவாய்மையும்
சொல்லுதிபெரிதெனத் தொழுதுசொல்லினான். (௩)

முனிவனுமுவகையுந் தானுமுந்துவான்
மனுகுலநாயகன்வாயல்முன்னினான்
அனையவன்வரவுகேட் டலங்கல்வீரனும்
இனிதெதிர்கொண்டுதன் னிருக்கையெய்தினான். (௪)

வேறு.

ஒல்கலில்தவத்துத்தமனேதுநூல்
மல்குகேள்வியவள்ளலைநோக்கினான்
புல்குகாதற்புரவலன் போர்வலாய்
நல்கும்நானிலம் நாளைநினக்கென்றான். (௫)

என்றபின்னுமிராமனைநோக்கினான்
ஒன்றுகூறுவதுண்டுறுதிப்பொருள்
நன்றுகேட்டுக்கடைப்பிடிநன்றென
துன்றுதாரவற்சொல்லுதல்மேயினான். (௬)

கரியமாலினுங்கண்ணுதலானினும்
உரியதாமரைமேலுறைவானினும்
விரியும்பூதமொரைந்தினுமெய்யினும்
பெரியரந்தணர் பேணுதியுள்ளத்தால். (௭)

அந்தணாளர்முனியவுமாங்கவர்
சிந்தையாலருள்செய்யவுந்தேவரில்
நொந்துளாரையு நொய்துயர்ந்தாரையும்
மைந்தவெண்ணவரம்புமுண்டாங்கொலோ, (௮)

அனையராதலினையவிவ்வெய்யதீ
வினையினீங்கியமேலவர்தாளினைப்
புனையுஞ்சென்னியையாய்ப்புகழ்ந்தேத்துதி
இனியகூறிநின்றேயினசெய்தியால், (௯)

ஆவதற்குமழிவதற்குமவர்
ஏவலிற்கும்விதியுமென்றாலினி
யாவதெப்பொருளிம்மையுமம்மையும்
தேவரைப்பரவுந்துணைசிர்த்ததே, (௰)

உருளும்நேமியுமொண்கவிகைமும்
மருளில்வாணியும்வல்லவர்மூவர்க்கும்
தெருளும்நல்லறமும்மனச்செம்மையும்
அருளும்நீத்தபின்னாவதுண்டாகுமோ. (௧௧)

சூதுமுந்துறச்சொல்லியமாத்துயர்
நீதிமைந்தநினக்கிலையாயினும்
ஏதமென்பனயாவையுமெய்துதற்
கோதுமூலமவையெனவோர்தியே. (௧௨)

யாரொடும்பகைகொள்ளிலனென்றபின்
போரொடுங்கும்புகழொடுங்காதுதன்
தாரொடுங்கல்செல்லாததுதந்தபின்
வேரொடுங்கெடல்வேண்டலுண்டாகுமோ. (௧௩)

கோளுமைம்பொறியுங்குறையப்பொருள்
நாளுங்கண்டுநடுக்குறுநோன்மையின்
ஆளுமவ்வரசேயரசன்னது
வாளின்மேல்வருமாதவமைந்தனே. (௧௪)

உமைக்குநாதற்குமோங்குபுள்ளூர்திக்கும்
இமைப்பில்நாட்டமொரெட்டுடையானுக்கும்
சமைத்ததோள்வலிதாங்கினராயினும்
அமைச்சர்சொல்வழியாற்றுதலாற்றலே. (௧௫)

என்புதோலுடையார்க்குமிலார்க்குந்தம்
வன்பகைப்புலன்மாசறமாய்ப்பதென்
முன்புபின்பின்றிமூவுலகத்தினும்
அன்பினல்லதோராக்கமுண்டாகுமோ. (௧௬)

வையமன்னுயிராகவம்மன்னுயிர்
உய்யத்தாங்குமுடலன்னமன்னனுக்
கையமின்றியறங்கடவாதருள்
மெய்யினின்றபின்வேள்வியும்வேண்டுமோ. (௧௭)

இனியசொல்லினனீகையனெண்ணினன்
வினையன்றூயன்விழுமியன்வென்றியன்
நினையுநீதிநெறிகடவானெனில்
அனையமன்னற்கழிவுமுண்டாங்கொலோ. (௧௮)

சீலமல்லனநீக்கிச்செம்பொற்றுலைத்
தாலமன்னதனிநிலைதாங்கிய
ஞாலமன்னற்குநல்லவர்நோக்கிய
காலமல்லதுநண்ணுமுண்டாகுமோ. (௧௯)

ஓர்வினல்வினையூற்றத்தினுருளை
பேர்வில்தொல்விதிபெற்றுளதென்றரோ
தீர்விலன்புசெலுத்தலிற்செவ்வியோர்
ஆர்வமன்னவற்காயுதமாவதே. (௨௰)

தூமகேதுபுவிக்கெனத்தோன்றிய
வாமமேகலைமங்கையரால்வரும்
காமமில்லையெனிற்கடுங்கேடெனும்
நாமமில்லைநரகமுமில்லையே. (௨௧)

ஏனைநீதியினியன்வையகப்
போனகற்குவிளம்பிப்புலன்கொளீஇ
ஆனவன்னெடுமாயிரமௌலியான்
தானநண்ணினன்றத்துவநண்ணினான். (௨௨)

நண்ணிநாகணைவள்ளலைநான்மறைப்
புண்ணியப்புனலாட்டிப்புலமையோர்
எண்ணுநல்வினைமுற்றுவித்தேற்றினான்
வெண்ணிறத்ததருப்பைவிரித்தரோ. (௨௩)

வேறு.

ஏற்றிடவாண்டகையினிதிருந்துழி
நூற்றடமார்பனும்நொய்தினெய்தப்போய்
ஆற்றல்சாலரசனுக்கறிவித்தானவன்
சாற்றுகநகரணிசமைக்கவென்றனன். (௨௪)

ஏவினவள்ளுவரிராமனாளையே
பூமகள்கொழுநனாய்ப்புனையுமௌலியைக்
கோநகரணிகெனக்கொட்டும்பேரியத்
தேவருங்களிகொளத்திரிந்துசாற்றினார். (௨௫)

கவியமைகீர்த்தியக்காளைநாளையே
புவியமைமணிமுடிபுனையுமென்றசொல்
செவியமைதுகர்ச்சியவெனினுந்தேவர்தம்
அவியமுதன்னவந்நகருளார்க்கெலாம். (௨௬)

ஆர்த்தனர்களித்தனராடிப்பாடினர்
வேர்த்தனர்தடித்தனர்சிலிர்த்துமெய்ம்மயிர்
போர்த்தனர்மன்னனைப்புகழ்ந்துவாழ்த்தினர்
தூர்த்தனர்நீணிதிசொல்லினர்க்கெலாம். (௨௭)

திணிசுடரிரவியைத்திருத்துமாறுமப்
பணியிடைப்பள்ளியான்பரந்தமார்பிடை
மணியினைவேகடம்வகுக்குமாறும்போல்
அணிநகரணிந்தனரருத்திமாக்களே. (௨௮)

வெள்ளியகரியனசெய்யவேறுள
கொள்ளைவான்கொடிநிரைக்குழாங்கள்தோன்றுவ
கள்ளவிழ்கோதையான்செல்வங்காணிய
புள்ளெலாந்திருநகர்புகுந்தபோன்றவே. (௨௯)

மங்கையர்குறங்கெனவகுத்தவாழைகள்
அங்கவர்கழுத்தெனக்கமுகமார்ந்தன
தங்கொளிமுறுவலிற்றாமநான்றன
கொங்கையைநிகர்த்தனகனககும்பமே. (௩௰)

முதிரொளியுயிர்த்தனமுடுகிக்காலையிற்
கதிரவன்வேறொருகவின்கொண்டானென
மதிதொடநிவந்தனமகரதோரணம்
புதியனவலர்ந்தனபுதவராசியே. (௩௧)

துனியுறுசெம்மணித்தூணம்நீறுதோய்
வனிதையோர்கூறினன்வடிவுகாட்டின
புனைதுகிலுறைதொறும்பொதிந்துதோன்றின
பனிபொதிகதிரெனப்பவளத்தூண்களே. (௩௨)

முத்தினின்முழுநிலவெறிப்பமொய்மணிப்
பத்தியினிளவெயில்பரப்பநீலத்தின்
தொத்தினமிருள்வரத்தூண்டச்சோதிட
வித்தகர்விரித்தநாளொத்தவீதியே. (௩௩)

ஆடன்மான்றேர்க்குழாமவனிகாணிய
வீடெனுமுலகின்வீழ்விமானம்போன்றன
ஓடைமாக்கடகளிறுதையமால்வரை
தேடருங்கதிரொடுந்திரிவபோன்றவே. (௩௪)

வளங்கெழுதிருநகர்வைகும்வைகலும்
பளிங்குடைநெடுஞ்சுவரடுத்தபந்தியில்
கிளர்ந்தெரிசுடர்மணியிருளைக்கீறலால்
வளர்ந்திலபிறந்திலசெக்கர்வானமே. (௩௫)

பூமழைபுனல்மழைபுதுமென்சுண்ணத்தின்
தூமழைதரளத்தின்தோமில்வெண்மழை
தாமிழைநெரிதலிற்றகர்ந்தபொன்மழை
மாமழைநிகர்த்தனமாடவீதியே. (௩௬)

காரொடுதொடர்மதக்களிறுசென்றன
வாரொடுதொடர்கழல்மைந்தராமென
தாரொடுநடந்தனபிடிகள்தாழ்கலைத்
தேரொடுநடக்குமத்தெரிவைமாரினே. (௩௭)

ஏய்ந்தெழுசெல்வமுமழகுமின்பமும்
தேய்ந்திலவனையதுதெரிகிலாமையால்
ஆய்ந்தனர்பெருகவும்அமரரிம்பரில்
போந்தவர்போந்திலமென்னும்புந்தியால். (௩௮)

அங்கரணிவுறுமமலைவானவர்
பொன்னகரியல்பெனப்பொலியுமெல்லையில்
இன்னல்செயிராவணனிழைத்ததீமைபோல்
துன்னருங்கொடுமனக்கூனிதோன்றினாள். (௩௯)

தோன்றியகூனியுந்துடிக்குநெஞ்சினாள்
ஊன்றியவெகுளியாள்உளைக்குமுள்ளத்தாள்
கான்றெரிநயனத்தாள்கதிக்குஞ்சொல்லினாள்
மூன்றுலகினுக்குமோரிடுக்கண்மூட்டுவாள். (௪௰)

தொண்டைவாய்க்கேகயன்தோகைகோயின்மேல்
மண்டினாள்வெகுளியின்மடித்தவாயினாள்
பண்டைநாளிராகவன்பாணிவில்லுமிழ்
உண்டையுண்டதனைத்தன்னுள்ளத்துள்ளுவாள். (௪௧)

நாற்கடற்படுமணிநளினம்பூத்ததோர்
பாற்கடற்படுதிரைப்பவளவல்லியே
போற்கடைக்கண்ணளிபொழியப்பொங்கணை
மேற்கிடந்தாளைவிரைவினெய்தினாள். (௪௨)

எய்தியக்கேகயன்மடந்தையேடவிழ்
நொய்தலர்தாமரைநோற்றநோன்பினால்
செய்தபேருவமைசால்செம்பொற்சீறடி
கைகளிற்றீண்டினாள்காலக்கோளனாள். (௪௩)

தீண்டலுமுணர்ந்தவத்தெய்வக்கற்பினாள்
நீண்டகண்ணனந்தரும்நீங்குகிற்றிலள்
மூண்டெழுபெரும்பழிமுடிக்கும்வெவ்வினை
தூண்டிடக்கட்டுரைசொல்லல்மேயினாள். (௪௪)

அணங்குவாள்விடவராவணுகுமெல்லையும்
குணங்கெடாதொளிவிரிகுளிர்வெண்டிங்கள்போல்
பிணங்குவான்பேரிடர்பிணிக்கநண்ணவும்
உணங்குவாயல்லைநீயுறங்குவாயென்றாள், (௪௫)

வெவ்விடமனையவள்விளம்பவேற்கணாள்
தெவ்வடுசிலைக்கையென்சிறுவர்செவ்வியர்
அவ்வவர்துறைதொறுமறந்திறம்பலர்
எவ்விடரெனக்குவந்தடுப்பதீண்டென்றாள், (௪௬)

பராவரும்புதல்வரைப்பயக்கயாவரும்
உராவருந்துயரைவிட்டுறுதிகாண்பரால்
விராவரும்புவிக்கெலாம்வேதமேயன
இராமனைப்பயந்தவெற்கிடருண்டோவென்றாள், (௪௭)

ஆழ்ந்தபேரன்பினாளனையகூறலும்
சூழ்ந்ததீவினைநிகர்கூனிசொல்லுவாள்
வீழ்ந்ததுநின்னலந்திருவும்வீய்ந்தது
வாழ்ந்தனள்கோசலைமதியினாலென்றாள், (௪௮)

அன்னவளவ்வுரையுரைப்பவாயிழை
மன்னவர்மன்னனேற்கணவன்மைந்தனேல்
பன்னரும்பெரும்புகழ்ப்பரதன்பார்தனில்
என்னிதன்மேலவட்கெய்தும்வாழ்வென்றாள், (௪௯)

ஆடவர்நகையுறவாண்மைமாசுற
தாடகையெனும்பெயர்த்தையலாள்பட
கோடிவரிசிலையிராமன்கோமுடி
சூடுவனாளைவாழ்விதெனச்சொல்லினாள், (௫௰)

மாற்றமஃதுரைசெயமங்கையுள்ளமும்
ஆற்றல்சால்கோசலையறிவுமொத்தவால்
வேற்றுமையுற்றிலள்வீரன்றாதைபுக்
கேற்றவளிருதயத்திருக்கவேகொலாம், (௫௧)

ஆயபேரன்பெனுமளக்கரார்த்தெழ
தேய்விலாமுகமதிவிளங்கித்தேசுற
தூயவளுவகைபோய்மிகச்சுடர்க்கெலாம்
நாயகமனையதோர்மாலைநல்கினாள், (௫௨)

தெழித்தனளார்ப்பினள்சிறுக்கண்டீயுக
விழித்தனள்வைதனள்வெய்துயிர்த்தனள்
அழித்தனளழுதனளம்பொன்மாலையால்
குழித்தனள்நிலத்தையக்கொடியகூனியே, (௫௩)

வேதனைக்கூனிபின்வெகுண்டுநோக்கியப்
பேதையைப்பித்தினிற்பிறந்தசேயோடும்
நீதுயர்படுகநானெடிதுன்மாற்றவள்
தாதியர்க்காட்செயத்தரிக்கிலேனென்றாள், (௫௪)

செவந்தவாய்ச்சீதையுங்கரியசெம்மலும்
நிவந்தவாசனத்தினிதிருப்பநின்மகன்
அவந்தனாய்வெறுநிலத்திருக்கலானபோ
துவந்தவாறென்னிதற்குறுதியாதென்றாள். (௫௫)

மறந்திலள்கோசலையுறுதிமைந்தனும்
சிறந்தநற்றிருவினிற்றிருவுமெய்தினான்
இறந்திலனிருந்தனனென்செய்தாற்றுவான்
பிறந்திலன்பரதனீபெற்றதாதென்றாள், (௫௬)

சரதமிப்புவியெலாந்தம்பியோடுமிவ்
வரதனேகாக்குமேல்வரம்பில்காலமும்
பரதனுமிளவலும்பதியினீங்கிப்போய்
விரதமாதவஞ்செயவிடுதனன்றென்றாள், (௫௭)

பண்ணுறுகடகரிப்பரதன்பார்மகள்
கண்ணுறுகவினராயினிதுகாத்தவம்
மண்ணுறுமுரசுடைமன்னர்மாலையில்
எண்ணுறப்பிறந்திலனிறத்தனன்றென்றாள், (௫௮)

பாக்கியம்புரிந்திலாப்பரதன்றன்னைப்பண்
டாக்கியபொலன்கழலரசனாணையால்
தேக்குயர்கல்லதர்கடிதுசேணிடை
போக்கியபொருளெனக்கின்றுபோந்ததால். (௫௯)

மந்தரைபின்னரும்வகைந்துகூறுவாள்
அந்தரந்தீர்ந்துலகளிக்கும்நீரினால்
தந்தையுங்கொடியன்நற்றாயுந்தீயளால்
எந்தையேபரதனேயென்செய்வாயென்றாள். (௬௦)

அரைசரிற்பிறந்துபின்னரைசரில்வளர்ந்
தரைசரிற்புகுந்துபேரரைசியானநீ
கரைசெயற்கருந்துயர்க்கடலில்வீழ்கின்றாய்
உரைசெயக்கேட்கிலையுணர்தியோவென்றாள். (௬௧)

கல்வியுமிளமையுங்கணக்கிலாற்றலும்
வில்வினையுரிமையுமழகும்வீரமும்
எல்லையில்குணங்களும்பரதற்கேயது
புல்லிடையுகுத்தமுதேயும்போலென்றாள். (௬௨)

வேறு.

வாய்கயப்புறமந்தரைவழங்கியவெஞ்சொல்
காய்கனற்றலைநெய்சொரிந்தெனக்கதங்கன்ற
கேகையர்க்கிறைதிருமகள்கிளரிளவரிகள்
தோய்கயற்கண்கள்செவப்புறநோக்கினள்சொல்லும். (௬௩)

வெயின்முறைக்குலக்கதிரவன்முதலியமேலோர்
உயிர்முதற்பொருடிறம்பினுமுறைதிறம்பாதோர்
மயின்முறைக்குலத்துரிமையைமனுமுதல்மரபை
செயிருறப்புலச்சிந்தையாலென்சொனாய்தீயோய். (௬௪)

எனக்குநல்லையுமல்லைநீயென்மகன்பரதன்
தனக்குநல்லையுமல்லையத்தருமமேநோக்கில்
உனக்குநல்லையுமல்லைவந்தூழ்வினைதூண்ட
மனக்குநல்லனசொல்லினைமதியிலாமனத்தோய். (௬௫)

பிறந்திறந்துபோய்ப்பெறுவதுமிழப்பதும்புகழேல்
நிறந்திறம்பினும்நியாயமேதிறம்பினும்நெறியின்
திறந்திறம்பினுஞ்செய்தவந்திறம்பினுஞ்செயிர்தீர்
மறந்திறம்பினும்வரன்முறைதிறம்புதல்வழக்கோ. (௬௬)

போதியென்னெதிர்நின்றுநின்புன்பொறிநாவை
சேதியாதிதுபொறுத்தனென்புறஞ்சிலரறியின்
நீதியல்லவும்நெறிமுறையல்லவும்நினைந்தாய்
ஆதியாதலினறிவிலியடங்குதியென்றாள். (௬௭)

அஞ்சிமந்தரையகன்றிலளம்மொழிகேட்டும்
நஞ்சுதீர்க்கினுந்தீர்கிலாததுநவின்றென்ன
தஞ்சமேயுனக்குறுபொருளுணர்த்துகைதவிரேன்
வஞ்சிபோலியென்றடிமிசைவீழ்ந்துணாவழங்கும். (௬௮)

மூத்தவற்குரித்தரசெனுமுறைமையினுலகம்
காத்தமன்னனிலிளையனன்றேகடல்வண்ணன்
ஏத்துநீண்முடிபுனைவதற்கிசைந்தனனென்றால்
மீத்தருஞ்செல்வம்பரதனைவிலக்குமாறெவனோ. (௬௯)

அறனிரம்பியவருளுடையருந்தவர்க்கேனும்
பெறலருந்திருப்பெற்றபின்சிந்தனைபிறிதாம்
மறநினைந்துதமவலிகிலராயினுமனத்தால்
இறலுறும்படியியற்றுவரிடையறாவின்னல். (௭௰)

புரியுந்தன்மகனரசெனிற்பூதலமெல்லாம்
விரியுஞ்சிந்தனைக்கோசலைக்குடைமையாமென்றால்
பரியுநின்குலப்புதல்வற்குமுனக்குமிப்பார்மேல்
உரியதென்னவளுதவியவொருபொருளல்லால், (௭௧)

தூண்டுமின்னலும்வறுமையுந்தொடர்தரத்துயரால்
ஈண்டுவந்துனையிரந்தவர்க்கிருநிதியவளை
வேண்டியீதியோவெள்குதியோவிம்மனோபால்
மாண்டுபோதியோமறுத்தியோவெங்கணம்வாழ்தி. (௭௨)

சிந்தைசெய்கையிற்றிகைத்தனையினிச்சிலநாளில்
தந்தமின்மையுமெளிமையுநிற்கொண்டுதவிர்க்க
உந்தையுன்னையுன்கிளைஞர்மற்றுன்குலத்துள்ளோர்
வந்துகாண்பதுன்மாற்றவள்செல்வமோமதியாய். (௭௩)

காதலுன்பெருங்கணவனையஞ்சியக்கனிவாய்ச்
சீதைதந்தையுன்றந்தையைத்தெறுகிலனிராமன்
மாதுலனவனுந்தைக்குவாழ்வினியுண்டோ
பேதையுன்றுணையாருளர்பழிபடப்பிறந்தார். (௭௪)

மற்றும்நுந்தைக்குவான்பகைபெரிதுளமறத்தார்
செற்றபோதிவர்சென்றுதவாரெனிற்செருவில்
கொற்றமென்பதொன்றெவ்வழியுண்டதுகூறாய்
சுற்றமுங்கெடச்சுடுதுயர்க்கடல்விழத்துணிந்தாய். (எரு)

கெடுத்தொழிந்தனையுனக்கரும்புதல்வனைக்கிளர்நீர்
உடுத்தபாரகமுடையவனொருமகற்கெனவே
கொடுத்தபேரரசவன்குலக்கோமைந்தர்தமக்கும்
அடுத்ததம்பிக்குமாம்பிறர்க்காகுமோவென்றாள். (எசு)

தீயமந்தரையிவ்வுரைசெப்பலுந்தேவி
தூயசிந்தையுந்திரிந்தது சூழ்ச்சியினிமையோர்
மாயையும்மவர்பெற்றநல்வரவுண்மையாலும்
ஆயவந்தணரியற்றியவருந்தவத்தாலும். (எஎ)

அரக்கர்பாவமுமல்லவரியற்றியவறமும்
துரக்கநல்லருள்துறந்தனள்தூய்மொழிமடமான்
இரக்கமின்மையன்றோவின்றிவ்வுலகங்களிராமன்
பரக்குந்தொல்புகழமுதினைப்பருகுகின்றதுவே. (எஅ)

அனையதன்மையளாகியகைகயனன்னம்
வினைநிரம்பியகூனியைவிரும்பினணோக்கி
எனையுவந்தனையினியையென்மகனுக்குமனையான்
புனையுநீண்முடிபெறும்படிபுகலுதியென்றாள். (எகூ)

மாழையுண்கணியுரைசெயக்கேட்டமந்தரையென்
தோழிவல்லளென்றுணைவல்லளென்றடிதொழுதாள்
தாழுமன்னிலையென்னுரைதலைநிற்பினுலகம்
ஏழுமேழுமுன்னொருமகற்காக்குவெனென்றாள். (அ0)

நாடியொன்றுனக்குரைசெய்வென்நளிர்மணிநகையாய்
தோடிவர்ந்ததார்ச்சம்பரன்தொலைவுற்றவேலை
ஆடல்வென்றியானருளியவரமவையிரண்டும்
கோடியென்றனளுள்ளமுங்கோடியகொடியாள். (அக)

இருவரத்தினிலொன்றினாலரசுகொண்டிராமன்
பெருவனத்திடையேழிருபருவங்கள்பெயர்ந்து
திரிதரச்செய்தியொன்றினால்செழுநிலமெல்லாம்
ஒருவழிப்படுமுன்மகற்குபாயமீதென்றாள். (அ௨)

உரைத்தகூனியையுவந்தனளுயிருறத்தழுவி
நிரைத்தமாமணிபாரமும்நிதியமும்நீட்டி
இரைத்தவேலைசூழுலகமென்னொருமகற்கீந்தாய்
தரைக்குநாயகன்தாயினிநீயெனத்தணியா. (அங)

நன்றுசொல்லினைநம்பியைநளிர்முடிசூட்டல்
துன்றுகானத்திராமனைத்துரத்தலிவ்விரண்டும்
அன்றதாமெனிலரசன்முன்னுருயிர்துறந்து
பொன்றிநீங்குதல்புரிவென்யான்போதிநீயென்றாள். (அச)

கூனிபோனபின்குலமலர்க்குப்பைநின்றிழிந்தாள்
சோனைவார்குழற்கற்றையிற்சொருகியமாலை
வானவீர்மழைநுழைதிருமதிபிதிர்ப்பாள்போல்
தேனவாவுறுவண்டினமலமரச்சிதைத்தாள். (அரு)

விளையுந்தன்புகழ்வல்லியைவேரறுத்தென்ன
இளைகொள்மேகலைசிந்தினள்கிண்கிணியோடும்
வளைதுறந்தனள்மதியினில்மறுத்துடைப்பாள்போல்
அளகவாணுதலரும்பெறற்றிலகமுமழித்தாள். (அசு)

தாவின்மாமணிக்கலன்மற்றுந்தனித்தனிச்சிதறி
நாவினன்குழனிலந்தைவரப்பரப்பி
காவியுண்கண்களஞ்சனங்கான்றிடக்கலுழா
பூவுதிர்ந்ததோர்கொம்பெனப்புவிமிசைப்புரண்டாள் (அஎ)

நவ்விவீழ்ந்தெனநாடகமயில்துயின்றென்ன
கவ்வைகூர்தரச்சனகியாங்கடிகமிழ்கமலத்
தவ்வைநீங்குமென்றயோத்திவந்தடைந்தவம்மடந்தை
தவ்வையாமெனக்கிடந்தனள்கைகயன்றனையை. (அஅ)

உ-வது-மந்தரைசூழ்ச்சிப்படலம்-முற்றும். ஆக-திருவிருத்தம்-[௱அரு]

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

ங-வது. கைகேசிசூழ்வினைப்படலம்.

நாழிகைகங்குலினள்ளடைந்தபின்றை
யாழிசையஞ்சியவஞ்சொலேழைகோயில்
வாழியவென்றயில்மன்னர்துன்னவந்தான்
ஆழிநெடுங்கைமடங்கலாளியன்னான். (க)

வாயலின்மன்னர் வணங்கிநிற்பவந்தாங்
கேயினசெய்யுமடந்தைமாரொடேகி
பாயல்துறந்தபடைத்தடங்கண்மென்றோள்
ஆயிழைதன்னையடைந்தவாழிமன்னன். (௨)

அடைந்தவணோக்கியரந்தையென்கொல்வந்து
தொடர்ந்ததெனத்துயர்கொண்டுசோரும்நெஞ்சன்
மடந்தையைமானையெடுக்குமானையேபோல்
தடங்கைகள்கொண்டுதழீஇயெடுக்கலுற்றான். (௩)

நின்றுதொடர்ந்தநெடுங்கைதம்மைநீக்கி
மின்றுவள்கின்றதுபோலமண்ணில்வீழ்ந்தாள்
ஒன்றுமியம்பலள்நீடுயிர்க்கலுற்றாள்
மன்றலருந்தொடைமன்னனாவியன்னாள். (௪)

அன்னதுகண்டவலங்கன்மன்னனஞ்சி
என்னைநிகழ்ந்ததிஞ்ஞாலமேழில்வாழ்வார்
உன்னையிகழ்ந்தவர்மாள்வருற்றதெல்லாம்
சொன்னபினென்செயல்காண்டிசொல்லிடென்றான். (௫)

வண்டுளர்தாரவன்வாய்மைகேட்டமங்கை
கொண்டநெடுங்கணினாலிகொங்கைகோப்ப
உண்டுகொலாம்அருள்என்கணுன்கணுக்கில்
பண்டையவின்றுபரிந்தளித்தியென்றாள். (௬)

கள்ளவிழ்கோதை கருத்துணர்ந்தமன்னன்
வெள்ளநெடுஞ்சுடர்மின்னின்மின்னநக்கான்
உள்ளமுவந்துளசெய்வெனொன்றும்லோபேன்
வள்ளலிராமனுன்மைந்தனாணையென்றான். (௭)

ஆன்றவனவ்வுரைகூறவையமில்லாள்
தோன்றியபேரவலந்துடைத்ததுண்டேல்
சான்றிமையோர்குலமாகமன்னநீயன்
றேன்றவரங்களிரண்டுமீதியென்றாள். (௮)

வரங்கொளவித்துணைமன்னுமல்லலெய்தி
இரங்கிடவேண்டுவதிலனேகொளென்பால்
பரங்கெடவிப்பொழுதேபகர்ந்திடென்றான்
உரங்கொள்மனத்தவள்வஞ்சமோர்கிலாதான். (௯)

ஏயவரங்களிரண்டி னொன்றினலென்
சேயரசாள்வதுசீதைகேள்வனென்றால்
போய்வனமாள்வதெனப்புகன்றும்நின்றாள்
தீயவையாவையினுஞ்சிறந்ததீயாள். (௰)

நாகமெனுங்கொடியாள்தனாவினீய்ந்த
சோகவிடந்தொடரத்துணுக்கமெய்தா
ஆகமடங்கலும்வெந்தழிந்தாவின்
வேகமடங்கியவேழமென்னவீழ்ந்தான். (௰௧)

பூதலமுற்றதனிற்புரண்டமன்னன்
மாதுயரத்தினையாவர்சொல்லவல்லார்
வேதனைமுற்றிடவெந்துவெந்துகொல்லன்
ஊதுலையிற்கனலென்னவெய்துயிர்த்தான். (௰௨)

உலந்ததுநாவுயிரோடலுற்றதுள்ளம்
புலர்ந்ததுகண்கள்பொடித்தபொங்குசோரி
சலந்தலைமிக்கதுதக்கதென்கொலென்றென்
றலந்தலையுற்றவரும்புலன்களைந்தும். (௰௩)

மேவிநிலத்திலிருக்கும்நிற்கும்வீழும்
ஓவியமொப்பவுயிர்ப்படங்கியோயும்
பாவியையுற்றெதிர்பற்றியெற்றவெண்ணும்
ஆவிபதைப்பவலக்கணெய்துகின்றான். (௰௪)

பெண்ணெனவுற்றபெரும்பழிக்குநாணும்
உண்ணிறைவெப்பொடுயிர்த்துயிர்த்துலாவும்
கண்ணினிரேக்குமயர்க்குமிக்ககைவேல்
புண்ணுழைதைக்கவுழைக்குமானைபோல்வான். (௰௫)

கம்பனெடுங்களியானையன்னமன்னன்
வெம்பிவிழுந்தெழும்விம்மல்கண்டுவெய்துற்
றும்பர்நடுங்கினரூழிபேர்வதொத்த
தம்பனகண்ணவளுள்ளமன்னதேயால். (௰௬)

அஞ்சலளையனதல்லல்கண்டுமுள்ளம்
நஞ்சிலள்நாணிலளென்னநாணமாமால்
வஞ்சனைபண்டுமடந்தைவேடமென்றே
தஞ்செனமாதரையுள்ளலார்கள்தக்கோர். (௰௭)

இந்நிலைநின்றவள்தன்னையெய்தநோக்கி
நெய்ந்நிலைவேலவனீதிசைத்ததுண்டோ
பொய்ந்நிலையோர்கள்புணர்த்தவஞ்சமுண்டோ
அந்நிலைசொல்லெனதாணையுண்மையென்றான். (கஅ)

திசைத்ததுமில்லையெனக்குவந்துதீயோர்
இசைத்ததுமில்லைமுனீந்தவிவ்வரங்கள்
குசைப்பரியோய்தரினின்றுகொள்வெனன்றேல்
வசைத்திறநின்வயின்வைத்துமாள்வெனென்றாள். (ககூ)

இந்தநெடுஞ்சொல்லவ்வேழைகூறுமுன்னே
வெந்தகொடும்புணில்வேலுழைந்ததொப்ப
சிந்தைதிரிந்துதிகைத்தயர்ந்துவீழ்ந்தான்
மைந்தனலாதுயிர்வேறிலாதமன்னன். (உ0)

ஆகொடியாயெனும்ஆவிகாலும்அந்தோ
ஓகொடிதேயறமென்னும்உண்மையொன்றும்
சாகவெனுவெழும்மெய்தளாடிவீழும்
மாகமும்நாகமும்மண்ணும்வென்றவாளான். (உக)

நாரியரில்லையிஞ்ஞாலமேழுமென்ன
கூரியவாள்கொடுகொன்றுநீக்கியானும்
பூரியரெண்ணிடைவீழ்வெனென்றுபொங்கும்
வீரியர்வீரம்விழுங்கிநின்றவேலான். (உஉ)

கையொடுகையைப்புடைக்கும்வாய்கடிக்கும்
பொய்யுரைகுற்றமெனப்புழுங்கிவாடும்
நெய்யெரியுற்றெனநெஞ்சழிந்துசோரும்
வையகமுற்றும்நடந்தவாய்மைமன்னன். (உ௩)

ஒறுப்பினுமந்தரமுண்மையொன்றுமோவா
மறுப்பினுமந்தரமென்றுவாய்மைமன்னன்
பொறுப்பினுமிந்நிலைபோகிலாளைவாளால்
இறுப்பினுமாவதிரப்பதென்றெழுந்தான். (உச)

வேறு.

கோன்மேற்கொண்டுங்குற்றமகற்றிக்குறிகொண்டார்
போன்மேலுற்றதுண்டெனினன்றும்பொறையென்று
கான்மேல்வீழ்ந்தான்கந்துகொல்யானைக்களிமன்னர்
மேன்மேல்வந்துமுந்திவணங்கிமிடைதாளான். (உ௫)

கொள்ளானின்சேயிவ்வரசன்னான்கொண்டாலும்
நள்ளாதிந்நானிலஞாலந்தனிலென்றும்
உள்ளாரெல்லாமோதவுவக்கும்புகழ்கொள்ளாய்
எள்ளாநிற்கும்வன்பழிகொண்டென்பயனென்றான். (உசு)

வானோர்கொள்ளார்மண்ணவருய்யாரினிமற்றென்
ஏனோர்செய்கையாரொடுநீயிவ்வரசாள்வாய்
யானேசொல்லக்கொள்ளவிசைந்தான்முறையாலே
தானேநல்குமுன்மகனுக்குந்தனையென்றான். (உஎ)

கண்ணேவேண்டுமென்னினுமீயக்கடவேனென்
உண்ணேராவிவேண்டினுமின்றேயுனதன்றோ
பெண்ணேவண்மைக்கேகயன்மானேபெறுவாயேல்
மண்ணேகொள்நீமற்றையதொன்றும்மறவென்றான். (உஅ)

வாய்தந்தேனென்றேனினியானேவதுமாற்றேன்
நோய்தந்தென்னைநோவனசெய்துநுவலாதே
தாய்தந்தென்னத்தன்னையிரந்தாற்றழல்வெங்கட்
பேய்தந்தீயும்நீயிதுதந்தாற்பிழையாமோ. (உகூ)

இன்னேயின்னேபன்னியிரந்தானிகல்வேந்தன்
தன்னேரில்லாத்தீயவளுள்ளந்தடுமாறாள்
முன்னேதந்தாயிவ்வரம்நல்காய்முனிவாயேல்
என்னேமன்னாயாருளர்வாய்மைக்கினியென்றாள். (ங0)

அச்சொற்கேளாவாவிபுழுங்காவயர்கின்றான்
பொய்ச்சொற்கேளாவாய்மொழிமன்னன்பொறைகூர
நச்சுத்தீயேபெண்ணுருவன்றோவெனநாணு
முச்சற்றார்போற்பின்னுமிருந்தேமொழிகின்றான். (ஙக)

நின்மகனாள்வானீயினிதாள்வாய்நிலமெல்லாம்
உன்வயமாமேயாளுதிதந்தேனுரைகுன்றேன்
என்மகனென்கண்ணென்னுயிரெல்லாவுயிர்கட்கும்
நன்மகனிந்நாடிறவாமைநயவென்றான். (ஙஉ)

மெய்யேயென்றன்வேரறநூறும்வினைநோக்கி
நையாநின்றேனாவுலர்ந்தேன்நளினம்போல்
கையானின்றென்கண்ணெதிர்நின்றுங்கழிவானேல்
உய்யேனங்காயுன்னடையம்மென்னுயிரென்றான். (ஙங)

இரந்தான்சொல்லும்இன்னுரைகொள்ளாள்முனிவெஞ்சாள்
மரந்தானென்னும்நெஞ்சினள்நாணாள்வசைபாராள்
சரந்தாவில்லாய்தந்தவரத்தைத்தவிர்கென்றல்
உரந்தானல்லால்நல்லறமாமோவுரையென்றாள். (௩௪)

கொடியாளின்னகூறினள்கூறக்குலவேந்தன்
முடிசூடாமற்காத்தலுமொய்கானிடைமெய்யே
நெடியானீங்கநீங்குமென்னாவியினியென்னா
இடையேறுண்டமால்வரைபோல்மண்ணிடைவீழ்ந்தான். (௩௫)

வீழ்ந்தான்வீழாவெந்துயரத்தின்கடல்வெள்ளத்
தாழ்ந்தானாழாவக்கடலுக்கோர்கரைகாணான்
சூழ்ந்தாள்துன்பஞ்சொற்கொடியாள்சொற்கொடுநெஞ்சம்
போழ்ந்தாளுள்ளப்புன்மையைநோக்கிப்புலர்கின்றான். (௩௬)

ஒன்றாநின்றவாருயிரோடும்உயிர்கேள்வர்
பொன்றாமுன்னம்பொன்றினளென்னும்புகழல்லால்
இன்றோர்காறுமெல்வளையார்தம்மிறையோரை
கொன்றாரில்லைகொல்லுதியோநீகொடியாளே. (௩௭)

ஏவம்பாராயினமுறைநோக்காயறமெண்ணாய்
ஆவென்பாயோவல்லைமனத்தாலருள்கொன்றாய்
நாவம்பாலென்னாருயிருண்டாயினிஞாலம்
பாவம்பாராதின்னுயிர்கொள்ளப்படுகின்றாய். (௩௮)

எண்பாலோர்வாநாண்மடமச்சம்இவையேதம்
பூண்பாலாகக்காண்பவர்நல்லார்புகழ்பேணி
நாண்பாலோராநங்கையர்தம்பால்நணுகாரே
ஆண்பாலாரோபெண்பாலாரோடடைவம்மா. (௩௯)

மண்ணாள்கின்றாராகிவலத்தால்மதியால்வைத்
தெண்ணாநின்றார்யாரையுமெல்லாவிகலாலும்
விண்ணோர்காறும்வென்றவெனக்கென்மனைவாழும்
பெண்ணால்வந்ததந்தரமென்னப்பெறுவேனோ. (௪0)

என்றென்றுன்னும்பன்னியிரக்கும்இடர்தோயும்
ஒன்றொன்றொவ்வாஇன்னலுழக்கும்உயிருண்டோ
இன்றின்றென்னும்வண்ணமயங்கும்இடியும்பொன்
குன்றொன்றொன்றோடொன்றியதென்னக்குவிதோளான். (௪௧)

ஆழிப்பொற்றேர்மன்னவனிவ்வாறயர்வெய்தி
பூழிப்பொற்றோள்முற்றுமடங்கப்புரள்போழ்தில்
ஊழிற்பொய்த்தாலென்னுரையின்றேயுயிர்மாய்வென்
பாழிப்பொற்றார்மன்னவவென்றாள்பசையற்றாள். (௪௨)

அரிந்தான்முன்னோர்மன்னவனன்றேயருமேனி
வரிந்தார்வில்லாய்வாய்மைவளர்ப்பான்வரநல்கி
பரிந்தாலென்னாமென்றனள்பாயுங்கனலேபோல்
எரிந்தேறாதேஇன்னுயிர்உண்ணும்எரியன்னாள். (௪௩)

வீய்ந்தாளேயிவ்வெய்யவளென்னாவிடல்வேந்தன்
ஈய்ந்தேனீய்ந்தேனிவ்வரமென்சேய்வனமாள
மாய்ந்தேநான்போய்வானுலகாள்வென்வசைவெள்ளம்
நீய்ந்தாய்நீய்ந்தாய்நின்மகனோடும்நெடிதென்றான். (௪௪)

கூறாமுன்னங்கூறுபடுக்குங்கொலைவாளின்
ஏறாமென்னும்வன்னுயராகத்திடைமூழ்க
தேறானிச்செய்கைமறந்தான்செயல்முற்றி
ஊறாநின்றசிந்தையினாளுந்துயில்வுற்றாள். (௪௫)

வேறு.

சேணுலாவியநாளெலாமுயிரொன்றுபோல்வனசெய்துபின்
ஏணுலாவியதோளினானிடரெய்தவொன்றுமிரங்கிலா
வாணிலாநகைமாதராள்செயல்கண்டுமைந்தர்முனிற்கவும்
நாணினாளெனவேகினாள்நளிர்கங்குலாகியநங்கையே. (௪௬)

எண்டருங்கடைசென்றயாமமியம்புகின்றனவேழையால்
வண்டுதங்கியதொங்கல்மார்பன்மயங்கிவிம்மியவாறெலாம்
கண்டுநெஞ்சுகலங்கியஞ்சிறையானகாமர்துணைக்கரம்
கொண்டுதம்வயிறெற்றியெற்றிவிளிப்பபோன்றனகோழியே. (௪௭)

தோய்கயத்துமரத்துமென்சிறைதுள்ளிமீதெழுபுள்ளெலாம்
தேய்கையொத்தமருங்குன்மாதர்சிலம்பினின்றுசிலம்புவ
கேகயத்தரசன்பயந்தவிடத்தையின்னதொர்கேடுசூழ்
மாகயத்தியையுட்கொதித்துமனத்துவைவனபோன்றவே. (௪௮)

நேசமென்பனபற்றியன்புதிருந்தவின்றுயில்செய்தபின்
வாமமேகலைமங்கையோடுவனத்துள்யாருமறக்கிலா
நாமநம்பிநடக்குமென்றுநடுங்குகின்றமனத்தவாய்
யாமுமிம்மணிறத்துமென்பனபோலெழுந்தனயானையே. (௪௯)

சிரித்தபங்கயமொத்தசெங்கணிராமனைத்திருமாலைஅக்
கரிக்கரம்பொருகைத்தலத்துயர்காப்புநாணணிதற்குமுன்
வரித்ததண்கதிர்முத்ததாகியிம்மண்ணனைத்துநிழற்றமேல்
விரித்தபந்தர்பிரித்ததாமெனமீனொளித்தனவானமே. (௫௰)

நாமவிற்கைஇராமனைத்தொழுநாளடைந்தமக்கெலாம்
காமவிற்குடைக்குன்மாலைகழிந்ததென்பதுகற்பியா
தாமொலித்தனபேரியவ்வொலிசாரன்மாரிதழங்கலா
மாமயிற்குலமென்னமுன்னமலர்ந்தெழுந்தனர்மாதரே. (௫௧)

இனமலர்க்குலம்வாய்விரித்திளவாசமாருதம்வீசமுன்
புனைதுகிற்கலைசோரநெஞ்சுபுழுங்கினார்சிலபூவைமார்
மனமனுக்கம்விடத்தனித்தனிவள்ளலைப்புணர்கள்ளவன்
கனவினுக்கிடையூறடுக்கமயங்கினர்சிலகன்னிமார். (௫௨)

சாயடங்கநலங்கலந்துதயங்குதன்குலநன்மையும்
போயடங்கநெடுங்கொடும்பழிகொண்டரும்புகழ்சிந்துமத்
தீயடங்கியசிந்தையாள்செயல்கண்டுசீரியநங்கைமார்
வாயடங்கினவென்னவந்துகுவிந்தவண்குமுதங்களே. (௫௩)

மெய்யராகநிரம்பவாசைமுருங்குதீயின்முழங்கமேல்
வையராவியமாரன்வாளியம்வானிலாநெடுவாடையும்
மெய்யராவிடவாவிசோரவெதும்புமாதர்தமின்செவி
பையராநுழைகின்றபோன்றனபண்கனிந்தெழுபாடலே. (௫௪)

ஆழியான்முடிசூடுநாளிடையானபாவியிதோரிரா
ஊழியாயினவாறெனாவுயர்போதின்மேலுறைபேதையும்
ஏழுலோகமுமெண்டவஞ்செய்தகண்ணுமெங்கள்மனங்களும்
வாழுநாளிதெனாவெழுந்தனர்மஞ்சுதோய்புயமஞ்சரே. (௫௫)

ஐயுறுஞ்சுடர்மேனியானெழில்காணமூளுமுவாவினால்
கொய்யுறுங்குலமாமலர்க்குவைநின்றெழுந்தனர்கூர்மைகூர்
நெய்யுறுஞ்சுடர்வேனெடுங்கண்முகிழ்த்துநெஞ்சில்நினைப்பொடும்
பொய்யுறங்குமடந்தைமார்குழல்வண்டுபொம்மெனவிம்மவே. (௫௬)

ஆடகந்தருபூண்முயங்கிடவஞ்சியஞ்சியனந்தரால்
வாடகம்பொதிதார்பொருந்திடயாமபேரியிசைத்தலால்
சேடகம்புனைகோதைமங்கையர்சிந்தையின்செறிதிண்மையால்
ஊடல்கண்டவர்கூடல்கண்டிலர்நையுமைந்தர்களுய்யவே. (௫௭)

தழையொலித்தவண்டொலித்தனதாரொலித்தனபேரியாம்
முழவொலித்தனதேரொலித்தனமுத்தொலித்தெழுமல்குலார்
இழையொலித்தனபுள்ளொலித்தனயாழொலித்தனவெங்கணும்
மழையொலித்தனபோல்கலித்தமனத்தின்முந்துறுவாசியே. (௫௮)

வையமேழுமொரேழுமாருயிரோடுகூடவழங்கும்அம்
மெய்யன்வீரருள்வீரன்மாமகன்மேல்விளைந்ததொர்காதலால்
நையநையவலம்புலன்களவிந்தடங்கிநடுங்குவான்
தெய்வமேனிபடைத்தசேயொளிபோல்மழுங்கினதீபமே. (௫௯)

வங்கியம்பலதேன்விளம்பினவாணிமுந்தினபாணியின்
பங்கியம்பரமெங்கும்விம்மினபம்பைபம்மினபல்வகை
பொங்கியம்பலவுங்கறங்கினநூபுரங்கள்புலம்பவெண்
சங்கியம்பினகொம்பலம்பினசாமகீதநிரம்பவே. (௬0)

தூபமுற்றியகாரிருட்பகைதுள்ளியோடிடவுள்ளெழும்
தீபமுற்றவுநீர்த்தகன்றெனசேயதாருயிர்தேய்தலால்
பாபமுற்றியபேதைசெய்தபகைத்திறத்தினில்வெய்யவன்
கோபமுற்றிமிகச்சிவந்தனனொத்தனன்குணக்குன்றிலே. (௬௧)

மூவராய்முதலாகிமூலமதாகிஞாலமுமாகிஅத்
தேவதேவர்பிடித்தபோர்விலொடித்தசேவகர்சேணிலம்
காவன்மாமுடிசூடுபேரெழில்காணலாமெனுமாசைகூர்
பாவைமார்முகமென்னமுன்னமலர்ந்தபங்கயராசியே. (௬௨)

இன்னவேலையினேழுவேலையுமொத்தபோலவினைத்தெழுந்
தன்னமாநகர்மைந்தன்மாமுடிசூடும்வைகலிதாமெனு
துன்னுகாதல்துரப்பவந்தவைசொல்லலாம்வகையெம்மனோர்க்
குன்னலாவனஅல்லவெல்லினுமுற்றபெற்றிபுணர்த்துவாம். ()

வேறு.

குஞ்சரமனையார்சிந்தைகொளிளையார்
பஞ்சினையணிவார்பால்வளைதெரிவார்
அஞ்சனமெனவாளம்புகளிடையே
நஞ்சினையிடுவார்நாண்மலர்புனைவார். (௬௪)

வேறு.

பொங்கியவுவகைவெள்ளம்பொழிதரக்கமலம்பூத்த
சங்கையின்முகத்தார்நம்பிதம்பியரனையரானோர்
செங்கயல்நறவமாந்திக்களிப்பெனச்செவக்குங்கண்ணார்
இங்குமச்சுவடுநீங்காக்குவவுத்தோட்குமரரெல்லாம். (௬௫)

மாதர்கள்கற்பின்மிக்கார் கோசலைமனத்தையொத்தார்
வேதியர்வசிட்டனொத்தார் வேறுளமக்களெல்லாம்
சீதையையொத்தாரன்னாள் திருவினையொத்தாளவ்வூர்
சாதுகைமாந்தரெல்லாந் தயரதன்றன்னையொத்தார். (சுசு)

இமிழ்திரைபரவைஞால மெங்கணும்வறுமைகூர
உமிழ்வதொத்துதவுகாத லுந்திடவந்ததன்றே
குமிழ்முலைச்சீதைகொண்கன் கோமுடிபுனைதல்காண்பான்
அமிழ்துணக்குழுவுகின்ற வமரரினரசவெள்ளம். (சுஎ)

பாகியல்பவளச்செவ்வாய்ப் பணிமுலைப்பரவையல்குல்
தோகையர்குழாமுமைந்தர் சும்மையுந்துவன்றியெங்கும்
ஏகுமினேகுமென்றென் றிடையிடைநிற்றலல்லால்
போகிலமீளகில்லா பொன்னகர்வீதியெல்லாம். (சுஅ)

வேந்தரேபெரிதென்பாரும் வீரரேபெரிதென்பாரும்
மாந்தரேபெரிதென்பாரு மகளிரேபெரிதென்பாரும்
போந்ததேபெரிதென்பாரும் புகுவதேபெரிதென்பாரும்
தேர்ந்ததேதேரினல்லால் யாவரேதெரியக்கண்டார். (சுகூ)

குவளையினெழிலும்வேலின் கொடுமையுங்குழைத்துக்கூட்டி
திவளுமஞ்சனமென்றேய்ந்த நஞ்சினைத்தெரியத்தீட்டி
தவளவொண்மதியுள்வைத்த தன்மைசால்தடங்கணல்லார்
துவளும்நுண்ணிடையாராடுந் தோகையங்குழாத்திற்றெக்கார். (எ0)

நலங்கிளர்பூமியென்னும் நங்கையைநறுந்துழாயின்
அலங்கலான்புணருஞ்செல்வங் காணவந்தடைந்திலாதார்
இலங்கையினிருதரோயிவ் வேழுலகத்துவாழும்
விலங்கலுமாசைநின்ற விடாமதவிலங்கலேயால். (எக)

சந்திரர்கோடியென்னத் தாளவெண்கவிகையோங்க
அந்தரத்தன்மையெல்லா மார்ந்தெனக்கவரிதுன்ன
இந்திரற்குவமைசாலு மிருநிலக்கிழவரெல்லாம்
வந்தனர்மௌலிசூட்டு மண்டபமரபிற்புக்கார். (எ௨)

முற்பயந்தெடுத்தகாதற் புதல்வனைமுறையினோடும்
இற்பயன்சிறப்பிப்பாரி னீண்டியவுவகைதூண்ட
அற்புதன்றிருவைச்சேரு மருமணங்காணப்புக்கார்
தற்பயன்றவத்தினுய்க்கு நான்மறைக்கிழவரெல்லாம். (எ௩)

விண்ணவர் விசும்பு தூர்த்தார் விரிதிரை யுடுத்த கோல
மண்ணவர் திசைகள் தூர்த்தார் மங்கல மிசைக்குஞ் சங்கம்
கண்ணகன் முரசி னோதை கண்டவர் செவிகள் தூர்த்த
எண்ணருங் கனக மாரி யெழுதிரைக் கடல்கள் தூர்த்த. (எச)

விளக்கொளி மறைத்த மன்னர் மின்னொளி மகுட கோடி
துளக்கொளி விசும்பி னூருஞ் சுடரையு மறைத்த சூழ்ந்த
அளக்கர்வாய் முத்த மூரல் முறுவலா ரணியின் சோதி
வளக்கலா மென்ற வவ்வா னோர் கண்ணையு மறைத்த வன்றே. (எரு)

ஆப்தோ ராமை தியின்க ணையனை மகுடஞ் சூட்டற்
கேயமங் கலங்க ளான யாவையு மியையக் கொண்டு
தூயநான் மறைகள் வேத பாரகர் சொல்லத் தொல்லை
வாயல்க ணெருக்கம் நீங்க மாதவக் கிழவன் வந்தான். (எசு)

கங்கையே முதல வாய கன்னியீ றான தீர்த்த
மங்கலப் புனலும் நாலு வாரியி னீரும் பூரித்
தங்கியின் வினையிற் கேற்ற யாவையு மமைத்து வீரச்
சிங்கவா தனமும் வைத்துச் செய்வன பிறவுஞ் செய்தான். (எஎ)

கணிதநூ லுணர்ந்த மாந்தர் காலம்வந் தடுத்த தென்ன
பிணியற நோற்று நின்ற பெரியவன் விரைவி னேகி
மணிமுடி வேந்தன் றன்னை வல்லையிற் கொணர்தி யென்ன
பணிதலை நின்ற காதற் சுமந்திரன் பரிவிற் சென்றான். (எஅ)

விண்டொட நிவந்த கோயில் வேந்தர்தம் வேந்தன் றன்னை
கண்டிலன் வினவக் கேட்டான் கைகயன் கோயி னண்ணி
தொண்டைவாய் மடந்தை மாரிற் சொல்லமற் றவருஞ் சொல்ல
வெண்டிரிற் கூற்ற மன்னாள் பிள்ளையைக் கொணர்க வென்றாள். (எகூ)

என்றன ளென்னக் கேட்டா னெழுந்த பேருவகை பொங்க
பொன்றிணி மாட வீதி பொருக்கென நீங்கிப் புக்கான்
தன்றிரு வுள்ளத் துள்ளே தன்னையே நினையு மற்றக்
குன்றிவர் தோளி னானைத் தொழுதுவாய் புதைத்துக் கூறும். (அ௰)

கொற்றவர் முனிவர் மற்றுங் குவலயத் துள்ளா ருன்னை
பெற்றவன் றன்னைப் போலப் பெரும்பரி வியற்றி நின்றார்
சிற்றவை தானு மாங்கே கொணர்கெனச் செப்பி னாளப்
பொற்றடமகுடஞ் சூடப் போதுதி விரைவி னென்றான். (அக)

ஐயனுமச்சொற்கேளாவாயிரமௌலியானை
கைதொழுதரசவெள்ளங்கடலெனத்தொடர்ந்துசுற்ற
தெய்வகீதங்கள்பாடத்தேவருமகிழ்ந்துவாழ்த்த
தையலாரிணைத்துநோக்கத்தாரணிதேரிற்சென்றான். (௮௨)

திருமணிமகுடஞ்சூடச்சேவகன்செல்கின்றானென்
றொருவரினொருவர்முந்தக்காதலோடுவகையுந்த
இருகையுமிணைத்துமொய்த்தாரின்னுயிர்யார்க்குமொன்றாய்
பொருவருந்தேரிற்செல்லப்புறத்திடைக்கண்டார்போல்வார். (௮௩)

துண்ணெனுஞ்சொல்லாள்சொல்லச்சுடர்முடிதுறந்துதூய
மண்ணெனுந்திருவைநீங்கிவழிக்கொளாமுன்னம்வள்ளல்
பண்ணெனுஞ்சொல்லினார்தந்தோளெனும்பணைத்தவேயும்
கண்ணெனுங்காலவேலுமிடைநெடுங்கானம்புக்கான். (௮௪)

சுண்ணமுமலருஞ்சாந்துங்கனகமுந்தூவவந்து
வண்ணமேகலையும்நாணும்வளைகளுந்தூவுவாரும்
புண்ணுறவனங்கன்வாளிபுழைத்ததம்புணர்மென்கொங்கை
கண்ணுறப்பொழிந்தகாமவெம்புனல்கழுவுவாரும். (௮௫)

அங்கணனவனிகாத்தற்காமிவனென்னலாமோ
நங்கணன்பிலனென்றுள்ளந்தள்ளுறநடுங்கிநைவார்
செங்கணுங்கரியகோலமேனியுந்தேருமாகி
எங்கணுந்தோன்றுகின்றானொருவனோவிராமனென்பார். (௮௬)

இளையராமகளிரெல்லாமிணைத்தனர்நினைத்துமொய்த்தார்
முனைவரும்நகரமூதார்முதிருமிளைஞர்தாமும்
அனையவன்மேனிகண்டாரன்பினுக்கெல்லைகாணார்
நினைவினர்மனத்தால்வாயால்நிகழ்ந்ததுநிகழ்த்தலுற்றாம். (௮௭)

உய்ந்ததிவ்வுலகமென்பாரூழிகாண்கிற்பாயென்பார்
மைந்தநீகோடியெங்கள்வாழ்க்கைநாள்யாவுமென்பார்
ஐந்தவித்தரிதிற்செய்ததவமுனக்காகவென்பார்
பைந்துழாய்த்தெரியலாய்க்கேநல்வினைபயக்கவென்பார். (௮௮)

உயரருளொண்கணுக்குந்தாமரைநிறத்தையொக்கும்
புயல்பொழிமேகமென்னப்புண்ணியஞ்செய்தவென்பார்
செயலருந்தவங்கள்செய்திச்செம்மலைத்தந்தசெல்வத்
தயரதற்கென்னகைம்மாறுடையம்யாந்தக்கதென்பார். (௮௯)

வாரணமரற்றவந்துகராவுயிர்மாற்றும்நேமி
நாரணனுக்குமிந்நம்பிதன்கருணையென்பார்
ஆரணமறிதல்தேற்றாவையனையணுகிநோக்கி
காரணமின்றியேயுங்கண்கள்நீர்கலுழநிற்பார். (௬௰)

நீலமாமுகிலனான்றனிநிறையினோடறிவுநிற்க
சீலமார்க்குண்டுகெட்டேன்றேவரினடங்குவானோ
காலமாக்கணிக்குநுண்மைக்கணக்கையுங்கடந்துநின்ற
மூலமாய்முடிவிலாதமூர்த்தியிம்முன்பனென்பார், (௬௧)

ஆர்கலியகழ்ந்தோர்கங்கையவனியிற்கொணர்ந்தோர்முந்தை
போர்கெழுபுலவர்க்காகியசுரனைப்பொருதுவென்றோர்
பேர்கெழுசிறப்பின்வந்தபெரும்புகழ்நிற்பவையன்
தார்கெழுதிரடோள்தந்தபுகழினைத்தழுவியென்பார். (௬௨)

வேறு.

சந்தமிவைதாவில்மணியாரமிவையாவும்
சிந்துரமுமிங்கிவைசெறிந்தமதவேழப்
பந்திகள்வயப்பரிபசும்பொனின்வெறுக்கை
மைந்தவறியோர்கொளவழங்கெனநினைப்பார். (௬௩)

மின்பொருவுதேரின்மிசைவீரன்வருபோழ்தில்
தன்பொருவில்கன்றுதனிதாவிவரல்கண்டாங்
கன்புருகுசிந்தையொடுமாவுருகுமாபோல்
என்புருகிநெஞ்சுருகிநஞ்சுருகிநிற்பார். (௬௪)

சத்திரம்நிழற்றநிமிர்தானையொடுநானு
அத்திரம்நிழற்றவருளோடவனியாள்வார்
புத்திரரினிப்பெறுதல்புல்லிதெனநல்லோர்
சித்திரமெனத்தனிதிகைத்துருகிநிற்பார். (௬௫)

கார்மினொடுலாயதெனநூல்கஞலுமார்பன்
தேர்மிசைநம்வாயில்கடிதேகுதல்செய்வானோ
கூர்கனகராசியொடுகோடிமணியாலும்
தூர்மினெடுவீதியினையென்றுசொரிவாரும். (௬௬)

தாய்கையில்வளர்ந்திலன்வளர்த்ததுதவத்தால்
கேகயன்மடந்தைகிளர்ஞாலமிவனாள
ஈகையிலுவந்தவவ்வியற்கையிதுவென்றால்
தோகையிவள்பேருவகைசொல்லலரிதென்பார். (௬௭)

பாவமுமருந்துயரும்வேர்பறியுமென்பார்
பூவலயமின்றுதனியன்றுபொதுவென்பார்
தேவர்பகையுள்ளனவிவ்வள்ளல்தெறுமென்பார்
ஏவல்செயுமன்னர்தவம்யாவதுகொலென்பார். (கூஅ)

ஆண்டினையராயினையகூறவடல்வீரன்
தூண்டுபுரவிப்பொருவில்சுந்தரமணித்தேர்
நீண்டகொடிமாடநிரைவீதிநிறையப்போய்
பூண்டபுகழ்மன்னனுறைகோயில்புகலோடும். (கூகூ)

வேறு.

ஆங்குவந்தடைந்தவண்ண லாசையின்கவரிவீச
பூங்குழன்மகளிருள்ளம் புதுக்களியாடநோக்கி
வீங்கிருங்காதல்காட்டி விரிமுகக்கமலபீடத்
தோங்கையமகுடஞ்சூடி யுவகைவீற்றிருப்பக்காணான். (எ)

வேத்தவைமுனிவரோடு விருப்பொடுகளிக்குமெய்மை
எத்தவையிசைக்குஞ்செம்பொன் மண்டபமினிதினெய்தான்
ஊத்தவையுலகத்தெங்கு முள்ளவையுணர்ந்தாருள்ளம்
பூத்தவைவடிவையொப்பான் சிற்றவைகோயில்புக்கான். (எக)

புக்கவன்றன்னைநோக்கிப் புரவலர்முனிவர்யாரும்
தக்கதேநினைந்தான்தாதை தாமரைச்சரணஞ்சூடி
திக்கினைநிமிர்த்தகோலச் செல்வனேசெம்பொற்சோதி
மிக்குயர்மகுடஞ்சூட்டச் சூடுதல்விழுமிதென்றார். (எஉ)

ஆபனநிகழும்வேலை அண்ணலும்அயர்ந்துதேருத்
தூயவன்இருந்தசூழல் துருவினன்வருதல்நோக்கி
நாயகன்உரையான்வாயால் நான்இதுபகர்வென்என்று
தாய்எனநினைவான்முன்னே கூற்றெனத்தமியள்வந்தாள். (எங)

வந்தவள்தன்னைச்சென்னி மண்ணுறவணங்கிவாய்த்த
சிந்துரப்பவளச்செவ்வாய் செங்கையிற்புதைத்துமற்றை
சுந்தரத்தடக்கைதானை மடக்குறத்துவண்டுநின்றான்
அந்திவந்தடைந்ததாயைக் கண்டஆன்கன்றின்அன்னான். (எச)

நின்றவன்தன்னைநோக்கி யிரும்பினாலியைந்தநெஞ்சிற்
கொன்றுழல்கூற்றமென்னும் பெயரினிற்கொடுமைபூண்டாள்
இன்றெனக்குணர்த்தலாவ தேயதேயென்னினாகும்
ஒன்றுனக்குந்தைமைந்த வுரைப்பதோருரையுண்டென்றாள். (எரு)

எந்தையேஏவரீரோ உரைசெயஇயைவதுண்டேல்
உய்ந்தனென் அடியேன்என்னிற் பிறந்தவர்உளரோவாழி
வந்ததென்தவத்தின்ஆய வருபயன்மற்றொன்றுண்டோ
தந்தையும்தாயும்நீரே தலைநின்றேன்பணிமின்என்றான். (௱௬)

ஆழிசூழுலகமெல்லாம் பரதனேயாளநீபோய்த்
தாழிருஞ்சடைகள்தாங்கித் தாங்கருந்தவமேற்கொண்டு
பூழிவெங்கானம்நண்ணிப் புண்ணியத்துறைகளாடி
ஏழிரண்டாண்டின்வாவென் றியம்பினனரசனென்றாள். (௱௭)

இப்பொழுதெம்மனோரா லியம்புதற்கெளிதேயாரும்
செப்பருங்குணத்திராமன் றிருமுகச்செவ்விநோக்கில்
ஒப்பதேமுன்புபின்பவ் வாசகமுணரக்கேட்ட
அப்பொழுதலர்ந்தசெந்தா மரையினைவென்றதம்மா. (௱௮)

தெருளுடைமனத்துமன்ன னேவலிற்றிறம்பவஞ்சி
இருளுடையுலகந்தாங்கு மின்னலுக்கியைந்துநின்றான்
உருளுடைச்சகடம்பூண்ட வுடையவனுய்த்தகாரே
றருளுடையொருவனீக்க வப்பிணியவிழ்ந்ததொத்தான். (௱௯)

மன்னவன்பணியன்றாகில் நும்பணிமறுப்பனோவென்
பின்னவன்பெற்றசெல்வ மடியனேபெற்றதன்றோ
என்னினியுறுதியப்பா லிப்பணிதலைமேற்கொண்டேன்
மின்னொளிர்கானமின்றே போகின்றேன்விடையுங்கொண்டேன். ()

௩-வது. கைகேசிசூழ்வினைப்படலமுற்றும். ஆக திருவிருத்தம் (௨௯

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

௪-வது - நகர்நீங்குபடலம்

என்றுகொண்டினையகூறி யடியிணையிறைஞ்சிமீட்டும்
தன்றுணைத்தாதைபாத மத்திசைநோக்கித்தாழ்ந்து
பொன்றிணிபோதினாளும் பூமியும்புலம்பிநையக்
குன்றினுமுயர்ந்ததோளான் கோசலைகோயில்புக்கான். (௧)

குழைக்கின்றகவரியின்றிக் கொற்றவெண்குடையுமின்றி
* இழைக்கின்றவிதிமுன்செல்லத் தருமம்பின்னிரங்கியேக
மழைக்குன்றமனையான்மௌலி கவித்தனன்வருமென்றென்று
தழைக்கின்றவுள்ளத்தன்னாள் முன்னொருதமியன்சென்றான். (௨)

* விதி - தம்முடைய ஆதிச்சங்கற்பம்.

புனைந்திலன்மௌலிகுஞ்சிமஞ்சனப்புனிதநீரால்
நனைந்திலனென்கொலென்னுமையத்தாள்நளினபாதம்
வனைந்தபொற்கழற்கால்வீரன்வணங்கலுங்குழைந்துவாழ்த்தி
நினைந்ததென்னிடையூறுண்டோநெடுமுடிபுனைதற்கென்றாள். (௩)

வேறு.

மங்கையம்மொழிகூறலுமன்னவன்
செங்கைகூப்பிநின்காதற்றிருமகன்
பங்கமில்குணத்தெம்பிபரதனே
துங்கமாமுடிசூடுகின்றானென்றான். (௪)

முறைமையன்றென்பதொன்றுண்டுமும்மையின்
நிறைகுணத்தவனின்னினும்நல்லனால்
குறைவிலனெனக்கூறினள்நால்வர்க்கும்
மறுவிலன்பினில்வேற்றுமைமாற்றினான். (௫)

என்றுபின்னருமன்னவனேவிய
தன்றெனுமைமகனேயுனக்கறன்
நன்றுநும்பிக்குநானிலம்நீகொடுத்
தொன்றிவாழுதியூழிபலவென்றாள். (௬)

தாயுரைத்தசொற்கேட்டுத்தழைக்கின்ற
தூயசிந்தையத்தோமில்குணத்தினான்
நாயகன்னெனைநன்னெறியுய்ப்பதற்
கேயதுண்டோர்பணியென்றியம்பினான். (௭)

ஈண்டுரைத்தபணியென்னையென்றவட்
காண்டொரேழினோடேழகன்கானிடை
மாண்டமாதவரோடுடன்வைகிப்பின்
மீண்டுநீவரல்வேண்டுமென்றானென்றாள். (௮)

ஆங்கவ்வாசகமென்னுமனல்குழை
தூங்குதன்செவியில்தொடராமுனம்
ஏங்கினாள்இளைத்தாள்திகைத்தாள்மனம்
வீங்கினாள்விம்மினாள்விழுந்தாளரோ. (௯)

வஞ்சமோமகனேயுனைமாநிலம்
தஞ்சமாகநீதாங்கென்றவாசகம்
நஞ்சமோயினிநானுயிர்வாழ்வெனோ
அஞ்சுமஞ்சுமென்னாருயிரஞ்சுமால். (௰)

கையைக்கையினெரிக்குந்தன்காதலன்
வைகுமாலிலையன்னவயிற்றினை
பெய்வளைத்தளிராற்பிசையும்புகை
வெய்துயிர்க்கும்விழுங்கும்புழுங்குமால். (௰௧)

நன்றுமன்னன்கருணையெனாநகும்
நின்றமைந்தனைநோக்கிநெடுஞ்சுரத்
தென்றுபோவதெனவெழுமின்னுயிர்
பொன்றும்போதுற்றதுற்றதுபோலுமே. (௰௨)

அன்பிழைத்தமனத்தரசற்குநீ
என்பிழைத்தனையென்றுநின்றேங்குமால்
முன்பிழைத்தவறுமையின்முற்றினோர்
பொன்பிழைக்கப்பொதிந்தனர்போலவே. (௰௩)

அறமெனக்கிலையோவெனுமாவிநைந்
திறவடுத்ததென்றெய்வதங்காளெனும்
பிறவுரைப்பதென்கன்றுபிரிந்துழி
கறவையொப்பக்கரைந்துகலங்கினாள். (௰௪)

இத்திறத்தினிடருறுவாள்தனைக்
கைத்தலத்தினெடுத்தருங்கற்பினோய்
பொய்த்திறத்தினனுக்குதியோபுகல்
மெய்த்திறத்துநம்வேந்தனைநீயென்றான். (௰௫)

பொற்புறுத்தனமெய்மைபொதிந்தன
சொற்புறுத்தற்குரியனசொல்லினான்
கற்புறுத்தியகற்புடையாட்டனை
வற்புறுத்திமனங்கொளத்தேற்றுவான். (௰௬)

சிறந்ததம்பிதிருவுறவெந்தையை
மறந்தும்பொய்யிலனாக்கிவனத்திடை
உறைந்துதீருமுறுதிபெற்றேனினிற்
பிறந்துநான்பெறும்பேறென்பதியாவதோ. (௧௭)

விண்ணுமண்ணுமிவ்வேலையுமற்றும்வே
றெண்ணும்பூதமெலாமிறந்தேகினும்
அண்ணலேவல்மறுக்கவடியெனேற்
கொண்ணுமோவிதற்குள்ளழியேலென்றான். (௰௮)

ஆகிளையவரசன்றனாணையால்
ஏகலென்பதியானுமுரைக்கிலென்
சாகலாவுயிர்தாங்கவல்லேனையும்
போகினின்றெடுங்கொண்டனைபோகென்றாள். (ககூ)

என்னைநீங்கியிடர்க்கடல்வைகுறும்
மன்னர்மன்னனைவற்புறுத்தாதுடன்
துன்னுகானந்தொடரத்துணிவதோ
அன்னையேயறம்பார்க்கிலையாமென்றான். (உ0)

வரிவிலெம்பியிம்மண்ணரசாயவற்
குரிமைமாநிலமுற்றபின்கொற்றவன்
திருவினீங்கித்தவஞ்செய்நாளுடன்
அருமைநோன்புகளாற்றுதியாமன்றே. (உக)

சித்தம்நீதிகைக்கின்றதென்றேவரும்
ஒத்தமாதவஞ்செய்துயர்ந்தாரன்றே
எத்தனைக்குளவாண்டுகளீண்டவை
பத்துநாளும்பகலலவோவென்றான். (உஉ)

முன்னர்க்கோசிகனென்னுமுனிவரன்
தன்னருட்டலைதாங்கியவிஞ்சையும்
பின்னரெய்தியபேறும்பிழைத்தவோ
இன்னம்நன்றவர்க்கேவினைசெய்தலே. (உங)

மாதவர்க்குவழிபாடிழைத்தரும்
பேர்தமுற்றிப்பொருவருவிஞ்சைகள்
ஏதமற்றனதாங்கியிமையவர்
காதல்பெற்றநன்காவரக்காண்டியால். (உச)

மகரவேலைமண்டொட்டவண்டாடுதார்ச்
சகரர்தாதைதபணிதலைநின்றுதம்
புகரில்யாக்கையினின்னுயிர்போக்கிய
நிகரின்மாப்புகழ்நின்றதன்றேவென. (உரு)

மான்மறிக்கரத்தான்மழுவேந்துவான்
தான்மறுத்திலன்றாதைசொற்றாயையே
ஊன்அறக்குறைத்தானுரவோனருள்
யான்மறுப்பதென்றென்னுவதோவென்றான். (உசு)

இத்திறத்தவெவ்வளைப்பலவாசகம்
உய்த்துரைத்தமகனுரையுட்கொளா
எத்திறத்துமிறக்குமிந்நாடென்று
மெய்த்திறத்துவிளங்கிழையுன்னுவாள். (௨௭)

அவனிகாவல்பரதனதாகுக
இவனிஞ்ஞாலமிறந்திருங்கானிடைத்
தவனிலாவகைகாப்பென்றகைவிலாப்
புவனிநாதற்றொழுதென்றுபோயினாள். (௨௮)

போகின்றாளைத்தொழுதுபுரவலன்
ஆகமற்றவள்தன்னையுமாற்றியிச்
சோகந்தீர்ப்பவளென்றுசுமித்திரை
மேகந்தோய்தனிக்கோயிலைமேயினான். (௨௯)

நடந்தகோசலைகேகையநாட்டிறை
மடந்தைகோயிலைமெய்தினள்மன்னவன்
கிடந்தபார்மிசைவீழ்ந்தனள்கெட்டுயிர்
உடைந்தபோழ்தினுடல்விழுந்தென்னவே. (௩௰)

வேறு.

பிறியார்பிறிவேதென்னும்பெரியோய்தகவோவென்னும்
நெறியோவடியேம்நிலைநீநினையாநினைவேதென்னும்
வறியோர்தனமேயென்னுந்தமியேன்வலியேயென்னும்
அறிவோவினையோவென்னும்அரசேஅரசேயென்னும். (௩௧)

இருளற்றிடவுற்றொளிருமிரவிக்கெதிருந்திகிரி
உருளத்தனையுய்த்தொருகோனுடையிற்கடைகாணுலகம்
பொருளற்றிடமுற்றுறுமப்பகலிற்புகுதற்கென்றோ
அருளக்கருதிற்றிதுவோவரசர்க்கரசேயென்னும். (௩௨)

திரையார்கடல்சூழுலகின்றவமேதிருவின்றிருவே
நிரையார்கலையின்கடலேநெறியார்மறையின்நிலையே
கரையாவயர்வேனெனைநீகருணாலயனேயென்னினான்
றுரையாவிதுதானழகோஉலகேழுடையாயென்னும். (௩௩)

மின்னின்றனையமேனிவெறிதாய்விடநின்றதுபோல்
உன்னுந்தகைமைக்கடையாவுறுநோயுறுகின்றுணரான்
இன்னென்றுரையானென்னேயிதுதான்யாதென்றறியேன்
மன்னன்றகைமைகாணவாராய்மகனேயென்னும், (௩௪)

இவ்வாறழுவாளிரியற்குரல்சென்றிசையாமுன்னம்
ஓவ்வாதொல்லாதென்னுவொளிவாணிருபர்முனிவர்
அவ்வாறறிவாயென்னவந்தான்முனிவன்அவனும்
வெவ்வாளரசன்நிலைகண்டென்னும்விளைவென்றான். (௩௫)

இறந்தான்அல்லன்அரசன்இறவாதொழிவான்அல்லன்
மறந்தான்உணர்வென்றுன்னுவன்கேகயர்கோன்மங்கை
துறந்தாள்துயரந்தன்னைத்துறவாதொழிவாளிவளே
பிறந்தார்பெயருந்தன்மைபிறராலறிதற்கெளிதோ. (௩௬)

என்னாவுன்னாமுனிவன்இட்ராலழுவாள்துயரம்
சொன்னாளாகாளெனமுன்றொழுகேகயர்கோன்மகளை
அன்னாயுரையாயரசன்அயர்வாணிலையென்னென்ன
தன்னால்நிகழ்ந்ததன்மைதானேதெரியச்சொன்னாள். (௩௭)

சொற்றாள்சொற்றமுன்னஞ்சுடர்வாளரசர்க்கரசை
பொற்றாமரைபோற்கையாற்பொடிசூழ்படிநின்றெழுவி
கற்றாய்அயரேல்அவளேதரும்நின்காதற்கரசென்
றெற்றேசெயலின்றொழிநீயென்றென்றிரவாநின்றான். (௩௮)

சீதப்பனிநீரளவித்தின்காலுதவுந்தண்கால்
போதத்தளவேதவழ்வித்தின்சொற்புகலாநின்றான்
ஓதக்கடனஞ்சனையாளுணாநஞ்சொருவாறவியக்
காதற்புதல்வன்பெயரோபுகல்வானுயிருங்கண்டான். (௩௯)

காணாவையாவினிநீயொழிவாய்கழிபேரவலம்
ஆணாயகனேயினிநாடாள்வானிடையூறுளதோ
மாணாவுரையாடானேதருமாமழையேயனையான்
பூணாதொழிவானெனில்யாமுளமோபொன்றேலென்றான். (௪௰)

என்றம்முனிவன்றன்னைநினையாவினையேனினியான்
பொன்றும்மளவில்லவனைப்புனைமாமகுடம்புனைவித்
தொன்றும்வனமென்றுன்னவண்ணஞ்செய்தென்னுனையும்
குன்றும்பழிபூணாமற்காவாய்கோவேயென்றான். (௪௧)

முனியும்முனியுஞ்செய்கைக்கொடியாள்முகமேமுன்னி
இனியுன்புதல்வற்கரசும்வனையோர்க்கின்னுயிரும்
மனுவின்வழிநின்கணவற்குயிரும்உதவிவசைதீர்
புனிதம்மருவும்புகழேபுனையாய்பொன்னேயென்றான். (௪௨)

மொய்ம்மாண்வினைவேரறவென்றொழிவான்மொழியாமுன்னம்
விம்மாவழுவாளரசன்மெய்யிற்றிரிவானென்னில்
இம்மாவுலகத்துயிரோடினிவாழ்வுகவேனென்சொல்
பொய்ம்மாணுமற்கின்றேபொன்றுதொழியேனென்றாள். (௪௩)

கொழுநன்றுஞ்சுமெனவுங்கொள்ளாதுலகம்மெனவும்
பழிநின்றுயருமெனவும்பாவம்முளதாமெனவும்
ஒழிகின்றிலையன்றியுமொன்றுணர்கின்றிலையானினிமேல்
மொழிகின்றனவென்னென்றுமுனியும்முறையன்றென்பான். (௪௪)

கண்ணோடாதேகணவனுயிரோடிடர்காணாதே
புண்ணோடோடுங்கனலோவிடமோவென்னப்புகல்வாய்
பெண்ணோநீயோமாயாப்பேயோகொடியாய்நீயிம்
மண்ணோடுன்னோடென்னும்வசையோவலிதேயென்றான். (௪௫)

வாயான்மன்னன்மகனைவனமேகென்றுமுன்னம்
நீயோசொன்னாயவனோநிமிர்கானிடைவெந்நெறியில்
பேயோபுகலோதவிரான்புகழோடுயிர்சுடுவெந்
தீயோய்நின்போற்றீயாருளரோசெயலென்னென்றான். (௪௬)

தாவில்முனிவன்புகலத்தளராநின்றமன்னன்
நாவில்நஞ்சமுடையநங்கைதன்னைநோக்கி
பாவிநீயேவெங்கான்படர்வாயென்றென்னுயிரை
ஏவினாயோவவனும்ஏகினானோவென்றான். (௪௭)

கண்டேனெஞ்சங்கனிவாய்க்கனிவாய்விடநானெடுநாள்
உண்டேனதனானீயென்னுயிரைமுதலோடுண்டாய்
பண்டேயெரிமுன்னுன்னைப்பாவீதேவியாகக்
கொண்டேனல்லேன்வேறோர்கூற்றந்தேடிக்கொண்டேன். (௪௮)

விழிக்குங்கண்வேறில்லாவெங்கானென்கான்முளையைச்
சுழிக்கும்வினையாலேகச்சூழ்வாயென்னைப்போழ்வாய்
பழிக்குநாணாய்மாணாப்பாவியினியென்பலவுன்
கழுத்தினாணுன்மகற்குக்காப்பினாணுமென்றான். (௪௯)

இன்னேபலவும்பகர்வானிரங்காதாளைநோக்கிச்
சொன்னேனின்றேயிவளென்றாரமல்லள்துறந்தேன்
மன்னாவான்வருமப்பரதன்றனையுமகனென்
றுன்னேன்முனிவாவவனும்ஆகானுரிமைக்கென்றான். (௫௰)

என்னைக்கண்டும்ஏகாவண்ணம்இடையூறுடையான்
உன்னைக்கண்டும்இலனோஎன்றான்உயர்கோசலையை
பின்னைக்கண்டான்அனையான்பிரியக்கண்டதுயரம்
தன்னைக்கண்டேதவிர்வாள்தளர்வாள்நிலையிற்றளர்வான். (ருக)

மாற்றாள்செயலாமென்றும்கணவன்வரமீய்ந்துள்ளம்
ஆற்றாதுயர்ந்தானென்றும்அறிந்தாள்அவளும்அவனைத்
தேற்றாநின்றாள்மகனைத்திரிவானென்றாள்அரசன்
தோற்றான்மெய்யென்றுலகஞ்சொல்லும்பழிக்குஞ்சோர்வாள். (ருஉ)

தள்ளாநிலைசால்மெய்மைதழுவாவழுவாவகைநின்
றெள்ளாநிலைகூர்பெருமைக்கிழிவாமென்றாலுரவோய்
விள்ளாநிலைசேரன்பால்மகன்மேல்மெலியினுலகம்
கொள்ளாதன்றோவென்றாள்கணவன்குறையக்குறைவாள். (ருங)

போவாதொழியானென்றாள்புதல்வன்றன்னைக்கணவன்
சாவாதொழியானென்றென்றுள்ளந்தள்ளுற்றயர்வாள்
காவாயென்றாள்மகனைக்கணவன்புகழுக்கழிவாள்
ஆவாவுயர்கோசலையாம்அன்னம்என்னுற்றனளே. (ருச)

உணர்வான்அனையாளுரையாலுயர்ந்தானுரைசால்குமரன்
புணரானிலமேவனமேபோவானேயாமென்னா
இணரார்தருதாரரசன்இடராலயர்வான்வினையேன்
துணைவாதுணைவாவென்றான்தோன்றால்தோன்றாயென்றான். (ருரு)

கண்ணும்நீராயுயிரும்ஒழுகக்கழியாநின்றேன்
எண்ணும்நீர்நான்மறையோர்எரிமுன்நின்மேற்சொரிய
மண்ணும்நீராய்வந்தபுனலைமகனேவினையேற்
குண்ணும்நீராயுதவியுயர்கானடைவாயென்றான். (ருசு)

படைமாணரசைப்பலகாற்பழுவாய்மழுவாலெறிவான்
மிடைமாவலிதானனையான்வில்லாலடுமாவல்லாய்
உடைமாமகுடம்புனையென்றுரையாவுடனேகொடியேன்
சடைமாமகுடம்புனையத்தந்தேனந்தோவென்றான், (ருஎ)

கறுத்தாயுருவம்மனமுங்கண்ணுங்கையுஞ்செய்ய
பொறுத்தாய்பொறையேயிறைவன்புரமூன்றெரித்தபோர்வில்
இறுத்தாய்தமியேனென்னாதென்னையிம்மூப்பிடையே
வெறுத்தாயினிநான்வாணாள்வேண்டேன்வேண்டேனென்றான். ()

பொன்னின்முன்னம்ஒளிரும்பொன்னேபுகழின்புகழே
மின்னின்மின்னும்வரிவிற்குமராமெய்யின்மெய்யே
என்னின்முன்னம்வனம்நீயடைதற்கெளிமேனல்லேன்
உன்னின்முன்னம்புகுவேன்உயர்வானகம்யானென்றான், (௫௯)

பெருகுதற்கொத்தநெஞ்சும்நேயத்தாலேயாவி
உருகுதற்கொத்தஉடலும்உடையேன்உன்போலல்லேன்
தருதற்கொத்தசனகன்றையல்கையைப்பற்றி
புகுதற்கண்டகண்ணாற்போகக்காணேனென்றான். (௬௰)

எற்றேபகர்வேனினியானென்னையுன்னிற்பிரிய
வற்றேயுலகம்எனினும்வானேவருந்தாதெனினும்
பொற்றேரரசேதமியேன்புகழேயுயிரேயுன்னைப்
பெற்றேனருமையறிவேன்பிழையேன்பிழையேயென்றான், (௬௧)

அள்ளற்பள்ளப்புனல்சூழ்அகன்மாநிலமும்அரசும்
கொள்ளக்குறையாநிதியின்குவையும்முதலாமெவையும்
கள்ளக்கைகேசிக்கேயுதவிப்புகழ்கைக்கொண்ட
வள்ளற்றனம்என்னுயிரைமாய்க்கும்மாய்க்குமென்றான், (௬௨)

ஒலியார்கடல்சூழுலகத்துயர்வானிடைநாகரினும்
பொலியாநின்றாருன்னைப்போல்வாருளரோபொன்னே
வலியாருடையாரொன்றால்மழுவாளுடையான்வரவும்
சலியாநிலையாயென்றாற்றவிர்வாருளரோவென்றான், (௬௩)

கேட்டேயிருந்தேனெனினுங்கிளர்வானின்றேயடைய
மாட்டேனாகில்அன்றேவன்கண்ணென்கண்மைந்தா
காட்டேயுறைவாய்நீயிக்கைகேசியையுங்கண்டிந்
நாட்டேயுறைவேனென்றால்நன்றென்றன்மையென்றான், (௬௪)

மெய்யார்தவமேசெய்துன்மிடல்மார்பரிதிற்பெற்ற
செய்யாளென்னும்பொன்னும்நிலமாதென்னுந்திருவும்
உய்யாருய்யார்கெடுவேனுன்னைப்பிரியின்வினையேன்
ஐயாகைகேசியைநேர்கேளோநானென்றான், (௬௫)

பூணாரணியும்முடியும்பொன்னாசனமுங்குடையும்
சேணார்மார்புந்திருவுந்தெரியக்காணத்திரிவேன்
மாணாமரவற்கலையும்மானின்றோலும்மவைநான்
காணாதொழிந்தேனென்றால்நன்றாய்த்தன்றோகருமம், (௬௬)

என்றுஒன்றொன்றொவ்வா இசைதந்தரசன் உயிரும்
சென்றான் இன்றோடென்னுந் தன்மையெய்தித் தேயுந்தான்
மென்றோள்மார்பின் முனிவன் வேந்தே அயரேல் அவனை
இன்றேகாதவண்ணந் தகைவென் உலகோடென்னா. (௬௭)

முனிவன் செல்லும் அளவில் முடியுங்கொல்லென்றரசன்
தனிநின்றுழல்தன்னுயிரைச் சிறிதே தகைவானிந்த
புனிதன் போனால் இவனாற் போகாதொழிவானென்னா
மனிதன்வடிவங்கொண்ட மனுவுந் தன்னை மறந்தான். (௬௮)

மறந்தானினைவும் உயிரும் மன்னன் என்னுமறுகா
இறந்தான் கொல்லோ அரசன் என்று இடருற்றழிவாள்
துறந்தாய்மகனே உலகோடுடைமையும் என்னைத் துணையாம்
அறந்தானிதுவோ வையாவரசர்க்கரசே யென்றாள். (௬௯)

மெய்யின்மெய்யே யுலகின் வேந்தர்க்கெல்லாம் வேந்தே
உய்யும்வகைநின்னுயிரை யோம்பாதி[illegible]ன்றேம்பில்
வையம்முழுதுந்துயரான் மறுகும்முனிவனுடன்நம்
ஐயன்வரினும்வருமாலயரேலரசே யென்றான். (௭௰)

என்றென்றரசன் மெய்யும் இருதாளிணையும் முகமும்
தன்றன்செய்யகையாற்றைவந்திடு கோசலையை
ஒன்றுந்தெரியாமம்மல் உள்ளத்தரசன் மெள்ள
வன்றீஞ்சிலைநங்குரிசில் வருமேவருமே யென்றான். (௭௧)

வன்மாயக்கைகேசிவார்க்கால் என்றன் உயிரை
முன்மாய்விப்பத்துணிந்தாளோருங் கூனிமொழியால்
தன்மாமகனுந்தானுந்தரணிபெறுமாறன்றி
எம்மாமகனைக்கானேகென்றாளென்றான். (௭௨)

பொன்னார்தோளான்கானேபுகுதப்புகுதல்தவிரான்
என்னாருயிரேவகலா தொழியாதிது கோசலைகேள்
முன்னாளொருமாமுனிவன்மொழியுஞ்சாபம்உளதென்
றந்நாளுற்றதெல்லாம் அவளுக்கரசன் அறைவான். (௭௩)

வெய்யகானத்திடையே வேட்டைவேட்கைமிகவே
ஐயசென்றுகரியோடரிகள் துருவித்திரிவேன்
கையார்சிலையுங்கணையுங்கொடுகார்மிருகம்வருமோர்
செய்யநதியின்கரைவாய்ச்சென்றேமறைவாய்நின்றேன். (௭௪)

ஒருமாமுனிவன்மனையோடொளியொன்றிலவாய்நயனம்
திருமாமகனேதுணையாய்த்தவமேபுரிபோழ்தினின்வாய்
அருமாமகனேபுனல்கொண்டகல்வான்வருமாறறியேன்
பொருமாகணைவிட்டிடலும்புவிமீதலறிப்புரள. (எரு)

புக்குப்பெருநீர்நுகரும்பொருபோதகமென்றொலிமேல்
கைக்கட்கணைசென்றதலாற்கண்ணிற்றெரியக்காணேன்
அக்கைக்கரியின்குரலேயன்றீதென்னவெருவா
மக்கட்குரலென்றயர்வேன்மனநொந்தவண்வந்தனனால், (எசு)

கையுங்கடனும்நெகிழக்கணையோடுருள்வோற்காணூ
மெய்யுந்தனுவும்மனனும்வெறிதேகிடமேல்வீழா
ஐயன்நீதான்யாவன் அந்தோ அருள்கென்றயர
பொய்யொன்றறியாமைந்தன்கேணீயென்னப்புகல்வான். (எஎ)

சேலாகியமாமுதல்வன்றிருவுந்தியினீண்மலரின்
மேலாகியநான்முகனால்வேதங்களின்மாமுறையின்
பாலாகியயோனிகளின்பலவாம்வருணந்தருவான்
நாலாகியதாம்வருணந்தனின்முன்னைமைநல்கினனால் (எஅ)

அந்நான்மறையோன்வழியில்அருள்காசிபனன்மைந்தன்
மின்னூர்புரிநூல்மார்பன்விருத்தேசனன்மெய்ப்புதல்வன்
நன்னான்மறைநூல்தெரியும்நரவான்சலபோசனெனச்
சொன்னான்முனிவன்சுருசுரோசனன்யாமென்றான், (எகூ)

இருகண்களுமின்றியதாய்தந்தைக்குமீங்கவர்கள்
பருகும்புனல்கொண்டகல்வான்படர்ந்தேன்பழுதாயினதால்
இருகுன்றனையபுயத்தாயிடமென்றுணராதெய்தாய்
உருகுந்துயரந்தவிர்நீயூழின்செயலீதென்றே, (அ0)

உண்ணீர்வேட்கைமிகவேயுயங்கும்எந்தைக்கொருநீ
தண்ணீர்கொடுபோயளித்தென்சாவும்உரைத்தும்புதல்வன்
விண்மீதடைவான்றொழுதானெனவும் அவர்பால்விளம்பென்
றெண்ணீர்மையினான்விண்ணோரெதிர்கொண்டிடவேகினனால், (அக)

மைந்தன்வரவேநோக்கும்வளமாதவன்பால்மகவோ
டந்தண்புனல்கொண்டஞ்சாவையாவிதுபோதளவாய்
வந்திங்கணுகாதென்னேவந்ததென்றேநொந்தேம்
சந்தங்கமழுந்தோளாய்தழுவிக்கொளவாவெனவே, (அஉ)

ஐயாயானோரரசன்அயோத்திநகரத்துள்ளேன்
மையார்களபந்துருவிமறைந்தேவதிந்தேனிருள்வாய்
பொய்யாவாய்மைப்புதல்வன்புனல்மொண்டிடும்ஓதையின்மேல்
கையார்கணைசென்றதலாற்கண்ணிற்றெரியக்காணேன். (அ௩)

வீட்டுண்டலறுங்குரலால்வேழக்குரலென்றெனவே
ஓட்டந்தெதிராநீயாரெனஉற்றவெலாம்உரையா
வாட்டந்தருநெஞ்சினனாய்நின்றால்வணங்காவானோர்
ஈட்டம்எதிர்வந்திடவேஇறந்தேகினன்விண்ணிடையே. (அ௪)

அறுத்தாய்கணையாலெனவேஅடியேன்றன்னைஅய்யா
கறுத்தேயருளாயானோகண்ணிற்கண்டேன்அல்லேன்
மறுத்தான்இல்லான்வனமொண்டிடும்ஓதையினெய்தனலால்
பொறுத்தேயருள்வாயென்னாவிருதாள்சென்னிபுனைந்தேன். (அ௫)

வீழ்ந்தாரயர்ந்தார்புரண்டார்விழிபோயிற்றின்றென்றார்
ஆழ்ந்தார்துன்பக்கடலுள்ஐயாஐயாஎன்றார்
போழ்ந்தாய்நெஞ்சைஎன்றார்பொன்னாடதனிற்போய்நீ
வாழ்ந்தேயிருப்பத்தரியேம்வந்தேம்வந்தேமினியே. (அ௬)

என்றென்றயருந்தவனாயிருதாள்வணங்கியானே
இன்றும்புதல்வன்இனிநீர்ஏவும்பணிசெய்திடுவேன்
ஒன்றுந்தளர்வுற்றயரீர்ஒழிமின்இடரொன்றிடலும்
வன்றிண்சிலையாய்கேண்மோஎனவேஒருசொல்வகுத்தான். (அ௭)

கண்ணுண்மணிபோல்மகவையிழந்தும்உயிர்காதலியா
உண்ணவெண்ணியிருந்தாலுலகோர்என்னென்றுரையார்
விண்ணின்றலைசேரும்யாம்எம்போல்விடலைபிரிய
பண்ணும்பரிமாவுடையாய்அடைவாய்படர்வான்என்னா. (அ௮)

தாவாதொளிருங்குடையாய்தவறிங்கிதுநின்சரணம்
காவாய்என்றாய்அதனாற்கடியசாபங்கருதேம்
ஏவாமகவைப்பிரிந்தின்றெம்போலிடருற்றனைநீ
போவாய்அகல்வான்என்னாப்பொன்னாட்டிடைபோயினரால். (அ௯)

இங்கைதளர்வுற்றயர்தல்சிறிதும்இலனாயின்சொல்
மைந்தனுளனென்றதனால்மகிழ்வோடிவண்வந்தனனால்
அந்தமுனிசொற்றமையும்அண்ணல்வனம்வருதலும்
என்றன்உயிர்வீகுதலும்இறையுந்தவறாவென்றான், (௯௰)

இம்மாமொழிதந்தரசனி -ருற்றிடுபோழ்தினிலச்
செம்மாமயில்கோசலையுந்திகையாவுணர்வோய்வினளாய்
விம்மாநெறியின்விதியின்விளைவுந்தளர்வின்றொடர்வும்
அம்மாதவனும்வினைவோடவலந்தருநெஞ்சினனாய், (௬௧)

வேறு.

உரைசெய்பெருமையுயர்தவத்தோரோங்கல்
புரைசெய்மதகளிற்றான்பொற்கோயின்முன்னர்
முரைசமுழங்கமுடிசூட்டமொய்த்தாண்
டரைசரினிதிருந்தநல்லவையினானான், (௬௨)

வந்தமுனியைமுகம்நோக்கிவாள்வேந்தர்
எந்தபுகுதற்கிடையூறுண்டாயதோ
அந்தமில்சோகத்தழுதகுரல்தானென்ன
சிந்தைதெளிந்தோய்நெரியெமக்கிவ்வென்றுரைத்தார், (௬௩)

கொண்டாள்வரமிரண்டுங்கைகையர்கோன்கொம்பவட்கு
தண்டாதசெங்கோற்றயரதனுந்தானளித்தான்
ஒண்டார்முகிலைவனம்போகென்றொருப்படுத்தான்
கண்டானும்வேறில்லையீதடுத்தவாறென்றான், (௬௪)

வேந்தன்பணியினாற்கைகேசிமெய்ப்புதல்வன்
பாந்தண்மிசைக்கிடந்தபாரளிப்பானாயினான்
ஏந்துதடந்தோளிராமன்றிருமடந்தை
காந்தனொருமுறையேகாடுறைவானாயினான், (௬௫)

வாரார்முலையாருமற்றுள்ளமாந்தர்களும்
ஆராதகாதலரசர்களுமந்தணரும்
போராதவாய்மைப்பெரியோனுரைசெவியில்
சாராதமுன்னந்தயரதனைப்போல்வீழ்ந்தார், (௬௬)

புண்ணுற்றதீயிற்புகையுற்றுயிர்பதைப்ப
மண்ணுற்றயர்ந்துமறுகுற்றுடம்பெல்லாம்
கண்ணுற்றவாரிகடலுற்றதங்கிலையே
விண்ணுற்றதெம்மருங்கும்விட்டழுதபேரோசை, (௬௭)

மாதருங்கலமுமங்கலமுஞ்சிந்தித்தம்
கோதைபுடைபெயரக்கூற்றனையகண்செவப்ப
பாதமலர்செவப்பத்தாம்பதைத்துப்பார்சேர்ந்தார்
ஊதையெறியவொசிபூங்கொடியொப்பார், (௬௮)

ஆவா அரசன் அருள் இலனே ஆம் என்பார்
காவா அறத்தை யினிக்கைவிட்டேம் யாம் என்பார்
தாவாதமன்னர்தலைந்தலைவீழ்ந்தேங்கினார்
மாவாதஞ்சாய்த்தமராமரமேபோல்கின்றார். (௬௯)

கிள்ளையொடு பூவையழுதகிளர்மாடத்
துள்ளுறையும் பூசையழுத உருவறியா
பிள்ளையழுத பெரியோரை யென்சொல்ல
வள்ளல்வனம்புகுவானென்றுரைத்தமாற்றத்தால். (௭௰)

சேதாம்பற்போதனையசெங்கனிவாய்வெண்டளவப்
போதாம்பற்றோன்றப்புணர்முலைமேற்பூந்தரள
மாதாம்பற்றென்னமழைக்கண்ணீராலிபுக
நாதாம்பற்றும்மழலைநங்கைமாரேங்கினார், (௭௧)

ஆவுமழுத வதன்கன்றழுத வன்றலர்ந்த
பூவுமழுத புனற்புள்ளழுத கள்ளொழுகும்
காவுமழுத களிறழுத கால்வயப்போர்
மாவுமழுதனவம்மன்னவனைமானவே, (௭௨)

ஞானியுமுய்கலானென்றே நாயகனைக்
கானியுமென்றுரைத்த கைகேசியுங்கொடிய
கூனியுமல்லாற்கொடியார்பிறருளரோ
மேனியுமின்றிவெறுநோயராயினார். (௭௩)

தேறாதறிவழிந்தாரெங்குலப்பார்தேரோட
நீறாகிச்சுண்ணம்நிறைந்ததெருவெல்லாம்
ஆறாகியோடினகண்ணீர் அருநெஞ்சம்
கூறாகியோடாதவித்துணையேகுற்றமே, (௭௪)

மண்செய்தபாவம்உளதென்பார்மாமலர்மேற்
பெண்செய்தபாவம் அதனிற்பெரிதென்பார்
புண்செய்தநெஞ்சைவிதியென்பார்பூதலத்தோர்
கண்செய்தபாவம்கடலிற்பெரிதென்பார், (௭௫)

ஆளான்பரதன்அரசென்பார்அய்யன்இனி
மீளான்நமக்குவிதிகொடிதுகாண்என்பார்
கோளாகிவந்தவாகொற்றமுடிதான்என்பார்
மாளாதநம்மின்மனம்வலியார்ஆர்என்பார் (௭௬)

ஆதிஅரசன் அருங்கேகயன்மகள்மேல்
காதல்முதிரக்கருத்தழிந்தான்ஆம்என்பார்
சீதைமணவாளன்தன்னொடும்தீக்கானம்
போதும்அதுஅன்றேற்புகுதும்எரிஎன்பார், (௱எ)

கையால்நிலந்தடவிக்கண்ணீர்மெழுகுவார்
உய்யாள்போற்கோசலையென்றேவாதுவெய்துயிர்ப்பார்
அய்யாஇளங்கோவேஆற்றுதியோநீஎன்பார்
நெய்ஆரழல்உற்றதுற்றார்அந்நீள்நகரார், (௱அ)

தள்ளுறுவேறில்லைதன்மகற்குப்பார்கொள்வான்
எள்ளுறுதியகருமம்நேர்ந்தாளிவளென்று
கள்ளுறுசெவ்வாய்க்கணிகைகாண்கைகேசி
உள்ளுறுகாதல்இலள்போல்என்றுள்ளழிந்தார், (௱கூ)

நின்றுதவமியற்றித்தான்நீரநேர்ந்ததோ
அன்றிவ்வுலகத்துள்ஆருயிராய்வாழ்வானை
கொன்றுகளையக்குறித்தபொருள்அன்றே
நன்றுவரங்கொடுத்தநாயகற்குநன்றென்பார், (௱ய)

பெற்றுடையமண்ணவளுக்கிந்துபிறந்துலகம்
முற்றுடையகோவைப்பிரியாதுமொய்த்தீண்டி
உற்றுறைதும்யாரும்உறையவேசின்னாளில்
புற்றுடையகாடெல்லாம்நாடாகிப்போம்என்பார், (௱கக)

என்னேநிருபர்இயற்கைஇருந்தவா
தன்னேரிலாததலைமகற்குத்தாரணியை
முன்னேகொடுத்துமுறைதிறம்பத்தம்பிக்கு
பின்னேகொடுத்தாற்பிழைபாதோமெய்என்பார், (௱கஉ)

கோதைவரிவிற்குமரற்கொடுத்தநில
மாதையொருவர்புணர்வாவஞ்சித்த
பேதைசிறுவனைப்பின்பார்த்துநிற்குமா
சீதைபிரியினுந்திராத்திருவென்பார், (௱கங)

உந்தாதுநெய்வார்த்துதவாதுகாலெறிய
நந்தாவிளக்கின்நடுங்குகின்றநங்கைமார்
செந்தாமரைத்தடங்கட்செவ்விஅருள்நோக்கம்
அந்தோபிரிதுமோஆவிதியேஒஎன்பார், (௱கச)

வேறு.

கேட்டான்இளையோன்கிளர்ஞாலம்வரத்தினலே
மீட்டாள்அளித்தாள்வனம்தம்முனின்வெம்மைமுற்றி
தீட்டாதவேற்கட்சிறுதாயெனயாவராலும்
மூட்டாதகாலக்கடைத்தீயெனமூண்டெழுந்தான். (௱௧௫)

கண்ணிற்கடைத்தீஉகநெற்றியிற்கற்றைநாற
விண்ணிற்சுடருஞ்சுடர்தோன்றமெய்நீர்விரிப்ப
உண்ணிற்கும்உயிர்ப்பெனும்ஊதைபிறக்கநின்ற
அண்ணற்பெரியோன்தனதாதியின்மூர்த்திஒத்தான். (௱௧௬)

சிங்கக்குருளைக்கிடுதீஞ்சுவைஊனைநாயின்
வெங்கட்கடுங்குட்டியையூட்டவிரும்பினளே
நங்கைக்கறிவின்திறம்நன்றிதுநன்றிதென்னு
கங்கைக்கிறைவன்கடகக்கைபுடைத்துநக்கான். (௱௧௭)

சுற்றார்மணிஆர்வடிவாள்புடைதோன்றஆர்த்து
விற்றாங்கிவாளிப்பெரும்புட்டில்புறத்துவீக்கி
பற்றார்ந்தசெம்பொற்கவசம்பணிமேருவாங்கோர்
புற்றாம்எனஓங்கியதோளொடுமார்புபோர்க்க. (௱௧௮)

அடியிற்சுடர்பொற்கழல்ஆர்கலிநாணஆர்ப்ப
பொடியிற்றடவுஞ்சிறுநாண்பெரும்பூசல்ஓசை
இடியிற்றொடரக்கடலேழுமடுத்திஞ்ஞாலம்
முடியிற்குமுறும்மழைமும்மையின்மேல்முழங்க. (௱௧௯)

வானும்நிலனும்முதலீறில்வரம்பில்பூதம்
மேனின்றுகிழ்காறும்விரிந்தனவீழ்வபோல
தானும்தனதம்முனும்அல்லதுமும்மைஞாலத்
தூனும்உயிரும்உடையார்கள்உடைந்தொதுங்க. (௱௨௰)

புவிப்பாவைபரங்கெடப்போர்உவந்தோரைஎல்லாம்
அவிப்பானும்அவித்தவர்ஆக்கையைஅண்டம்முற்றக்
குவிப்பானும்எனக்கொருகோவினைக்கொற்றமௌலி
கவிப்பானும்நின்றேன்இதுகாக்குநர்காமின்என்றான். (௱௨௧)

விண்ணாட்டவர்மண்ணவர்விஞ்சையர்நாகர்மற்றும்
எண்ணாட்டவர்யாவரும்நிற்கஓர்மூவர்ஆகி
மண்ணாட்டுனர்காட்டுனர்விட்டுனர்வந்தபோதும்
பெண்ணாட்டம்ஒட்டேன்இனிப்பேர்உலகத்துள்என்னா. (௱௨௨)

காலக்கதிரோனுதிவுற்றதொர்வெம்மைகாட்டி
ஞாலத்தவர்கோமகன்அந்நகரத்துநாப்பண்
மாலைச்சிகரத்தனிமந்தரமேருமுந்தை
வேலைத்திரிகின்றதுபோற்றிரிகின்றவேலை. (௱௨௩)

வேழப்புக்கொடுபாய்விளைவித்தவினைக்குவிம்மி
தேற்றத்தெளியத்துயர்சிற்றவையாலிருந்தான்
ஆற்றற்றுணைத்தம்பிநல்விற்புயலண்டகோளம்
கீழ்ப்பெருத்துடையப்புடைபாறுறுமேறுகேட்டான். (௱௨௪)

வீறுக்கியபொற்கலன்வில்லிடஆரம்மின்ன
மாறுத்தனிச்சொற்றுளிமாரிவழங்கிவந்தான்
காறுக்கநிமிர்த்துப்புகைந்துகனன்றுபொங்கும்
ஆறுக்கனல்ஆற்றும்ஓர்அஞ்சனமேகமன்ன. (௱௨௫)

மின்னொத்தசிற்றக்கனல்விட்டுவிளங்குகின்ற
பொன்னொத்தமேனிப்புயலொத்ததடக்கையானை
என்னத்தனன்நீஇமையோரைமுனிந்திலாதாய்
சன்னத்தனாகித்தனுவேந்துதற்கேதுஎன்றான் (௱௨௬)

மெய்யைச்சிதைவித்துநின்மெய்ம்முறைநீக்கநெஞ்சம்
மையிற்கரியாளெதிர்நின்னைநின்மௌலிசூட்டல்
செய்யக்கருதித்தடைசெய்குனர்தேவரேனும்
துய்யைச்சுடுவெங்கனலிற்சுடுவான்றுணிந்தேன். (௱௨௭)

வலக்கார்முகமென்கையதாகஅவ்வானுளோரும்
விலக்கார்அவர்வந்துவிலக்கினுமென்கைவாளிக்
கிலக்காஎரிவித்துலகேழினொடேழுமன்னர்
குலக்காவலுமின்றுனக்கியான்தரக்கோடிஎன்றான். (௱௨௮)

இளையான்இதுகூறஇராமன்இயைந்தநீதி
வளையாவருநன்னெறிநின்னறிவாகுமன்றே
உளையாஅறம்வற்றிடஊழ்வழுவுற்றசீற்றம்
விளையாதநிலத்துனக்கெங்கண்விளைந்ததென்றான், (௱௨௯)

நீண்டான்அதுரைத்தலும்நித்திலம்தோற்கநக்கு
சேண்டான்தொடர்மாநிலம்நின்னதென்றுந்தைசெப்ப
பூண்டாய்பகையால்இழந்தேவனம்போதிஎன்றால்
யாண்டோஅடியேற்கினிச்சீற்றம்அடுப்பதென்றான், (௱௩௰)

நின்கட்பரிவில்லவர்நீள்வனத்துன்னைநீக்க
புன்கட்பொறியாக்கைபொறுத்துயிர்போற்றுகேனோ
என்கட்புலமுன்னுனக்கீய்ந்துவைத்தில்லையென்ற
வன்கட்புலந்தாங்கியமன்னவன்காண்கொலென்றான். (௱௬௧)

பின்குற்றமன்னும்பயக்கும்அரசென்றல்பேணேன்
முன்கொற்றமன்னன்முடிகொள்கெனக்கொள்ளாஎன்
தென்குற்றமன்றோஇகல்மன்னவன்குற்றம்யாதோ
மின்குற்றொளிரும்வெயில்தீக்கொடமைந்தவேலோய். (௱௬௨)

நதியின்பிழையன்றுநறும்புனலின்மையற்றே
பதியின்பிழையன்றுபயந்துநமைப்புரந்தாள்
மதியின்பிழையன்றுமகன்பிழையன்றுமைந்த
விதியின்பிழைநீயிதற்கென்னைவெகுண்டதென்றான். (௱௬௩)

உதிக்கும்உலையுள்உறுதீஎனஊதைபொங்க
கொதிக்கும்மனம்எங்கணம்ஆற்றுவென்கோளிழைத்தான்
மதிக்கும்மதியாய்முதல்வானவர்க்கும்வலீஇதாம்
விதிக்கும்விதியாகுமென்விற்றொழில்காண்டியென்றான். (௱௬௪)

ஆய்தந்தவனவ்வுரைகூறலுமையநின்றன்
வாய்தந்தனகூறுதியோமறைதந்தநாவால்
நீதந்ததன்றேநெறியோர்கணிலாததின்ற
தாய்தந்தையென்றவர்மேற்சலிக்கின்றதென்னே. (௱௬௫)

நற்றாதையும்நீதனிநாயகன்நீவயிற்றில்
பெற்றாயும்நீயேபிறரில்லைபிறர்க்குநல்கக்
கற்றாயிதுகாணுதியின்றெனக்கைமறித்தான்
முற்றாமதியம்மிலைந்தான்முனிந்தானையன்னான். (௱௬௬)

வரதன்பகர்வான்வரம்பெற்றவள்தானிவ்வையம்
சரதம்முடையாள்அவள்என்தனித்தாதைசெப்ப
பரதன்பெறுவான்இனியான்படைக்கின்றசெல்வம்
விரதம்இதின்நல்லதுவேறினியாவதென்றான். (௱௬௭)

ஆன்றான்பகர்வான்பினுமையவிவ்வையமையல்
தோன்றாநெறிவாழ்துணைத்தம்பியைப்போர்தொலைத்தோ
சான்றோர்புகழுந்தவத்தாதையையாணைகொண்டோ
ஈன்றாளைவென்றோஇனியிக்கதீர்வதென்றான். (௱௬௮)

செல்லுஞ்சொல்வல்லானெதிர்தம்பியுந்தெவ்வர்சொல்லும்
சொல்லுஞ்சுமந்தேனிருதோளெனச்சோம்பியோங்கும்
கல்லுஞ்சுமந்தேன்கணைப்புட்டிலுங்கட்டமைந்த
வில்லுஞ்சுமக்கப்பிறந்தேன்வெகுண்டென்னையென்றான். (௱௩௯)

நன்சொற்கடந்தாண்டெனைநாளும்வளர்த்ததாதை
தன்சொற்கடந்தெற்கரசாள்வதுதக்கதன்றால்
என்சொற்கடந்தாலுனக்கியாதுளதீனமென்றான்
தென்சொற்கடந்தான்வடசொற்கலைக்கெல்லைதேர்ந்தான். (௱௪௰)

சீற்றந்துறந்தானெதிர்நின்றுதெரிந்துசெப்பும்
மாற்றந்துறந்தான்மறைநான்கெனவாங்கல்செல்லா
நாற்றெண்டிசைவேலையில்நம்பிதனாணையாலே
ஏற்றந்தொடங்காக்கடவிற்றணிவெய்திநின்றான் (௱௪௧)

[illegible]ன்னுன்றனையையனுமாதிபொடந்தமென்று
தன்னாலுமளப்பருந்தானுந்தன்பாங்கர்நின்ற
பொன்மானுரியானுந்தழீஇயெனப்புல்லிப்பின்னைச்
சொன்மாண்புடையன்னைசுமித்திரைகோயில்புக்கான். (௱௪௨)

கண்டாள்மகனும்மகனுந்தனகண்கள்போல்வார்
தண்டாவனஞ்செல்வதற்கேசமைந்தார்கள்தம்மை
புண்டாங்குநெஞ்சத்தனளாய்ப்படிமேற்புரண்டாள்
உண்டாயதுன்பக்கடற்கெல்லையுணர்ந்திலாதாள். (௱௪௩)

சோர்வாளையோடித்தொழுதேந்தினன்றுன்பமென்னும்
ஈர்வாளைவாங்கமனந்தேற்றுதற்கேற்றசெய்வான்
பேர்வாளரசர்க்கிறைபொய்த்தனனாக்ககில்லேன்
கார்வானெடுங்கானிறைகண்டினன்மீள்வெனென்றான். (௱௪௪)

கான்புக்கிடினுங்கடல்புக்கிடினுங்கலிப்பேர்
வான்புக்கிடினுமெனக்கன்னைவமாணயோத்தி
யான்புக்கதொக்குமெனையார்கலிகிற்குமீட்டார்
ஊன்புக்குயிர்புக்குணர்புக்குலையற்கவென்றான். (௱௪௫)

தாயாற்றுகிலாள்தனையாற்றுகின்றார்கள்தம்பால்
தீயாற்றுகிலார்தனிச்சிந்தையினின்றுசெற்ற
நோயாற்றுகில்லாவுயிர்போல்நுடங்கிடையார்
மாயாப்பழியாள்தரவற்கலையேந்திவந்தார். (௱௪௬)

காராலமொப்பான்றனைக்காண்டொறுங்காண்டொறும்போய்
நீராயுகக்கண்ணினும்நெஞ்சழிகின்றநீரார்
போரவிடர்பட்டயலாருறுபீழைகண்டும்
தீராமனத்தாள்தரவந்தனசீரமென்றார். (௩௪௭)

வாணித்திலவெண்ணகையார்தரவள்ளல்தம்பி
யாணர்த்திருக்கோடிழப்பித்தவரீந்தவெல்லாம்
பூணப்பிறந்தானுநின்றானவைப்பார்வையோடும்
காணப்பிறந்தேனுநின்றேனவைகாட்டுமென்றான். (௩௪௮)

அன்னான்அவர்தந்தனஆதரத்தோடும்வந்தி
இன்றுஇடர்தீர்ந்துடன்வகொளீஎம்பிராட்டி
சொன்னால்அதுவேதுணைஆமெனத்தூயநங்கை
பொன்னார்அடிமேற்பணிந்தாள்அவளும்புகன்றாள். (௩௪௯)

ஆகாததன்றாலுனக்கவ்வனமிவ்வயோத்தி
மாகாதலிராமனம்மன்னவன்வையமீந்தும்
போகாவுயிர்த்தாயர்நம்பூங்குழற்சீதையென்றே
ஏகாயினியிவ்வயினிற்றலுமேதமென்றாள். (௩௫௰)

பின்னும்பகர்வாள்மகனேயிவன்பின்செல்தம்பி
என்னும்படியன்றடியாரினில்லேவல்செய்தி
மன்னும்நகர்க்கேயிவன்வந்திடின்வாவதன்றேல்
முன்னம்முடியென்றனள்பால்முலைசோரநின்றாள். (௩௫௧)

வேறு.

இருவருந்தொழுதனரிரண்டுகன்றெரீஇ
வெருவருமாவினிற்றாயும்விம்மினாள்
பொருவருங்குமாரரும்போயினர்புறம்
திருவனைத்துகிலொரீஇச்சீரைசாத்தியே. (௩௫௨)

தான்புனைசீரையைத்தம்பிசாத்திடத்
தேன்புனைதெரியலான்செய்கைநோக்கினான்
வான்புனையிசையினாய்மறுக்கிலாதுநீ
யான்புகல்வனையதோருறுதிகேளெனா. (௩௫௩)

அன்னையரனைவருமாழிவேந்தனும்
முன்னையரல்லர்வெந்துயரின்மூழ்கினார்
என்னையும்பிரிந்தனரிடருறாவகை
உன்னைநீயென்பொருட்டுதவுவாயென்றான். (௩௫௪)

ஆண்டகையம்மொழிபகரவன்பனும்
தூண்டகுதிரள்புயந்துளங்கத்துண்ணென
மீண்டதோருயிரிடைவிம்மவிம்முவான்
ஈண்டுனக்கடியனேன்பிழைத்ததியாதென்றான். (௱௫௫)

நீருளவெனினுளமீனும்நீலமும்
பாருளவெனினுளயாவும்பார்ப்புறில்
நாருளதனுவுளாய்நானுஞ்சீதையும்
ஆருளரெனின்உளெம்அருளுவாயென்றான். (௱௫௬)

பைந்தொடியொருத்திசொற் கொண்டுபார்மகள்
நைந்துயிர்நடுங்கவுந்நடத்திகானென
உய்ந்தனனிருந்தனனுண்மைகாவலன்
மைந்தனென்றினையசொல்வழங்கினானென. (௱௫௭)

மாறினியென்னைநீவனங்கொள்வாயென
ஏறினவெகுளியையாதுமுற்றுற
ஆறினைதவிர்கெனவையவாணையில்
கூறியமொழியினுங்கொடியதாமென்றான். (௱௫௮)

செய்துடைசெல்வமோயாதுந்தீர்ந்தமை
கைதுடைத்தேகவுங்கடவையோவையா
நெய்துடைத்தடையலர்நேயமாதர்கண்
மைதுடைத்துறைபுகும்வயங்கொள்வேலினாய். (௱௫௯)

உரைத்தபின்னிராமனென்றுரைக்கநேர்ந்திலன்
வரைத்தடந்தோளினான் வதனநோக்கினான்
விரைத்தடந்தாமரைக்கண்ணின்மிக்கநீர்
நிரைத்திடையிடைவிழநெடிதுநிற்கின்றான். (௱௬௰)

அவ்வையினரசவைநின்றுமன்பினன்
எவ்வமிலிருந்தவமுனிவனெய்தினான்
செவ்வியகுமாரருஞ்சென்னிதாழ்ந்தனர்
தௌவையம்பெருங்கடல் முனியுங்கால்வைத்தான். (௱௬௧)

அன்னவர்முகத்தினோடகத்தைநோக்கினான்
பொன்னரைச்சீரையின்பொலிவுநோக்கினான்
என்னினியுணர்த்துவதெடுத்ததுன்பத்தால்
தன்னையுமுணர்ந்திலனுணருந்தன்மையான். (௱௬௨)

வாழ்வினைநுதலியமங்கலத்துநாள்
தாழ்வினையதுவரச்சீதைசாத்தினான்
சூழ்வினைநான்முகத்தொருவர்ச்சூழினும்
ஊழ்வினையொருவராலொழிக்கற்பாலதோ. (௱௬௩)

வெவ்வினையவள்தரவிளைந்ததேயுமன்
றிவ்வினைஇவண்வரின்எய்தற்பாற்றுமன்
றெவ்வினைநிகழ்கதோர்எவரெண்ணமோ
செவ்விதின்ஒருமுறைதெரியும்பின்னென்றான். (௱௬௪)

விற்றடந்தாமரைச்செங்கண்வீரனை
உற்றடைந்தையநீஒருவிஒங்கிய
கற்றடங்கானுதியென்னிற்கண்ணகன்
மற்றடந்தானையான்வாழ்கிலானென்றான். (௱௬௫)

அன்னவன்பணிதலையேந்தியாற்றுதல்
என்னதுகடன்அவன்இடைநீக்குதல்
நின்னதுகடன்இதுநெறியும்என்றனன்
பன்னகப்பாயலுட்பள்ளிநீங்கினான். (௱௬௬)

வெவ்வரம்பையில்சுரம்வீரவென்றான்அலன்
தெவ்வரம்பனையசொற்றீட்டினாள்தனக்
கவ்வரம்பொருதவேல்அரசன்ஆய்கிலா
திவ்வரந்தருவென்என்றென்றதுண்டென்றான். (௱௬௭)

என்றனன்எந்தைஇவ்வரங்கள்ஏவினாள்
ஈன்றவள்யான்அதுசென்னிஏந்தினேன்
சான்றெனநின்றநீதடுத்தியோஎன்றான்
தோன்றியநல்லறம்நிறுத்தத்தோன்றினான். (௱௬௮)

என்றபின்முனிவன்ஒன்றியம்பநேர்ந்திலன்
நின்றனன்நெடுங்கணீர்நிலத்துநீர்த்துக
குன்றனதோளவன்தொழுதுகொற்றவன்
பொன்றிணிநெடுமதில்வாயில்போயினான். (௱௬௯)

சுற்றியசீரையன்தொடர்ந்ததம்பியன்
முற்றியஉவகையன்முளரிப்போதினும்
குற்றமில்முகத்தினன்கொள்கைகண்டவர்
உற்றதைஒருவகைஉணர்த்துவாமரோ. (௱௭௰)

அந்தணர் அருந்தவர் அவனிகாவலர்
நந்தலில் நகருளார் நாட்டுளார்கள் தம்
சிந்தனை புகல்வது தேவர் உள்ளமும்
வெந்தனர் மேல்வரும் உறுதி வேண்டலார், (௱௭௧)

ஐயனைக் காண்டலும் அணங்கனார்கள் தாம்
மொய் இளந்தளிர்களால் முளரி மேல் விழும்
மையலின் மதுகரங் கடியுமாறெனக்
கைகளின் மதர் நெடுங்கண்கள் எற்றினார், (௱௭௨)

தம்மையும் உணர்ந்திலர் தணிப்பில் அன்பினால்
அம்மையின் இருவினை அகற்றவோ அன்றேல்
விம்மிய பேருயிர் மீண்டிலாமை கொல்
செம்மல் தன் தாதையிற் சிலவர் முந்தினார்; (௱௭௩)

விழுந்தனர் சிலர் சிலர் விம்மி விம்மி மேல்
எழுந்தனர் சிலர் முகத்திழி கண்ணீரிடை
அழுந்தினர் சிலர் பதைத்தளகவல்லியின்
கொழுந்தெரியுற்றெனத் துயரங் கூர்கின்றார், (௱௭௪)

கரும்பன மொழியினர் கண்பனிக்கிலர்
வரம்பறு துயரினால் மயங்கியே கொலாம்
இரும்பன மனத்தினர் என்ன நின்றனர்
பெரும்பொருளிழந்தவர் போலும் பெற்றியார். (௱௭௫)

நெக்கன உடல் உயிர் நிலையில் நின்றில
இக்கணம் இக்கணம் என்னும் தன்மையும்
புக்கன புறத்தன புண்ணிற் கண்மலர்
உக்கன நீர் வறந்துதிர வாரியே. (௱௭௬)

இருகையிற் கரிகிகள் எண்ணிறந்தவர்
பெருகையிற் பெயர்த்தனர் தலையைப் பேணலர்
ஒருகையிற் கொண்டனர் உருட்டுகின்றனர்
சுரிகையிற் கண்மலர் சூன்றுநீக்கினார். (௱௭௭)

சிந்தின அணிமணி சிதறி வீழ்ந்தன
பைந்துணர் மாலையிற் பரிந்த மேகலை
நந்தினர் நகையொளி விளக்கம் நங்கைமார்
சுந்தர வதனமும் மதிக்குத் தோற்றவே. (௱௭௮)

அறுபதின் ஆயிரர் அரசன் தேவியர்
மறுவறு கற்பினர் மழைக்கண் ணீரினர்
சிறுவனைத் தொடர்ந்தனர் திறந்த வாயினர்
எறிதிரைக் கடலென விரங்கி யேங்கினார். (ளஎகூ)

கன்னிநன் மயில்களும் குயிற்கணங்களும்
அன்னமும் சிறையிழந் தவனி சேர்ந்தன
என்னவீழ்ந் தழுந்தனர் இராமன் அல்லது
மன்னுயிர்ப் புதல்வரை மற்றும் பெற்றிலார். (ளஅ0)

கிளையினும் நரம்பினும் நிரம்பும் கேழன
அளவிறந் துயிர்க்கவிட் டாற்றுந் தன்மையால்
தொளைபடு குழலினோ டியாழ்க்குத் தோற்றன
இளையவர் அமுதினும் இனிய சொற்களே. (ளஅக)

புகலிடம் கொடுவனம் போலும் என்றுதம்
மகன்வயின் இரங்குறும் மகளிர் வாய்களால்
அகல்மதில் நெடுமனை அரத்த ஆம்பல்கள்
பகலிடை மலர்ந்ததோர் பழனம் போன்றவே. (ளஅஉ)

திடருடைக் குங்குமச் சேறுஞ் சாந்தமும்
இடையிடை வண்டலிட் டாரம் ஈர்த்தன
மிடைமுலைக் குவடொரீஇ மேகலைத் தடங்
கடலிடைப் புகுந்தகட் கலுழி யாறரோ. (ளஅங)

தண்டலைக் கோசலைத் தலைவன் மாதரை
கண்டனன் இரவியும் கமல வாண்முகம்
விண்டலத் துறையும் நல் வேந்தற் காயினும்
உண்டிடர் உற்றபோ தென்உறு தன. (ளஅச)

தாயரும் கிளைஞரும் சார்ந்துளார்களும்
சேயரும் அணியரும் சிறந்த மாதரும்
காயெரி உற்றனர் அனைய கவ்வையர்
வாயிலும் முன்றிலும் மறைய மொய்த்தனர். (ளஅரு)

இரைத்தனர் இரைத்தெழுந் தேங்கி எங்கணும்
திரைப்பெருங் கடலென்னத் தொடர்ந்து பின்செல
உரைப்பதை உணர்கிலன் ஒழிப்பதோர்கிலன்
வரைப்புயத் தண்ணல் தன் மனையை நோக்கினான். (ளஅகூ)

நன்னெடுநளிர்முடிசூடநன்மணிப்
பொன்னெடுந்தேரொடும்பவனிபோனவன்
துன்னெடுஞ்சீரையுஞ்சுற்றிமீண்டும்அப்
பொன்னெடுந்தெருவிடைப்போதன்மேயினன். (௱அஎ)

அஞ்சனமேனியிவ்அழகற்கெய்திய
வஞ்சனைகண்டபின்வகிர்ந்துநீங்கலா
நெஞ்சினும்வலிதுயிர்நினைப்பதென்சில
நஞ்சினும்வலியநம்நலம்என்றார்சிலர். (௱அஅ)

மண்கொடுவரும்என்வழியிருந்தியாம்
எண்கொடுசுடர்வனத்தெய்தல்காணவோ
பெண்கொடுவினைசெயப்பெற்றநாட்டினிற்
கண்கொடுபிறத்தலும்கடைஎன்றார்சிலர். (௱அகூ)

முழுவதேபிறந்துலகுடையமொய்ம்பினோன்
உழுவைசேர்கானகத்துறைவென்யான்என
எழுவதேஎழுதல்கண்டிருப்பதேஇருந்
தழுவதேஅழகிதிவ்அன்பென்றார்சிலர். (௱கூ0)

வலங்கடிந்தேழையர்ஆயமன்னரை
நலங்கடிந்தறங்கெடநயக்கலீர்கள்நும்
குலங்கடிந்தான்வலிகொண்டகொண்டலை
நிலங்கடிந்தாளொடுநிகரொன்றார்சிலர் (௱கூக)

திருவனைசுற்றியசீரையாடையன்
பொருவருந்துயரினன்தொடர்ந்துபோகின்றான்
இருவரைப்பயந்தவள்ஈன்றகான்முளை
ஒருவனேஇவற்கிவ்ஊர்உறவென்றார்சிலர். (௱கூஉ)

முழுக்கலின்வலியநம்மூரிநெஞ்சினை
மழுக்களிற்பிளத்தும்என்றோடுவார்வழி
ஒழுக்கியகண்ணினிற்கலுழிஊற்றிடை
இழுக்கலில்வழுக்கிவீழ்ந்திடர்உற்றார்சிலர். (௱கூங)

பொன்னணிமணியணிமெய்யிற்போக்கினர்
மின்னெனமின்னெனவிளங்குமெய்விலைப்
பன்னிறத்துகிலினைப்பறித்துநீக்கினர்
சின்னதுண்டுகிலினைப்புனைகின்றார்சிலர். (௱கூச)

நிறைமகவுடையவர்நெறிசெல்ஐம்பொறி
குறைமகக்குறையினும்கொடுப்பராம்உயிர்
முறைமகன்வனம்புகமொழியைக்காக்கின்ற
இறைமகன்திருமனம்இரும்பென்றார்சிலர். (௱௬௫)

வாங்கியமருங்குலார்வைத்தகொங்கையர்
பூங்கொடிஒதுங்குவபோல்ஒதுங்கினர்
ஏங்கியகுரலினர்இணைந்தகாந்தளில்
தாங்கியசெங்கைதந்தலைகள்மேலுளார். (௱௬௬)

தலைக்குவட்டயன்மதிதவழுமாளிகை
நிலைக்குவட்டிடையிடைநின்றநங்கைமார்
முலைக்குவட்டிழிகணீர்ஆலிமொய்த்துக
மலைக்குவட்டகவுறுமயிலின்மாழ்கினர். (௱௬௭)

மஞ்செனஅகிற்புகைவழங்கும்மாளிகை
எஞ்சலில்சாளரத்திரங்கும்இன்சொலார்
அஞ்சனக்கண்ணின்நீர்அருவிசோர்தர
பஞ்சரத்திருந்தழும்கிளியிற்பன்னினர். (௱௬௮)

நன்னெடுங்கண்களில்நான்றநீர்த்துளி
தன்னெடுந்தாரைகள்தளத்தின்வீழ்தலால்
மன்னெடுங்குமரன்மாட்டழுங்கிமாடமும்
பொன்னெடுங்கண்குழித்தழுவபோன்றவே. (௱௬௯)

மக்களைமறந்தனர்மாதர்தாயரைப்
புக்கிடம்அறிந்திலர்புதல்வர்பூசலிட்
டுக்கனர்உயங்கினர்உருகிச்சோர்ந்தனர்
துக்கம்நின்றறிவினைச்சூறையாடவே. (௨௱)

காமரம்கனிந்தெனக்கனிந்தமென்மொழி
மாமடந்தையர்எலாம்மறுகுசேர்தலால்
தேமருநறுங்குழற்றிருவின்நீங்கிய
தாமரைஒத்தனதவளமாடமே. (௨௱௧)

மழைக்குலம்புரைகுழல்விரிந்துமண்ணுற
குழைக்குலமுகத்தியர்குழாங்கொண்டேங்கினர்
இழைக்குலம்சிதறிடஎவுண்டோய்வுறும்
உழைக்குலம்உழைப்பனஒத்தொர்பால்எலாம். (௨௱௨)

கொடிஅடங்கினமனைக்குன்றம்கோமுர
சிடிஅடங்கினமுழக்கிழந்தபல்லியம்
படிஅடங்கலும்நிமிர்பசுங்கண்மாரியால்
பொடிஅடங்கினமதிற்புறந்துவீதியே. (௨௱௩)

அட்டிலும்இழந்தனபுகைஅகிற்புகை
நெட்டிலும்இழந்தனநிறைந்தபால்கிளி
வட்டிலும்இழந்தனமகளிர்கால்மணித்
தொட்டிலும்இழந்தனமகவும்சோரவே. (௨௱௪)

ஒளிதுறந்தனமுகம்உயிர்துறந்தென
துளிதுறந்தனமுகிற்றொகையும்தூயநீர்த்
தளிதுறந்தனபரிதானயானையும்
களிதுறந்தனமலர்க்கள்ளுண்வண்டினே. (௨௱௫)

நிழல்பிரிந்தனகுடைநெடுங்கண்ஏழையர்
குழல்பிரிந்தனமலர்குமரர்தாளிணை
கழல்பிரிந்தனசினக்காமன்வாளியும்
அழல்பிரிந்தனதுணைபிரிந்தஅன்றிலே. (௨௱௬)

தாரொலிநீத்தனபுரவிதண்ணுமை
வாரொலிநீத்தனமழையின்விம்முறும்
தேரொலிநீத்தனதெருவும்தெண்டிரை
நீரொலிநீத்தனநீத்தம்போலவே. (௨௱௭)

முழஎழும்ஒலிஇலமுறையின்யாழ்நரம்
பெழஎழும்ஒலிஇலஇமைப்பில்கண்ணினர்
விழவெழும்ஒலிஇலவேறும்ஒன்றில
அழஎழும்ஒலிஇலஅரசவீதியே. (௨௱௮)

தெள்ஒலிச்சிலம்புகள்சிலம்புபொன்மனை
நள்ஒலித்திலநளிர்க்கலையும்அன்னவே
புள்ஒலித்திலபுனல்பொழிலும்அன்னவே
கள்ஒலித்திலமலர்களிறும்அன்னவே. (௨௱௯)

செய்மறந்தனபுனல்செவந்தவாய்ச்சியர்
கைம்மறந்தனபசுங்குழவிகாத்தெரி
நெய்மறந்தனநெறிஅறிஞர்யாவரும்
மெய்மறந்தனர்ஒலிமறந்தவேதமே. (௨௱௰)

ஆடினர்அழுதனர்அமுதஎழிசை
பாடினர்அழுதனர்பரிந்தகோதையர்
ஊடினர்அழுதனர் உயிரின்அன்பனைக்
கூடினர்அழுதனர் குழாங்குழாங்கொடே. (௨௰௧)

நீட்டிலகளிறுகைநீரின்வாய்புதல்
பூட்டிலபுரவிகள்புள்ளும்பார்ப்பினுக்
கீட்டில இரைபுனிற்றீன்றகன்றையும்
ஊட்டிலகறவைகன் றுருகிச்சோர்ந்தவே. (௨௰௨)

மாந்தர்தம்மொய்ம்பினின்மகளிர்கொங்கையும்
ஏந்திளநீர்களும்வறுமைஎய்தின
சாந்தம்அம்மகிணர்தம்முடியிற்றையலார்
கூந்தலின்வறுமைஅம்மலரின்கூலமே. (௨௰௩)

வேறு.

ஓடைநல்லணிமுனிந்தனஉயர்களிறுச்சி
சூடைநல்லணிமுனிந்தனகொடர்மனைகொடியின்
ஆடைநல்லணிமுனிந்தனஅம்பொன்செய்இஞ்சி
பேடைநல்லணிமுனிந்தனமென்னடைப்பிறவம். (௨௰௪)

திக்குநோக்கியதீவினைப்பயனெனச்சிந்தை
நெக்குநோக்குவோர்நல்வினைப்பயனெனநேர்வோர்
பக்கம்நோக்கலென்பருவரல்இன்பம்என்றிரண்டும்
ஒக்கநோக்கியயோகரும் அருந்துயருழந்தார். (௨௰௫)

ஒவினல்லுயிருயிர்ப்பினேடுடல்பதைத்துலைய
மேவிநல்லழகெழில்கெடவிம்மனேய்விம்ம
தாவிலம்பொறிமறுகுறத்தயரதனென்ன
ஆவிநீக்கின்றதொத்ததவ்வயோத்திமாநகரம். (௨௰௬)

உயங்கிஅந்நகர்உலைவுறஒருங்குழைசுற்ற
மயங்கியேங்கினர்வயின்வயின்வரம்பிலர்தொடர
இயங்குபல்லுயிர்க்கோர்உயிர்எனநின்றவிராமன்
தயங்குபூண்முலைச்சானகிஇருந்துழிச்சார்ந்தான். (௨௰௭

அழுதுகாயரோடருந்தவர்அந்தணர்அரசுர்
புழுதியாடியமெய்யினர்புடைவந்துபொருமு
பழுதுசீரையினுடையினவ்வரும்படிபாரா
எழுதுபாவைஅன்னாள்மனத்துணுக்கமொடெழுந்தாள். (௨௰௮)

எழுந்தநங்கையைமாமியர் தழுவினர் ஏங்கிப்
பொழிந்தவுண்கணீர்ப்புதுப்புனலாட்டினர்புலம்ப
அழிந்தசிந்தையள் அன்னமிதின்னதென்றறியாள்
வழிந்தநீர்நெடுங்கண்ணினள்வள்ளலை நோக்கி. (௨௰௯)

வேறு.

பொன்னை உற்றபொலன்கழலோய்புகழ்
மன்னை உற்றதுண்டோமற்றிவ்வன்றுயர்
என்னை உற்றதியம்பென்றியம்பினாள்
மின்னை உற்றநடுக்கத்துமேனியாள். (௨௨௰)

பொருவில்எம்பிபுவிபுரப்பான்புகல்
இருவர்ஆணையும் ஏந்தினேன் இன்றுபோய்
கருவிமாமழைக்கற்கடங்கண்டுநான்
வருவென்ஈண்டுவருந்தலைநீஎன்றான். (௨௨௧)

நாயகன்வனம்நண்ணல்உற்றான்என்றும்
மேயமண்இழந்தான்என்றும்விம்மலள்
நீவருந்தலைநீங்குவென்யான்என்ற
தீயவெஞ்சொல்செவிசுடத்தேம்புவாள். (௨௨௨)

துறந்துபோம்எனச்சொற்றசொற்றேறுமோ
உறைந்தபாற்கடற்சேக்கைஉடன்ஒரீஇ
அறம்திறம்புமென்றய்யன் அயோத்தியில்
பிறந்தபின்பும்பிரிவிலள்ஆயினாள். (௨௨௩)

அன்னதன்மையள்அய்யனும்அன்னையும்
சொன்னசெய்யத்துணிந்தது தூயதே
என்னைஎன்னைஇருத்திஎன்றான்என
உன்னஉன்னஉயிர்உமிழாநின்றாள். (௨௨௪)

வல்லரக்கரின்மால்வரைபோய்விழுந்
தல்லரக்கினுருக்கழல்காட்டயற்
கல்லரக்கும்கடுமையஅல்லநின்
சில்லரக்குண்டசேவடிப்போதென்றான். (௨௨௫)

பரிவிகந்தமனத்தொடுபற்றிலா
தொருவுகின்றனைஊழிஅருக்கனும்
எரியும்என்பதியாண்டையதீண்டுநின்
பிரிவினும்சுடுமோபெருங்காடென்றாள், (௨௨௬)

அண்ணல் அன்னசொற் கேட்டனன் அன்றியும்
உண்ணிவர்ந்தகருத்தும் உணர்ந்தனன்
கண்ணினீர்க்கடல் கைவிட நேர்கிலன்
எண்ணுகின்றனன் எற்செயற்பாற்றென. (௨௨௭)

அனையவேலை அகன்மனை எய்தினள்
புனையும்சீரம் துணிந்துபுனைந்தனள்
நினைவில்வள்ளல்பின்வந்தயல்நின்றனள்
பனையின்நீள்கரம்பற்றியகையினள். (௨௨௮)

ஏழைதன்செயல்கண்டவர்யாவரும்
வீழும்மண்ணிடைவீழ்ந்தனர்வீய்ந்திலர்
வாழும்நாள்உளஎன்றபின்மாள்வரோ
ஊழிபேரினும்உய்குநர்உய்வரோ. (௨௨௯)

தாயர்தவ்வையர்தன்துணைச்சேடியர்
ஆயம்மன்னியஅன்பினர்என்றிவர்
தீயின்மூழ்கினர்ஒத்தனர்செங்கணான்
தாயதையலைநோக்கினன்சொல்லுவான். (௨௩௰)

முல்லையும்கடல்முத்தும்எதிர்ப்பினும்
வெல்லும்வெண்ணகையாய்விளைவுன்னுவாய்
அல்லல்போதஅமைந்தனைஆதலின்
எல்லைஅற்றஇடர்தருவாய்என்றான். (௨௩௧)

கொற்றவன்அதுகூறலும்கோகிலம்
செற்றதன்னகுதலையள்சீறுவாள்
உற்றுநின்றதுயரம்இதொன்றுமே
எற்றுறந்தபின் இன்பம்கொலாம்என்றாள். (௨௩௨)

பிறிதொர்மாற்றம்பெருந்தகைபேசலன்
மறுகிவீழ்ந்தழமைந்தருமாதரும்
செறுவில்வீழ்ந்தநெடுந்தெருச்சென்றனன்
நெறிபெறுமையரிதினிநீங்குவான். (௨௩௩)

சீதைசுற்றித்திருமகள்பின்செல
மூரிவித்தகைஇளையவன்முன்செல
கானொத்தவன்போம்படிகண்டஅவ்
ஊனைஉற்றதுணர்த்தவும்ஒண்ணுமோ. (௨௩௪)

ஆரும்பின்னர்அழுதவலித்திலர்
சோரும்சிந்தையர்யாவரும்சூழ்ந்தனர்
வீரன்முன்வனம்மேவுதும்யாம்எனப்
போவொன்றல்லொவிகைமிகப்போயினர். (உருரு)

தாதைவாயில்குறுகினன்சார்தலும்
கோதைவேலவன்தாயரைக்கும்பிடா
ஆதிமன்னனை ஆற்றுமின்நீர்என்றான்
மாதராரும்விழுந்துமயங்கினர். (உருசு)

எத்தினர்தம்மகனைமருகியை
வாழ்த்தினர்இளையோனைவழுத்தினர்
காத்துநல்குமின்தெய்வதங்காள்என்று
நாத்தழும்பஅரற்றிநடுங்குவார். (உருஎ)

அன்னதாயர்அழிதிற்பிரிந்தபின்
முன்னர்நின்றமுனிவனைக்கைதொழா
தன்னதாருயிர்த்தம்பியும்தாமரைப்
பொன்னும்தானும்ஓர்தேர்மிசைப்போயினன். (உருஅ)

ச-வது. நகர்நீங்குபடலமுற்றும். ஆக-திருவிருத்தம் - [ருாகக]

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

ரு-வது. தைலம்ஆட்டுபடலம்.

ஒவியகுருசில்பின்புரவர்வுகிலார்
மாவியல்தானை அம்மன்னைநீங்கலாத்
தேவியர்ஒழிந்தனர்தெய்வமாநகர்
ஓவியம்ஒழிந்தனஉயிர்இலாமையால். (க)

கைகணீர்பரந்துகால்தொடரக்கண்உகும்
வெய்யநீர்வெள்ளத்துமெள்ளச்சேறலால்
உய்யஏழ்உலகும்ஒன்றனநீர்உழல்
தெய்வமீன்ஒத்ததச்செம்பொற்றேரரோ. (உ)

மீன்புகழ்பெறவெயில்ஒதுங்கமேதியோ
டான்புகக்கதிரவன்அந்நம்புக்கனன்
காணபுகக்காண்கிலேன்என்றுகல்லதர்
தான்புகமுடுகினன்என்னும்தன்மையான். (ங)

பகுத்தவான்மதிகொடுபதுமத்தண்ணலே
வகுத்தவாணுதலியர்வதனராசிபோல்
உகுத்தகண்ணீரினஒளியும்நீங்கின
முகுழ்த்தழகிழந்தனமுளரிஈட்டமே. (௪)

அந்தியில்வெயிலொளிஅழியவானகம்
நந்தலில்கைகயன்பயந்தநங்கைதன்
மந்தரைஉரைஎனும்கடுவின்மட்கிய
சிந்தையின்இருண்டதுசெம்மைநீங்கியே, (௫)

பரந்துமீன்அரும்பியபசலைவானகம்
அரந்தையின்முனிவரன்அறைந்தசாபத்தால்
நிரந்தரம்இமைப்பிலாநெடுங்கண்நீடிய
புரந்தரன்உருவெனப்பொலிந்ததெங்குமே. (௬)

திருநகர்க்கியோசனைஇரண்டுசென்றொரு
விரைசெறிசோலையைவிரைவின்எய்தினன்
இரதநின்றிழிந்துபின்இராமன்இன்துணை
உரைசெறிமுனிவரோடுறையும்காலையே. (௭)

வட்டம்ஒரோசனைவளைவிற்றாய்நடு
எட்டனைஇடவும்ஓர்இடம்இலர்வகை
புட்டகுசோலையின்புறத்துப்போர்த்தென
விட்டதுகுருசிலைவிடாதசேனையே. (௮)

குயின்றியகுலமணிநதியின்கூலத்தில்
பயின்றுயர்வாலுகப்பரப்பில்பைம்புலில்
வயின்றொறும்வைகினர்ஒன்றும்வாய்மடுத்
தயின்றிலர்துயின்றிலர்அழுதுவிம்மினர். (௯)

வேறு.

வாவிவிரிதாமரையின்மாமலரின்வாசக்
காவிவிரிநாண்மலர்முகுழ்த்தனையகண்ணார்
ஆவிவிரிபால்நுரையின்ஆடைஅணைஆக
நாவிவிரிகூழைஇளநவ்வியர்துயின்றார். (௰)

பெரும்பகல்வருந்தினர்பிறங்குமுலைதெங்கின்
குரும்பைகள்பொரும்செவிமங்கையர்குறங்கில்
அரும்பனையகொங்கைஅயில்அம்பனையஉண்கண்
கரும்பனையசெஞ்சொல்நவில்கன்னியர்துயின்றார். (௰௧)

பூவகம்நிறைந்தபுளினத்திரள்கள்தோறும்
மாவகிரின்உண்கணர்மடப்பிடியின்வைக
சேவகம்அமைந்தசிறுகட்கரிகள்என்னத்
தூவகலில்குந்தமறமைந்தர்கள்துயின்றார். (௱௨)

தகவும்மிருதவமும்இவைதழுவஉயர்கொழுனர்
முகமும்அவர்அருளும்நுகர்சிலர்கள்துயர்முடுக
அகவும்இளமயில்கள்உயிர்அலசியனஅனையார்
மகவுமுலைவருடஇளமகளிர்கள்துயின்றார். (௱௩)

மாகமணிவேதிகையில்மாதவிசெய்பந்தல்
கேகயநெடுங்குலம்எனச்சிலர்கிடந்தார்
பூகவனமுடுபடுகர்ப்புளினமுன்றில்
தோகைஇளஅன்னநிரையிற்சிலர்துயின்றார். (௱௪)

சம்பகநறும்பொழில்களிற்றருணவஞ்சிக்
கொம்பழுதொசிந்தனஎனச்சிலர்குழைந்தார்
வம்பளவுகொங்கையொடுவாலுகம்வளர்க்கும்
அம்பவளவல்லிகள்எனச்சிலஅசைந்தார். (௱௫)

குங்குமமலைக்குளிர்பனிக்குழுமிஎன்னத்
துங்கமுலையிற்றுகள்உறச்சிலர்துயின்றார்
அங்கைஅணையிற்பொலிவழுங்கமுகம்எல்லாம்
பங்கயமுகுழ்த்தனஎனச்சிலர்படிந்தார். (௱௬)

தொடுத்தகலிடைச்சிலர்துவண்டனர்துயின்றார்
அடுத்தஅடையிற்சிலர்அழிந்தனர்அயர்ந்தார்
உடுத்ததுகில்சுற்றொடுதலைச்சிலர்உறைந்தார்
படுத்ததளிரிற்சிலர்பசந்தனர்அசந்தார். (௱௭)

ஏனையரும்இன்னணம்இறங்கினர்உறங்கா
மானவனும்மந்திரிசுமந்திரனைவாவென்
றானமில்பெருங்குணம்ஒருங்குடையஉன்னால்
மேனிகழ்வதுண்டவுரைகேள்எனவிளம்பும். (௱௮)

வேறு.

பூண்டபேரன்பினைப்போக்குவதரிதுபோக்கா
தீண்டுநின்றேகல்பொல்லாதெந்தைநீயிரதமின்னே
தூண்டினைமீளநோக்கிச்சுவட்டடையோர்ந்தென்னையங்கே
மீண்டனனென்னமீள்வரிதுநின்னைவேண்டிற்றென்றான். (௱௯)

செவ்வியகுரிசில்கூறத் தேர்வலான்செப்புவான்அவ்
வெவ்வியதாயில்தீய விதியினில்மேலென்போலாம்
இவ்வையின்நின்னைநீக்கி இன்னுயிர்தீர்ந்தின்றேகி
அவ்வையின்அனையகாண்டற் கமைதலால்அளியன்என்றான். ()

வேறு.

தேவியும்இளவலும்தொடரச்செல்வனைப்
பூவியல்கானகம்புகஉய்த்தேன்என்கோ
கோவினைஉடன்கொடு குறுகினேன்என்கோ
யாவதுகூறுகேன்இரும்பின்நெஞ்சினேன். (௨௧)

தாருடைமலரினும் ஒதுங்கத்தக்கிலா
வாருடைமுலையொடும்மதுகைமைந்தனை
பாரிடைச்செலுத்தினேன்பழையநண்பினேன்
தேரிடைவந்தனென் தீதிலேன்என்கோ. (௨௨)

வன்புலக்கன்மன மதியில்வஞ்சனேன்
என்புலப்புறஉடைந்திரங்குமன்னன்பால்
உன்புலக்குரியசொல்உணர்த்தச்செல்கெனோ
தென்புலக்கோமகன் தூதிற்செல்கெனோ. (௨௩)

நாற்றிசைமாந்தரும்நகரமாக்களும்
தேற்றினர்கொணர்வர்உன்சிறுவன்றன்னைஎன்
றுற்றின அரசனை அய்யவெய்யஎன்
கூற்றுறழ்சொல்லினாற்கொலைசெய்வேன்கொலோ. (௨௪)

அங்கிமேல்வேள்விசெய் தரிதிற்பெற்றநின்
சிங்கவேறகன்றதென் றுணர்த்தச்செல்கெனோ
எங்கள்கோமகற்கினி என்னிற்கேகயன்
நங்கையேகடைமுறைநல்லள்போலுமால். (௨௫)

முடிவுறஇன்னனமொழிந்தபின்னரும்
அடியுறத்தழுவினன்அழுங்குபேர்அரா
இடியுறத்துவளுவதென்னும்இன்னலன்
படியுறப்புரண்டனன் பலவும்பன்னினான். (௨௬)

தடக்கையால்எடுத்தவற்றழுவிக்கண்ணநீர்
துடைத்துவேறிருத்திமற்றினையசொல்லினான்
அடக்கும்ஐம்பொறியொடுகரணத்தப்புறம்
கடக்கும்வாலுணர்வினுக்கணுகுங்காட்சியான். (௨௭)

பிறத்தலென்றுற்றபின் பெறுவயாவையும்
திறத்துளிஉணர்வதோர்செம்மைஉள்ளத்தாய்
புறத்துறுபெரும்பழிபொதுஇன்றெய்தலும்
அறத்திறம்மறத்தியோ அவலம்உண்டெனு. (உஅ)

முன்புநின்றிசைநிறீஇமுடிவுமுற்றிய
பின்புநின்றுறுதியைப் பயக்கும்பேர்அறம்
இன்பம்வந்துறும்எனின் இனியதாய்இடைத்
துன்பம்வந்துறும்எனிற்றுறக்கல்ஆகுமோ. (உகூ)

நிறப்பெரும்படைக்கலம்நிறத்தின்நேர்உற
மறப்பயன்விளைக்குறும்வன்மைஅன்றரோ.
இறப்பினும்திருஎலாம்இழப்பஎய்தினும்
துறப்பிலர்அறமெனல்சூரர்ஆவதே. (௩௰)

கான்புறம்சேறலில் அருமைகாண்டலால்
வான்பிறங்கியபுகழ்மன்னர்தொல்குலம்
யான்பிறந்தறத்தினின்றிழுக்கிற்றென்னவோ
ஊன்துறந்துயிர்குடித்துழலும்வேலினய். (௩க)

வினைக்கருமெய்ம்மையன்வனத்துள்விட்டனன்
மனைக்கரும்புதல்வனை என்றல்மன்னவன்
தனக்கருந்தவம்அதுதலைக்கொண்டேகுதல்
எனக்கருந்தவம்இதற்கிரங்கல்எந்தைநீ. (௩உ)

முந்தினைமுனிவனைஇறைஞ்சிமுற்றும்என்
வந்தனைமுதலியமாற்றம்கூறினை
எந்தையைஅவனொடும் எய்தினண்டென
சிந்தனைஉணர்த்தினென்றுசெப்புவாய். (௩௩)

முனிவனைஎம்பியைமுறையின்நின்றரும்
புனிதவேதியர்க்கும்மேல்உறைபுத்தேளிர்க்கும்
இனியனஇழைத்தினென்றியம்பிஎற்பிரி
தனிமையும்தீர்த்தினென்றனைத்திதன்மையால். (௩௪)

வெவ்வியதன்னையால் விளைந்ததீண்டொரு
கவ்வைஎன்றிறையும்தன்கருத்தின் நோக்கலன்
எவ்வருள்என்வயின்வைத்ததின்சொலால்
அவ்வருள் அவன்வயின் அருளுகென்றியால். (௩௫)

வேண்டினன் இவ்வரம் என்று மேலவன்
ஈண்டருள் எம்பிரால் நிறுவிஏகினை
பூண்டமாதவனொடும் கோயில்புக்கென
தாண்டகைவேந்தனை அவலம் ஆற்றிப்பின். (௩௬)

ஏழ்இரண்டாண்டும்நீத்தீண்டவந்துனைத்
தாழ்குவன்திருவடிகளால்ஈண்டெனச்
சூழிவெங்கடகளிற்றரசற்சொல்லிப்பின்
வாழிமாதவன்சொலால்மனம்தெருட்டுவாய். (௩௭)

முறைமையால்எற்பயந்தெடுத்தமூவர்க்கும்
குறைவிலா என்னெடுவணக்கம் கூறிப்பின்
இறைமகன் துயர்துடைத்திருத்திமாடென்றான்
மறைகளைமறைந்துபோய்வனத்துள்வைகுவான். (௩௮)

ஆள்வினை ஆண்மையிற்றிறம்பல் அன்றெனாத்
தாள்முதல்வணங்கியதனித்திண்டேர்வலான்
ஊழ்வினைவசத்துயிர்நிலைஎன்றுன்னுவான்
வாழ்வினைநோக்கியைவணங்கிநோக்கினான். (௩௯)

அன்னவள்கூறுவாள் அரசர்க்கத்தையர்க்
கென்னுடைவணக்கம்முன் இயம்பியானுடைப்
பொன்நிறப்பூவையும்கிளியும்போற்றுகென்
றுன்னும்என்தங்கையர்க்குணர்த்துவாய்என்றாள். (௪௰)

தேர்வலான் அவ்வுரைகேட்டுத்தீங்குறின்
யார்வலார்உயிர்துறப்பெளிதன்றேஎனாப்
போர்வலான்தடுக்கவும்பொருமிவிம்மினான்
சோர்விலாள் அறிவிலாத்துயர்க்குச்சோர்கின்றான், (௪௧)

ஆறினன்போற்சிறிதவலம் அவ்வழி
வேறிலா அன்பினாய்விடைதந்தீகெனா
ஏறுசேவகற்கொருதிளையமைந்தனைக்
கூறுவதியாதெனஇனையகூறினான். (௪௨)

உரைசெய்தெங்கோமகற்குறுதிஆக்கிய
தரைகெழுசெல்வத்தைத்தவிரமற்றொரு
விரைசெறிகுழலிமாட்டளித்தமெய்யனை
அரைசன்என்றின்னம்ஒன்றறையற்பாலதோ, (௪௩)

கானகம்பற்றிநற்புதல்வன்காய்உணப்
போனகம்பற்றியபொய்யில்மன்னர்க்கிங்
கூனகம்பற்றியஉயிர்கொடின்னும்போய்
வானகம்பற்றிலாவலிமைகூறென்றான். (சச)

மின்னுடன்பிறந்தவாட்பரதவேந்தற்கு
மன்னுடன்பிறந்திலென்மண்கொண்டான்கின்ற
தன்னுடன்பிறந்திலென்தம்பிமுன்அலென்
என்னுடன்பிறந்தயான்வலியென்என்றிஆல். (சரு)

ஆரியன்இளவலைநோக்கிஐயஇச்
சீரியஅல்லனசெப்பல்என்றபின்
பாரிடைவணங்கினன்பதைக்கும்நெஞ்சினன்
தேரிடைவித்தகன்சேறல்மேயினான். (சசா)

கூட்டினன்தேர்ப்பொறிகூட்டிக்கோன்முறை
பூட்டினன்புரவிஅப்புரவிபோம்நெறி
காட்டினன்காட்டித்தன்கல்விமாட்சியால்
ஓட்டினன்ஒருவரும்உணர்வுறுமலே. (சஎ)

தையல்தன்கற்பும்தன்தகவும்தம்பியும்
மையறுகருணையும்உணர்வும்வாய்மையும்
செய்யதன்வில்லுமேசேமம்ஆகக்கொண்
டையனும்போயினான்அல்லின்நாப்பணே. (சஅ)

வேறு.

பொய்வினைக்குதவும்வாழ்க்கை அரக்கனைப்பொருந்திஅன்னார்
செய்வினைக்குதவும்நட்பாற் செல்பவர்த்தடுப்பதேய்க்கும்
மைவிளக்கியதேஅன்ன வயங்கிருள்துரக்கவானம்
கைவிளக்கெடுத்ததென்ன வந்ததுகடவுட்டிங்கள். (சகூ)

மருமத்துத்தன்னைஊன்றும் மறக்கொடும்பாவம்தீர்க்கும்
உரும்ஒத்தசிலையினோனை ஒருப்படுத்துதவிநின்ற
கருமத்தின்விளைவைஎண்ணிக் களிப்பொடுகாணவந்த
தருமத்தின்வதனம்என்னப் பொலிந்ததுதனிவெண்டிங்கள். (ருய)

காம்புயர்கானம்செல்லும் கரியவன்வறுமைநோக்கி
தேம்பினகுவிந்தபோலும் செங்கழுநீரும்சேனைப்
பாம்பினதலையஆகிப் பரிந்தனகுவிந்துசாய்ந்த
ஆம்பலும்என்றபோது நின்றபோதலர்வதுண்டோ. (ருக)

அஞ்சனக்குன்றம்அன்னஅழகனும்அழகன்தன்மேல்
எஞ்சலில்பொன்போர்த்தன்னஇளவலும்இந்துஎன்பான்
வெஞ்சிலைப்புருவத்தாள்தன்மெல்லடிக்கேற்பவெண்ணூற்
பஞ்சிடைப்படுத்தால்என்னவெண்ணிலாப்பரப்பப்போனார். (ருஉ)

சிறுநிலைமருங்குல்கொங்கைஏந்தியசெல்வம்என்னும்
நெறிஇருங்கூந்தல்நங்கைசீறடிநீர்க்கொப்பூழின்
நறியனதொடர்ந்துசென்றுநடந்தெனில்நவையினீங்கும்
உறுவலிஅன்பின்நூங்கொன்றுண்டெனஉணர்வதுண்டே. (ருங)

பரிதிவானவனும்கீழ்பாற்பருவரைபற்றாமுன்னம்
திருவின்நாயகனும்தென்பால்யோசனைஇரண்டுசென்றான்
அருவிபாய்கண்ணும்புண்ணாய்அழிகின்றமனமும்தானும்
துரிதமான்தேரிற்போனான்செய்ததுசொல்லல்உற்றாம். (ருச)

கடிகைஓர்இரண்டுமூன்றிற்கடிமதில்அயோத்திகண்டான்
அடிஇணைதொழுதான்ஆதிமுனிவனைஅவனும்உற்ற
படிஎலாம்கேட்டுநெஞ்சிற்பருவரல்உழந்தான்முன்னே
முடிவெலாம்உணர்ந்தான்அந்தோமுடிந்தனன்மன்னன்என்றான். ()

நின்றுயர்பழியைஅஞ்சிநேர்ந்திலன்தடுக்கவள்ளல்
ஒன்றும்நான்உரைத்தல்நோக்கான்தருமத்திற்குறுதிபார்ப்பான்
வென்றவர்உளரோமேலைவிதியினைஎன்றுவிம்மி
பொன்றிணிமன்னன்கோயில்சுமந்திரனோடும்போனான். (ருசு)

தேர்கொண்டுவள்ளல்வந்தான்என்றுதம்சிந்தைஉந்த
ஊர்கொண்டதிங்கள்என்னமன்னனைஉழையர்சுற்ற
கார்கொண்டமேனியானைக்கண்டிலர்கண்ணில்வற்றா
நீர்கொண்டநெடுந்தேர்ப்பாகன்நிலைகண்டேநிலையிற்றீர்ந்தார். (ருஎ)

இரதம்வந்துற்றதென்றாங்கியாவரும்இயம்பலோடும்
வரதன்வந்துற்றான்என்னாமன்னனும்மயக்கம்தீர்ந்தான்
புரைதபுகமலநாட்டம்பொருக்கெனவிழித்துநோக்கி
விரதமாதவனைக்கண்டான்வீரன்வந்தனனோஎன்றான். (ருஅ)

இல்லைஎன்றுரைக்கல்ஆற்றான்ஏங்கினன்முனிவன்நின்றான்
நல்லவன்முகமேநம்பிநடந்திலன்என்னும்மாற்றம்
சொல்லலும்அரசன்சோர்ந்தான்துயர்உறுமுனிவன்நான்இவ்
அல்லல்காண்கில்லேன்என்னாஆங்குநின்றகலப்போனான். (ருகூ)

நாயகன்பின்னும்தன்தேர்ப்பாகனைநோக்கிநம்பி
சேயனேஅணியனேஎன்றுரைத்தலும்அனையான்செய்ய
வேயுயர்கானம்தானும்தம்பியும்மிதிலைப்பொன்னும்
போயினன்என்றான்என்றபோழ்தத்தேஆவிபோனான். (சுய)

இந்திரன்முதல்வர்ஆயகடவுளர்யாரும்ஈண்டி
சந்திரன்அனையதாங்கோர்மானத்தின்தலையிற்றாங்கி
வந்தனன்எந்தைதந்தைதனைமனங்களித்துவள்ளல்
உந்தியான்உலகின்உம்பர்மீள்கிலாஉலகத்துய்த்தார். (சுக)

உயிர்ப்பிலன்துடிப்பும்இல்லன்என்றுணர்ந்துருவம்தீண்டி
அயிர்த்தனன்நோக்கிமன்னற்காருயிர்இன்மைதேறி
மயிர்குலம்அனையநங்கைகோசலைமறுகிவீழ்ந்தாள்
வெயிற்சுடுகோடைதன்னில்என்பிலாஉயிரின்வேவாள். (சுஉ)

இருந்தஅந்தணனேடெல்லாம்ஈன்றவன்தன்னைஈனப்
பெருந்தவம்செய்தநங்கைகணவனிற்பிரிந்துதெய்வ
மருந்திழந்தவரின்விம்மிமணிபிரிஅரவின்மாந்தி
அருந்துணைபிறிந்தஅன்றிற்பெடைஎன்அரற்றல்உற்றாள். (சுங)

வேறு.

தானேதானேதஞ்சம்இலாதான்தகைவில்லான்
போனான்போனான்எங்களைநீத்திப்பொழுதென்னா
வானீர்சுண்டிமண்அறவற்றிமறுகுற்ற
மீனேஎன்னமெய்தடுமாறிவிழுகின்றாள். (சுச)

ஒன்றேநன்னாட்டுய்க்குவர்இந்நாட்டுயிர்காப்பார்
அன்றேமக்கட்பெற்றுயிர்வாழ்வார்க்கவம்உண்டே
இன்றேவந்தீண்டஞ்சல்எனாதெம்மகன்என்பான்
கொன்றான்அன்றோதந்தையைஎன்றாள்குலைகின்றாள். (சுரு)

நோயும்இன்றிநோன்கதிர்வாள்வேல்இவைஇன்றி
மாயும்செல்வம்மக்களினாலோமறமன்னன்
காயும்புள்ளிக்கற்கடம்நாகம்கனிவாழை
வேயும்போன்றான்என்றுமயங்காவிழுகின்றாள். (சுசு)

வடித்தாழ்கூந்தற்கேகயன்மாதேமதியாலே
பிடித்தாய்வையம்பெற்றனைபேராவரம்இன்னே
முடித்தாய்அன்றேமந்திரம்என்றாள்முகில்வாய்மின்
துடித்தால்என்னமன்னவன்மார்பிற்றுவள்கின்றாள். (சுஎ)

அருந்தேரானைச்சம்பரனைப்பண்டமர்வென்றாய்
இருந்தார்வானோர்உன் அருளாலேஇனிதிந்நாள்
விருந்தாகின்றாய்என்றனள்வேழத்தரசொன்னை
பெருந்தாள்அன்பிற்சூழ்பிடிஎன்னப்பிரிவுற்றாள். (௬௮)

வேள்விச்செல்வம்துய்த்திகொல்மெய்மைத்துணைஇன்மை
சூழ்இச்செல்வம்துய்த்திகொல்நோலாமனுநூலின்
வாழ்இச்செல்வம்துய்த்திகொல்முன்என்றனள்வானோர்
கேள்விச்செல்வம்துய்க்கவயிற்றோர்கிளைதந்தாள். (௬௯)

வேறு.

ஆழிவேந்தன்பெருந்தேவி அன்னபன்னிஅழுதாற்ற
தோழிஅன்னசுமித்திரையும் துளங்கிஏங்கிஉயிர்சோர
ஊழிதிரிவதெனக்கோயில் உலையும்வேலைமற்றொழிந்த
மாழைஉண்கட்டேவியரும் மயிலின்குழாத்தின்வந்திறைத்தார். (௭௰)

துஞ்சினானைத்தம்உயிரின் துணையைக்கண்டார்துணுக்கத்தான்
நஞ்சுகவர்ந்தால்எனஉடலம் நடுங்காநின்றார்என்றாலும்
அஞ்சிஅழுங்கிவிழுந்திலரால் அன்பிற்றறுகண்பிறிதுண்டோ
வஞ்சம்இல்லாமனத்தானை வானிற்றொடர்வான்மனம்வலித்தார். (௭௧)

அளங்கொள்அளக்கர்இரும்பரப்பில் அண்டர்உலகில்அப்புறத்தில்
விளங்கும்மாதர்கற்பினார்இவரின்யாவர்என்னநின்றார்
களங்கம்நீத்தமதிமுகத்தார் கானவெள்ளம்கால்கோப்ப
துளங்கல்இல்லாத்தனிக்குன்றிற் றொக்கமயிலிற்சூழ்ந்திருந்தார். (௭௨)

கைத்தசொல்லால்உயிர்இழந்தும் புதல்வற்பிரிந்தும்கடையோடா
மெய்த்தவேந்தன்திருவுடம்பைப் பிரியாதாற்றிவிட்டிலரால்
பித்தமயக்காம்சுறவெறியும் பிறவிப்பெரியகடல்கடக்க
உய்த்துமீண்டநாவாயிற் றாழும்போவார்ஒக்கின்றார். (௭௩)

மாதரார்கள்அறுபதினாயிரரும்உள்ளம்வலித்திருப்ப
கோதில்குணத்துக்கோசலையும் இளையமாதும்குழைந்தேங்க
சோதிமணித்தேர்ச்சுமந்திரன்சென்றரசன்தன்மைசொலவந்த
வேதமுனிவன்விதிசெய்த வினையைநோக்கிவிம்முவான். (௭௪)

செய்யக்கடவசெயற்குரிய சிறுவர்ஈண்டையார்அல்லர்
எய்தக்கடவபொருள்எய்தா திகவாஎன்னஇயல்பென்ன
மையற்கொடியாள்மகன்ஈண்டு வந்தால்முடித்தும்மற்றென்ன
தையற்கடனிற்றெடுத்தவனைத் தயிலக்கடலின்தலைஉய்த்தான். (௭௫)

தேவிமாரை இவற்குரிமை செய்யும்நாளிற்செந்தீயின்
ஆவிநீத்திர் எனநீக்கி அரிவைமார்கள் இருவரையும்
தாவில்கோயிற்றலை இருத்தித் தண்டார்ப்பரதற்கொண்டணைகென்
றேவினான்மன்னவன்ஆணை எழுதிமுடங்கல்கொடுத்தவரை. (எசு)

போனார்அவரும்கேகயர்கோன் பொன்மாநகரம்புகஎய்த
ஆனா அறிவின் அருந்தவனும் அறம்ஆர்பள்ளியதுசேர்ந்தான்
சேனாபதியிற்சுமந்திரனைச் செயற்பாற்குரியசெய்கென்று
மேனும்சொன்னமாந்தர்க்கு விளைந்ததினிநாம்விளம்புவாம். (எஎ)

மீனீர்வேலைமுரசியம்ப விண்ணோர்வத்தமண்இறைஞ்ச
தூநீர்ஒளிவாள்புடைஇலங்கச் சுடர்த்தேர்ஏறித்தோன்றினான்
வானேபுக்கான் அரும்புதல்வன் மக்கள்அகன்றார்வரும்அளவும்
யானேகாப்பன்இவ்வுலகை என்பான்போலஎறிகதிரோன். (எஅ)

வருந்தாவண்ணம்வருந்தினார்மறந்தார் தம்மைவள்ளலும்அங்
கிருந்தான்என்றேஇருந்தார்கள் எல்லாம்எழுந்தார்அருள்இருக்கும்
பெருந்தாமரைக்கட்கருமுகிலைப் பெயர்ந்தார்காணார்பேதுற்றார்
பொருந்தாநயனம்பொருந்திமைப் பொன்றச்சூழ்ந்தளைப்புரண்டார்.

எட்டுத்திசையும்ஓடுவான் எழுவார்விழுவார்இடர்க்கடலுள்
விட்டுநீத்தான்நமைஎன்பார் வெய்யஅப்பன்வினைஎன்பார்
ஒட்டிப்படர்ந்ததண்டகம்இவ் உலகத்துளதன்றேஉணர்வைச்
சுட்டிச்சேர்தல்ஆற்றுதுமோ தொடர்தும்தேரின்சுவடென்பார். (அ0)

தேரின்சுவடுநோக்குவார் திருமாநகரின்மிசைதிரிய
ஊரும்திகிரிக்குறிஒற்றி உணர்ந்தார்எல்லாம்உயிர்வந்தார்
ஆரும்அஞ்சல்அய்யன்போய் அயோத்திஅடைந்தான்எனஅசனிக்
காரும்கடலும்ஒருவழிக்கொண் டார்த்தவென்னக்கடிதார்த்தார். (அக)

மானஅரவின்வாய்த்திய வளைவான்தொளைவாள்எயிற்றின்வழி
ஆனகடுவுக்கருமருந்தா அருந்தும்அமுதம்பெற்றுயர்ந்து
போனபொழுதிற்புகுந்தஉயிர் பொறுத்தார்ஒத்தார்பொருவரிய
வேனில்மதனைமதன்அழித்தான் மீண்டான்என்னஆண்டையியார். ()

ஆறுசெல்லச்செல்லத்தேர் ஆழிகண்டார்அயல்அப்பால்
வேறுசென்றநெறிகாணார் விம்மாநின்றஉவகையர்ஆய்
மாறிஉலகம்வகுத்தநாள் வரம்புகடந்துமண்முழுதும்
ஏறிஒடுங்கும்எறிகடல்போல் எயில்மாநகரம்எய்தினார், (அகூ)

புக்கார் அரசன் பொன்னுலகம் போனான் என்னும் பொருள் கேட்டார்
உக்கார் நெஞ்சம் உயிர் உகுத்தார் உற்ற தம் மால் உரைப்பரிதால்
தக்கான் போனான் வனம் என்னும் தகையும் உணர்ந்தார் மிகை ஆவி
அக்காலத்தே அகலுமோ அவதி என்று ஒன்று உளதானால், (௮௪)

மன்னற்கல்லார் வனம் போன மைந்தற்கல்லார் வான் கரிய
இன்னற்சிறையின் இடைப்பட்டார் இருந்தார் நின்ற அருந்தவனும்
உன்னற்கரிய பழிக்கஞ்சி அன்றே ஒழிந்ததியான் என்று
பன்னற்கரிய பல நெறியும் பகர்ந்து பதைப்பை நீக்கினான். (௮௫)

வெள்ளத்திடை வாழ் வடவனலை அஞ்சி வேலை கடவாத
பள்ளக்கடலில் முனி பணியால் பையுள் நகரம் வைகிட மேல்
வள்ளற்றுறைத பணி என்னும் வானோர் தவத்தால் வயங்கிருளின்
கள்ளிற் போன வரிசிலைக்கை நம்பி செய்கை நடத்துவாம். (௮௬)

௫-வது. தைலமாட்டுப்படலம் முற்றும். ஆக-திருவிருத்தம். [௲௱௰௬

கம்பநாட்டாழ்வார் திருவடிகளே சரணம்.

௬-வது. கங்கைப்படலம்.

வெய்யோன் ஒளி தன் மேனியின் விரி சோதியின் மறைய
பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்
மையோ மரகதமோ மறிகடலோ மழை முகிலோ
அய்யோ இவன் வடிவென்பதொர் அழியா அழகுடையான் (௧)

அளி அன்னதொர் அறல் துன்னிய குழலாள் கடல் அமிர்தின்
தெளி அன்னதொர் மொழியாள் நிறை தவம் அன்னதொர் செயலான்
வெளி அன்னதொர் இடையாளொடும் விடை அன்னதொர் நடையான்
களி அன்னமும் மட அன்னமும் கடமாடுவ கண்டான். (௨)

அஞ்சம் பையும் அய்யன் தனதலகம் பையும் அளவா
கஞ்சங்களை வெல ஆகிய நயனங்களை உடையாள்
துஞ்சும் களி வரிவண்டுகள் குழலின்படி சுழலும்
கஞ்சங்களை மஞ்சன் கழல் நகுகின்றது கண்டாள். (௩)

மாகந்தமும் மகரந்தமும் அளகந்தரும் மதியின்
பாகந்தரு நுதலாளொடு பவளந்தரும் இதழான்
மேகந்தனி வருகின்றது மின்னோடென மிளிர் பூண்
நாகந்தனி வருகின்றது பிடியோடென வருவா, (௪)

தொளைகட்டியகிளைமுட்டியசுருதிச்சுவைஅமுதின்
கிளைகட்டியகருவிக்கிளர்இசையிற்பசைநறவின்
விளைகட்டியின்மதுரித்தெழுகிளவிக்கிளர்விழிபோல்
களைகட்டவர்தளைவிட்டெறிகுவளைத்தொகைகண்டான். (௫)

அருப்பேந்தியகலசத்துணைஅமுதேந்தியமதமா
மருப்பேந்தியஎனல்ஆம்முலைமழைஏந்தியகுழலாள்
கருப்பேந்திரம்முதலாயினகண்டாள்இடர்காணாள்
பொருப்பேந்தியதோளானொடுவிளையாடினள்போனாள். (௬)

பன்னந்துகள்தரளம்தொகுபடர்பந்திகள்படுநீர்
அன்னந்துயில்வதிதண்டலைஅயல்நந்துறைபுளினம்
சின்னந்தரும்மலர்தந்தனசெறிநந்தனவனம்நன்
பொன்னந்தியநதிகண்டுளம்மகிழ்தந்தனர்போனார். (௭)

கால்பாய்வனமுதுமேதிகள்கதிர்மேய்வனகடைவாய்
பால்பாய்வனநறைபாய்வனமலர்வாய்அளிபடரச்
சேல்பாய்வனகயல்பாய்வனசெங்கால்மடஅன்னம்
போல்பாய்புனல்மடவார்படிநெடுநாடவைபோனார். (௮)

வேறு.

பரிதிபற்றியபல்கலன்முற்றினர்
மருதவைப்பின்வளம்கெழுநாடொரீஇ
சுருதிகற்றுயர்தோமிலர்சுற்றுறும்
விரிதிரைப்புனற்கங்கையைமேவினார். (௯)

கங்கைஎன்னும்கடவுட்டிருநதி
தங்கிவைகும்தபோதனர்யாவரும்
எங்கள்செல்கதிவந்ததென்றேமுறு
அங்கண்நாயகற்காணவந்தண்மினார். (௰)

பெண்ணில்நோக்கும்சுவையிற்பிறர்பிறர்க்
கெண்ணிநோக்கிஇயம்பரும்இன்பத்தை
பண்ணில்நோக்கும்பராஅமுதைப்பசுங்
கண்ணில்நோக்கினர்உள்ளம்களிக்கின்றார், (௰௧)

எதிர்கொடேத்தினர்இன்இசைபாடினர்
வெதிர்கொள்கோலினர்ஆடினர்வீரனை
கதிர்கொள்தாமரைக்கண்ணனைக்கண்ணினால்
மதுரவாரிஅமுதெனமாந்துவார், (௰௨)

மனையின்நீங்கியமக்களை வைகலும்
நினையும்நெஞ்சினர்கண்டிலர்நேடுவார்
அனையர்வந்துறஆண்டெதிர்ந்தார்களில்
இனியமாதவப்பள்ளிகொண்டெய்தினர். (கங)

பொழியும்கண்ணிற்புதுப்புனல்ஆட்டினர்
மொழியும்இன்சொலின்மொய்ம்மலர்சூட்டினர்
அழிவில்அன்பெனும்ஆர்அமிர்தூட்டினர்
வழியில்வந்தவருத்தத்தைவாட்டினர். (கச)

காயும்கானிற்கிழங்கும்கனிகளும்
தூயதேடிக்கொணர்ந்தனர்தோன்றல்நீ
ஆயகங்கைஅரும்புனல்ஆடினை
தீயைஓம்பினைசெய்அமுதென்றனர். (கரு)

மங்கையர்க்குவிளக்கன்னமானையும்
செங்கைபற்றினன்தேவரும்துன்பற
பங்கயத்தயன்பண்டுதன்பாதத்தின்
அங்கையிற்றரும்கங்கையின்ஆடினான். (கசு)

கன்னிநீக்கருங்கங்கையும்கைதொழா
பன்னிநீக்கரும்பாதகம்பாருளோர்
என்னின்நீக்குவர்யானும்இன்றெற்றந்த
உன்னின்நீக்கினென்உய்ந்தனென்யான்என்றாள். (கஎ)

வெங்கண்நாகக்கரத்தினன்வெண்ணிறக்
கங்கைவார்சடைக்கற்றையன்கற்புடை
மங்கைகாணநின்றாடுகின்றான்வகிர்த்
திங்கள்சூடியசெல்வனிற்றோன்றினான். (கஅ)

தள்ளும்நீர்ப்பெருங்கங்கைத்தரங்கத்தால்
வள்ளிநுண்ணிடைமாமலராளொடும்
வெள்ளிவெண்ணிறப்பாற்கடல்மேலைநாள்
பள்ளிநீங்கியபான்மையிற்றோன்றினான். (ககூ)

வஞ்சிநாணஇடைக்குமடநடைக்
கஞ்சிஅன்னம்ஒதுங்கஅடிஅன்ன
கஞ்சம்நீரில்ஒளிப்பக்கயல்உகப்
பஞ்சிமெல்அடிப்பாவையும்ஆடினாள். (உய)

தேவர்தேவன்செறிசடைக்கற்றையுள்
கோவைமாலைஎருக்கொடுகொன்றையின்
பூவும்நாறலள்பூங்குழற்கூந்தலின்
நாவிநாண்மலர்கங்கையும்நாறினாள். (௨௧)

நுரைக்கொழுந்தெழுந்தோங்கிநுடங்கலால்
நரைத்தகூந்தலின்நங்கைமந்தாகினி
உரைத்தசீதைத்தனிமையைஉன்னுவாள்
திரைக்கைநீட்டிச்செவிலியின்ஆட்டினாள். (௨௨)

மங்கைவார்குழற்கற்றைமழைக்குலம்
தங்குநீரிடைத்தாழ்ந்துகுழைப்பன
கங்கைஆற்றொடும்காளிந்திதன்னொடும்
பொங்குநீர்ச்சுழிபோவனபோன்றவே, (௨௩)

சுழிபட்டோங்கியதூங்கொலிஆற்றுத்தன்
விழியிற்சேல்உகள்வால்நிறவெள்ளத்து
முழுகித்தோன்றுகின்றாள்முதற்பாற்கடல்
அழுவத்தன்றெழுவாள்எனஆயினாள், (௨௪)

செய்யதாமரைத்தாள்பண்டுதீண்டலால்
வெய்யபாதகம்தீர்த்துவிளங்குவாள்
ஐயன்மேனிஎலாம்அளைந்தால்இனி
வையம்மாநரகத்திடைவைகுமே, (௨௫)

துறைநறும்புனல்ஆடிச்சுருதியோர்
உறையுள்எய்திஉணர்வுடையோர்உணர்
இறைவற்கைதொழுதேந்தெரிஓம்பிப்பின்
அறிஞர்காதற்கமைவிருந்தாகினான், (௨௬)

வருந்தித்தான்தரவந்தஅமுதையும்
அருந்தும்நீர்என்றமரரைஊட்டினான்
விருந்துமெல்அடகுண்டுவிளங்கினான்
திருந்தினார்வயிற்செய்தனதேயுமோ, (௨௭)

ஆயகாலையின்ஆயிரம்அம்பிக்கு
நாயகன்பொற்குகன்எனும்நாமத்தான்
தூயகங்கைத்துறைவிடும்தொன்மையான்
காயும்வில்லினன்கற்றிரள்தோளினான், (௨௮)

துடியன்நாயினன்தோற்செருப்பார்த்தபேர்
அடியன்அற்சிறந்தன்னநிறத்தினான்
நெடியதானைநெருங்கலின்நீர்முகில்
இடியினோடெழுந்தால்அன்னசட்டினான். (உகூ)

கொம்புதுத்தரிகொட்டுமுறைமையன்
பம்மைபம்புபடையின்பல்லவத்
தம்பன்அம்பிக்குநாதன்அழிகவுள்
தும்பிகட்டம்புரைகிளைசுற்றத்தான். (ஙய)

காழம்இட்டகுறங்கினன்கங்கையின்
ஆழம்இட்டநெடுமையினான்அரை
தாழைவிட்டசெந்தோலன்தயங்குறச்
சூழவிட்டதொடுபுலிவாலினான். (ஙக)

பற்றொடுத்தன்னபல்சூற்கவடியன்
கற்றொடுத்தன்னபோலும்கழலினான்
அற்றொடுத்தன்னகுஞ்சியன்ஆளியின்
நெற்றொடுத்துநெரிந்தபுருவத்தான். (ஙஉ)

பெண்ணைவன்செறும்பிற்பிறங்கிச்செறி
வண்ணவன்மயிர்வார்ந்துயர்முன்கையன்
கண்ணகன்தடமார்பெனும்கல்லினன்
எண்ணெய்உண்ட இருள்புரைமேனியான். (ஙங)

கச்சொடார்த்தகறைக்கதிர்வாளினன்
நச்சராவின்நடுக்குறுநோக்கினன்
பிச்சராம்அன்னபேச்சினன்இந்திரன்
வச்சிராயுதம்போலும்மருங்கினான், (ஙச)

ஊற்றுமெய்ந்நறவுனொடுமீன்நுகர்
நாற்றம்மேயநகையில்முகத்தினான்
சீற்றம்இன்றியும்தீஎழநோக்குவான்
கூற்றம்அஞ்சக்குமுறும்குரலினான். (ஙரு)

சிருங்கிபேரம்என்னத்திரைக்கங்கையின்
மருங்குதோன்றும்நகர்உடைவாழ்க்கையான்
ஒருங்குதேனொடுமீன்உபகாரத்தன்
இருந்தவள்ளலைக்காணவந்தெய்தினான். (ஙசா)

சுற்றம்அப்புறம்நிற்கச்சுடுகணை
விற்றுறந்தரைவீக்கியவாள்ஒழித்
தற்றம்நீத்தமனத்தினன் அன்பினன்
நற்றவப்பள்ளிவாயிலைநண்ணினான். (௩௭)

கூவாமுன்னம்இளையோன்குறுகிநீ
ஆவான்யார்என அன்பின் இறைஞ்சினான்
தேவாநின்கழல்சேவிக்கவந்தனென்
நாவாய்வேட்டுவன்நாயடியேன்என்றான். (௩௮)

வேறு.

நிற்றிஈண்டென்றுபுக்குநெடியவற்றொழுதுதம்பி
கொற்றவநின்னைக்காணக்குறுகினன்நிமிர்ந்தகூட்டச்
சுற்றமுந்தானும்உள்ளம் தூயவன் தாயின்நல்லான்
எற்றுநீர்க்கங்கைநாவாய்க்கிறைகுகன் ஒருவன் என்றான். (௩௯)

அண்ணலும்விரும்பிஎன்பால்அழைத்திநீஅவனைஎன்றான்
பண்ணவன்வருகஎன்னப்பரிவினன் விரைவிற்புக்கான்
கண்ணனைக்கண்ணின்நோக்கிக்கனிந்தனன் இருண்டகுஞ்சி
மண்ணுறப்பணிந்துமேனிவளைத்துவாய்புதைத்துநின்றான். (௪௰)

இருத்திஈண்டென்னலோடும்இருந்திலன் எல்லைநீத்த
அருத்தியன்தேனும்மீனும்அமுதினுக்கமைவதாகத்
திருத்தினென்கொணர்ந்தேன்என்கொல்திருவுளம்என்னவீரன்
விருத்தமாதவரைநோக்கிமுறுவலன்விளம்பல்உற்றான், (௪௧)

அரியதாம்உவப்பஉள்ளத்தன்பினால்அமைந்தகாதல்
தெரிதரக்கொணர்ந்தஎன்றால்அமிழ்தினும்சீர்த்தஅன்றே
பரிவினிற்றழீஇயஎன்னிற்பவித்திரம்எம்மனோர்க்கும்
உரியனஇனிதில்நாமும்உண்டனெம்அன்றோஎன்றான், (௪௨)

சிங்கவேறனையவீரன்பின்னரும்செப்புவான்யாம்
இங்குறைந்தெறிநீர்க்கங்கைஏறுதும்நாளையாணர்
பொங்கும்நின்சுற்றத்தோடும்போய்உவந்தினிதுன்ஊரில்
தங்கிநீநாவாயோடும்சாருதிவிடியஎன்றான். (௪௩)

கார்குலாம்நிறத்தான்கூறக்காதலன் உணர்த்துவான் இப்
பார்குலாம்செல்வநின்னை இஞ்ஞனம்பார்த்தகண்ணை
ஈர்கிலாக்கள்வனேன்யான் இன்னலின் இருக்கைநோக்கித்
தீர்கிலேன்ஆனதையசெய்குவென் அடிமைஎன்றான். (௪௪)

கோதைவிற்குரிசில்அன்னான்கூறியகொள்கைகேட்டான்
சீதையைநோக்கித்தம்பிதிருமுகம்நோக்கித்தீராக்
காதலன்ஆகும்என்றுகருணையின்மலர்ந்தகண்ணன்
தாதினும்இனியநண்பஇருத்திஈண்டெம்மொடென்றான். (௪௫)

திருநகர்தீர்ந்தவண்ணம்மானவதெரிந்திலென்ன
பருவரல்தம்பிகூறப்பரிந்தவன்பையுள்எய்தி
இருகண்நீர்அருவிசோரக்குகனும்ஆண்டிருந்தான்என்னே
பெருநிலக்கிழத்திநோற்றும்பெற்றிலள்போலும்என்னா. (௪௬)

விரிஇருட்பகையைஓட்டித்திசைகளைவென்றுமேல்நின்
றொருதனித்திகிரிஉந்திஉயர்புகழ்நிறுவிநாளும்
இருநிலத்தேவர்க்கும்உள்ளத்திருந்தனன்என்னவீய்ந்த
செருவலிவீரன்என்னச்செங்கதிர்ச்செல்வன்சென்றான். (௪௭)

மாலைவாய்நியமம்செய்துமரபுளிஇயற்றிவைகல்
வேலைவாய்அமிர்தன்னாளும்வீரனும்விரித்தநாணல்
மாலைவாய்ப்பாரின்பாயல்வைகினன்வரிவில்ஏந்திக்
காலைவாய்அளவும்தம்பிஇமைப்பிலன்காத்துநின்றான். (௪௮)

தும்பியின்குழாத்திற்சுற்றும்சுற்றத்தன்தொடுத்தவில்லன்
வெம்பிவெந்தழியாநின்றநெஞ்சினன்விழித்தகண்ணன்
தம்பிநின்றானைநோக்கித்தலைமகன்தன்மைநோக்கி
அம்பியின்தலைவன்கண்ணீர்அருவிசோர்குன்றின்நின்றான். (௪௯)

துறக்கமேமுதலஆயதூயனயாவைஏனும்
மறக்குமாநினையல்அம்மாவரம்பிலதோற்றுமாக்கள்
இறக்கும்ஆறிதுஎன்பான்போல்முன்னைநாள்இறந்தான்பின்னாள்
பிறக்கும்ஆறிதுஎன்பான்போல்பிறந்தனன்பிறவாவெய்யோன். (௫௰)

செஞ்செவேசேற்றில்தோன்றும்தாமரைதேரில்தோன்றும்
வெஞ்சுடர்ச்செல்வன்மேனிநோக்கினவிரிந்தவேறோர்
அஞ்சனநாயிறன்னஐயனைநோக்கிச்செய்ய
வஞ்சிவாழ்வதனம்என்னும்தாமரைமலர்ந்ததன்றே. (௫௧)

நாண்முதற்கமைந்தயாவும்நயந்தனன்இயற்றிநாமத்
தோண்முதற்கமைந்தவில்லான்மறையவர்தொடரப்போனான்
ஆண்முதற்கமைந்தகேண்மைஅன்பனைநோக்கிஐய
கோண்முதற்கமைந்தநாவாய்கொணருதிவிரைவின்என்றான். (௫௨)

வேறு.

ஏவிய மொழி கேளா இழிபுனல் பொழிகண்ணன்
ஆவியும் உலைகின்றான் அடிஇணை பிரிகில்லான்
காவியின் மலர்காசா கடல்மழை அனையானை
தேவியொடடி தாழாச் சிந்தனை உரைசெய்வான். (௫௩)

பொய்ம்முறை இலரேம் எம்புகலிடம் வனமே ஆல்
கொய்ம்முறை உறுதாராய் குறைவிலெம் வலியேம் ஆல்
செய்ம்முறை குற்றேவல் செய்குதும் அடியோமை
இம்முறை உறஎன்ன இனிதிரு நெடிதெம்மூர். (௫௪)

தேன்உள திணைஉண்டால் தேவரும் நுகர்தற்காம்
ஊன்உள துணைநாயேம் உயிர்உள விளையாடக்
கான்உள புனல்ஆடக் கங்கையும் உள தன்றே
நான்உள தனையும் நீ இனிதிரு நடஎம்பால். (௫௫)

தோல்உள துகில்போலும் சுவைஉள தொடர்மஞ்சம்
போல்உள பரண் வைகும் புரைஉள கடிதோடும்
கால்உள சிலைபூணும் கைஉள கலிவானின்
மேல்உள பொருள்எனும் வினையொடு கொணர்வேம் ஆல். (௫௬)

ஐயிருபத்தோடைந் தாயிரர் உளர் ஆணை
செய்குனர் சிலைவேடர் தேவரின் வலியார் ஆல்
உய்குதும் அடியேம் எம் குடிவிடை ஒருநாள் நீ
வைகுதி எனில் மேல் ஓர் வாழ்விலை பிறிதென்றான். (௫௭)

அண்ணலும் அதுகேளா அகம்நிறை அருள்மிக்கான்
வெண்ணிற நகைசெய்தான் வீரநின் உழையாம் அப்
புண்ணிய நதியாடிப் புனிதனை வழிபாடுற்
றெண்ணிய சிலநாளிற் குறுகுதும் இனிதென்றான். (௫௮)

சிந்தனை உணர்கிற்பான் சென்றனன் வினையோடும்
தந்தனன் நெடுநாவாய் தாமரை நயனத்தான்
அந்தணர் தமை எல்லாம் அருளுதிர் விடைஎன்னா
இந்துவின் நுதலாளோடிளவலொடினிதேறா. (௫௯)

விடுநதி கடிதென்றான் மெய்யுயிர் அனையானும்
முடுகினன் நெடுநாவாய் முரிதிரை நெடுநீர்வாய்
கடிதினில் மடஅன்னக் கதிஅது செலநின்றார்
இடர்உடை மறையோரும் எரிஉறு மெழுகானார், (௬௰)

பால்உடைமொழியாளும் பகலவன்அனையானும்
சேல்உடைநெடுநன்னீர் சிந்தினர்விளையாட
தோல்உடைநிமிர்கோவில்த்துழவிடஎழுநாவாய்
கால்உடைநெடுஞெண்டிற்சென்றதுகடிதம்மா. (௬௧)

சாந்தணிபுளினத்தின் தடமுலைஉயர்கங்கை
காந்தினமணிமின்னக்கடிகமிழ்கமலத்தில்
சேந்தொளிவிரியும்தெண்டிரைஎனும்நிமிர்கையால்
ஏந்தினள்ஒருதானைஏற்றினள்இனிதப்பால். (௬௨)

அத்திசைஉற்றையன்அன்பனைமுகம்நோக்கி
சித்திரகூடத்திற்செல்நெறிபகர்என்ன
பத்தியின்உயிர்ஈயும்பரிவினன்அடிதாழா
உத்தமஅடிநாயேன்ஓதுவதுளதென்றான். (௬௩)

நெறிஇடுநெறிவல்லேன் நேடினென்வழுவாமல்
நறியனகனிகாயும்நறஇவைதரவல்லேன்
உறைவிடம்அமைவிப்பேன் ஒருநொடிவரைஉம்மை
பிறிகிலென்உடன்ஏகப்பெறுகுவென்எனில்நாயேன். (௬௪)

தீயனவகையாவும்திசைதிசைசெலநூறி
தூயனஉறைகானம்துருவினென்வரவல்லேன்
மேயினபொருள்நாடித் தருகுவென்வினைமுற்றும்
ஏயினசெயவல்லேன் இருளினும்நெறிசெல்வேன். (௬௫)

கல்லுவென்மலைமேலும் கவலையின்முதல்யாவும்
செல்லுவென்நெறிதூரம் செறிபுனல்தரவல்லேன்
வில்லினம்உளென்ஒன்றும் வெருவறென்இருபோதும்
மல்லினும்உயர்தோளாய் மலர்அடிபிரியாதேன். (௬௬)

திருவுளம்எனின்மற்றென் சேனையும்உடனேகொண்
டொருவலென்இருபோதும்உறைகுவென்உளர்ஆனார்
மருவலர்எனின்முன்னே மாள்குவென்வசைஇல்லேன்
பொருவருமணிமார்பா போதுவென்உடன்என்றான். (௬௭)

அன்னவன்உரைகேளா அமலனும்உரைநேர்வான்
என்னுயிர்அனையாய்நீ இளவல்உன்இளையான்இந்
நன்னுதலவள்நின்கேள் நளிர்கடல்நிலம்எல்லாம்
உன்னுடையதுநான்உன்தொழில்உரிமையின்உள்ளேன். (௬௮

துன்புளதெனின் அன்றோசுகம்உளதது அன்றி
பின்புளதிடைமன் னும் பிரிவுளதென உன்னேல்
முன்புளெம்ஒருநால்வேம்முடிவுளதென உன்னு
அன்புளஇனிநாம்ஓர் ஐவர்கள்உளர்ஆனேம். (சுசு)

படருறவுளன்உம்பிகான்உறைபகல்எல்லாம்
உடர்உறுபகையாபோ யான்எனஉரியாய்நீ
சுடர்உறுவடிவேலாய் சொன்முறைகடவேல்யான்
வடதிசைவரும்அந்நாள் நின்உழைவருகின்றேன். (எ0)

அங்குளகிளைகாவற்கமைதியின்உளன்உம்பி
இங்குளகிளைகாவற்கியார்உளர்உரைசெய்யாய்
உன்கிளைஎனதன்றோ உறுதுயர்உறல்ஆமோ
என்கிளை இதுகாஎன் ஏவலின் இனிதென்றான். (எக)

பணிமொழிகடவாதான் பருவரல்இகவாதான்
பிணிஉடையவன்என்னும் பிரிவினன் விடைகொண்டான்
அணிஇழைமயிலோடும் ஐயனும்இளையோனும்
திணிமரம்நிறைகானிற் சேணுறநெறிசென்றார். (எஉ)

சு-வது, கங்கைப்படலம் முற்றும். ஆக திருவிருத்தம். (சுாசுக)

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

எ-வது, வனம்புகுபடலம்.

பூரியர்புணர்மாதர் பொதுமனம்எனமன்னும்
ஈரமும்உளதில்என்றறிவருஇளவேனில்
ஆரியன்வரலோடும் அமுதளவியசீதக்
காருறுகுறிமானக் காட்டியதவண்எங்கும். (க)

வெயில்இளநிலவேபோல் விரிகதிர்இடைவீச
பயில்மரம்நிழல்ஈனப் பனிபுரைதுளிமேகப்
புயல்தரஇளமென்கால் பூஅளவியதெய்த
மயில்இனம்நடம்ஆடும் வழிஇனியனபோனார். (உ)

மன்றலின்மலிகோதை மயில்இயல்இளமானே
இன்றுயில்வதிகோர்பத் தினம்விரிவனஎங்கும்
கொன்றைகள்சொரிபோதின் குப்பைகொள்குலமாலை
பொன்திணிமணிமானப் பொலிவனபலகாணாய். (ங)

பாண்இளமிஞிறுகப்படுமழைபணைஆக
நாணினதொகுபீலிகோலினநடம்ஆடல்
பூணியகினசாயல்பொலிவதுபலகண்ணில்
காணிபஎனல்ஆகும்களிமயில்அவைகாணாய். (௪)

சேந்தொளிவிரிசெவ்வாய்ப்பைங்கிளிசெங்கோலக்
காந்தளின்மலர்எறிக்கோதுவகவின்ஆரும்
மாந்தளிர்நறுமேனிமங்கைநின்மடமுன்கை
ஏந்தினஎனல்ஆகும்இயல்பினஇவைகாணாய். (௫)

நெய்ஞ்ஞிறைநெடுவேலின்நிறம்உறுதிறம்முற்றி
கைஞ்ஞிறைநிமிர்கண்ணாய்கருதினஇனம்என்றே
மெய்ஞ்ஞிறைவிரிசாயல்கண்டும்நின்விழிகண்டும்
மஞ்ஞையும்மடமானும்வருவனபலகாணாய். (௬)

பூவலர்குரவோடும்புடைதவழ்பிடவீனும்
மாவலர்சொரிசூழல்த்துயில்எழுமயில்ஒன்றின்
தூவியின்மணம்நாறத்துணைபிரிபெடைதான்அக்
சேவலொடுறஊடித்திரிவதன்இயல்காணாய். (௭)

அருந்ததிஅனையாளேஅமிர்தினும்இனியாளே
செருந்தியின்மலர்தாங்கும்செறிஇதழ்வனசோகம்
பொருந்தினகளிவண்டிற்பொதிவனபொன்ஊதும்
இருந்தையின்எழுதீஒத்தெழுவனஇயல்காணாய். (௮)

ஏந்திளமுலையாளேஎழுதருஎழிலாளே
காந்தளின்முகைகண்ணிற்கண்டொருகளிமஞ்ஞை
பாந்தள்இதெனஉன்னிக்கவ்வியபடிபாராய்
தீந்தளவுகள்செய்யும்சிறுகுறுநகைகாணாய். (௯)

குன்றுறைவயமாவின்குருளையும்இருள்சிந்திப்
பின்றினதெனல்ஆகும்பிடிதருசிறுமாவும்
அன்றலபிறிவொல்லாஅண்டர்தம்மனைஆவின்
கன்றொடுவிளையாடும்களியனபலகாணாய். (௰)

அகில்புனைகுழல்மாதேஅணிஇழைஎனல்ஆகும்
நகுமலர்நிறைமாலைக்கொம்பர்கள்நதிதோறும்
துகில்புரைநறுநீரில்த்தோய்வனதுறைஆடும்
முகிழ்இளமுலைபாரின்மூழ்குவபலகாணாய். (௧௧)

முற்றுறுமுனைகிண்டிமுயல்கிலசிலதும்பி
விற்றிருநுதல்மாதே அம்மலர்விரிகோங்கின்
சுற்றுறுமலர்ஏறித்துயில்வனசுடர்மின்னும்
பொற்றகடுறுநீலம்புரைவனபலகாணாய். (௧௨)

கூடியநறைவாயிற்கொண்டனவிழிகொள்ளா
மூடியகளிமன்னமுடுகினநெறிகாணா
ஆடியசிறைமாவண்டந்தரின் இசைமுன்னாப்
பாடியபெடைகண்ணாவருவனபலகாணாய் (௧௩)

கன்னியர்அணிகோலம்கற்றறிகுனர்என்னப்
பொன் அணிநிறவேங்கைக்கொம்பர்கள்புதுமென்பூ
அன்னமென்நடையாய்நின் அளகநன்னுதல்அப்பும்
சின்னமென்மலர்மானச்சிந்துவபலகாணாய். (௧௪)

மணங்கிளர்மலர்வாசமாருதம்வரவீசக்
கணங்கிளர்தருசுண்ணம்கல்லுடையனகானத்
தணங்கினும்இனியாம்உன் அணிவடமுலைமுன்றில்
சுணங்கினைமவைமானத்துறுவனபலகாணாய் (௧௫)

அடிஇணைபொறைகல்லாஎன்றுகொல்அதர்எங்கும்
இடைஇடைமலர்சிந்தும்இனமரம்இவைகாணாய்
கொடியினொடிளவாசக்கொம்பர்கள்குயிலாய்உன்
துடிபுரைஇடைநாணித்துவள்வனஅவைகாணாய். (௧௬)

வாள்புரைவிழியாய்உன்மலர்அடிஅணிமானத்
தாள்புரைதளிர்வைகும்தகைஞிமிறிவைகாணாய்
கோள்புரைஇருள்வாசக்குழல்புரைமழைகாணாய்
தோள்புரைஇளவேயின்தொகுதிகளவைகாணாய். (௧௭)

பூநனைசினைதுன்றிப்புள்இடைஇடைபம்பி
நாணிறநளிர்வல்லிக்கொடிஅளவிலமல்கி
மானினம்மயில்மாலைகுயிலினம்வருகானம்
தீநிகர்தொழிலாடைத்திரைபொருவனபாராய். (௧௮)

என்றனன்மடவாளோடினிதினில்விளையாடிப்
பொன்றிணிதிரள்தோளான்போயினன்நெறிபோதும்
சென்றதுகுடபால்அத்திருமலைஇது அன்றே
என்றனன்வினைவென்றோர்மேவிடம்என்லோடும். (௧௯)

அருத்தியின் அகம்விம்மும் அன்பினின் நெடுநாளில்
திருத்திய வினைமுற்றிற் றென்றனன் தெரிகின்றான்
பரத்துவன் எனும்நாமப் பரமுனி பவநோயின்
மருத்துவன் அனையானை வரவெதிர் கொளவந்தான். (௨௰)

குடையினன் நிமிர்கோலன் குண்டிகையினன் மூரிச்
சடையினன் உரிமானின் சருமன் நன்மரநாரின்
உடையினன் மயிர்நாலும் உருவினன் நெறிபேணும்
நடையினன் மறைநாலும் நடம்நவில் தருநாவான் (௨௧)

செந்தழல் புரிசெல்வன் திசைமுகமுனி செவ்வே
தந்தன உயிரெல்லாம் தன்னுயிர் எனநல்கும்
அந்தணன் உலகேழும் அமைஎனின் அமரேசன்
உந்தியின் உதவாமே உதவிடு தொழில்வல்லான். (௨௨)

அம்முனிவரலோடும் அனகனும் அலர்தூவி
மும்முறை தொழுதான் அம்முதல்வனும் எதிர்புல்லி
இம்முறை உருவோநான் எய்துவதென உள்ளம்
விம்மினன் இழிகண்ணீர் விழிவழி உகநின்றான். (௨௩)

அகலிடம் நெடிதாளும் அமைதியை அதுதிரப்
புகலிடம் எமதாகும் புரையுடை இதுநாளில்
தகவில தவவேடம் தழுவினை வருவானேன்
இகல் அடுசிலைவீர இளையவனொடும் என்றான். (௨௪)

உற்றுள பொருளெல்லாம் உணர்வுற உரைசெய்தான்
நற்றவமுனி அந்தோ விதிதரு நவைஎன்பான்
இற்றது செயல்உண்டோ இனிஎன இடர்கொண்டான்
பெற்றிலள் தவம் அந்தோ பெருநிலமகள் என்றான். (௨௫)

துப்புறழ் துவர்வாயின் தூய்மொழி மயிலோடும்
அப்புறு கடல்ஞாலம் ஆளுதி கடிதென்னா
ஒப்பறும் அரசன்னை உயர்வனம் உறவென்
றெப்பரிசுயிர் உய்ந்தான் என்துணை அவன் என்றான். (௨௬)

அல்லலும் உள இன்பம் அணுகலும் உள அன்றே
நல்லவும் உள செய்யும் நவைகளும் உள அந்தோ
இல்லைஓர் பயன்நான் இன்றிடர் உறும் இதின் என்னாப்
புல்லினன் உடனேகொண் டினிதுறை புரைபுக்கான். (௨௭)

புக்குறைவிடம்நல்கிப்பூசனைமுறைபேணி
தக்கனகனிகாயும்தந்துணைதரும்அன்பால்
தொக்கநன்முறைகூறித்தூயவன்உயிர்போலும்
மக்களின்அருள்உற்றான்மைந்தரும்மகிழ்வுற்றார். (௨௮)

வைகினர்கதிர்நாறும்அளவையின்மறையோனும்
உய்குவெம்இவனோடியாம்உடன்உறைதலின்என்பான்
செய்தனன்இனிதெல்லாம்செல்வனைமுகம்முன்னா
கொய்குலமலர்மார்பகூறுவதுளதென்றான். (௨௯)

வேறு.

நிறையும்நீர்மலர்நெடுங்கனிகிழங்குகாய்நேர்ந்த
குறையும்தீயவைதூயவைகுறைவிலஎம்மோ
ரிறையும்இவ்வழிஒருங்கினில்உயர்தவம்முயல்வார்க்
கிறையும்ஈதலாதினியதோர்இடம்அரிதின்னும் (௩௰)

கங்கையாளொடுகரியவள்நாமகள்கலந்த
சங்கம்ஆதலிற்பிரியலென்தாமரைச்செங்கண்
அங்கநாயகஅயனுக்கும்அரும்பெறற்தீர்த்தம்
எங்கள்போலியர்தரத்ததன்றிருத்திரீண்டென்றான். (௩௧)

பூண்டமாதவன்அவ்வழிவிரும்பினன்புகல
நீண்டதன்றிதுநிறைபுனல்நாட்டுக்குநடுவாம்
மாண்டசிந்தையஇவ்வழிவைகுவென்என்றால்
ஈண்டயாவரும்நெருங்குவர்என்றனன்இராமன். (௩௨)

ஆவதுள்ளதேஅய்யகேள்ஐயிரண்டமைந்த
காவதப்பொழிற்கப்புறம்கழிந்தபின்காண்டி
மேவுகாதலின்வைகுதிவிண்ணினும்இனிதால்
தேவர்கைதொழும்சித்திரகூடம்என்றுளதால். (௩௩)

என்றுகாதலின்ஏயினன்அடிதொழுதேத்தி
கொல்லைவேய்ங்குழற்கோவலர்முல்லையங்குடுமி
சென்றுசெங்கதிர்ச்செல்வனும்நடுவுறச்சிறுமான்
கன்றுநீர்நுகர்காளிந்திஎனும்நதிகண்டார். (௩௪)

ஆறுகண்டனர்அகம்மகிழ்ந்திறைஞ்சினர்அறிந்து
நீறுதோய்மணிமேனியர்நெடும்புனல்படிந்தார்
ஊறும்மென்கனிகிழங்கினோடுண்டுநீர்உண்டார்
எறிவருவதெங்கண்ம்என்றலும்இளையோன். (௩௫)

வாங்குவேய்ங்கழை துணித்தனன் மாணையின் கொடியால்
ஓங்குதெப்பம் ஒன்றமைத்ததின் உம்பரின் உலம்போல்
வீங்குதோள் அணல் தேவியோடினிது வீற்றிருப்ப
நீங்கினான் அந்தநெடுநதி இருகையால் நீந்தி (ஙசா)

ஆலைபாய்வயல் அயோத்தியர் ஆண்டகைக்கிளையான்
மாலைமால்வரைத் தோள் எனும் மந்தரம் திரிய
காலைவேலையைக் கடந்தது கழிந்தநீர்கடிதின்
மேலைவேலையிற் பாய்ந்தது மீண்டநீர் வெள்ளம். (ஙஎ)

அனையர் அப்புனல் ஏறினர் அக்கரை அணைந்தார்
புனையும் வற்கலை பொற்பினர் நெடுநெறி போனார்.
சினையும் மூலமும் வேரும் வெந்திருநிலம் தீய்ந்து
நினையும் நெஞ்சமும் சுடுவதோர் நெடுஞ்சுரம் சேர்ந்தார். (ஙஅ)

நீங்கல் ஆற்றலள் சனகி என்றன்னவர் நினையா
ஓங்குவெய்யவன் உடுபதி எனக்கதிர் உகுத்தான்
தாங்குவேங்கடத்துலவைகள் தழைகொண்டு தழைத்த
பாங்குவெங்கனல் பங்கயவனங்களாய்ப் பரந்த. (ஙகூ)

வறுத்துவித்திய அனையனவல் அயிற்பரற்கள்
பறித்துவித்திய மலர் எனக் குளிர்ந்தன பசைந்த
இறுத்தெரிந்தன வல்லிகள் இளந்தளிர் ஈன்ற
கறுத்தவாள் அராஎயிற்றினுள் அமுதுகக்களித்த. (சய)

குழுமி மேகங்கள் குமுறின குளிர் துளி கொணர்ந்த
முழுவில் வேடரும் முனிவரின் முனிகிலர் உயிரை
தழுவிநின்றன பசியில பகையில தணிந்த
உழுவையின் முலைமான் இளங்கன்றுகள் உண்ட. (சக)

கல்லைக்கிடந்தகடுவெந்தயர்கின்றகதழ்பாம்
பல்லல் உற்றில அலைபுனற்கிடந்தன அனைய
வல்லை உற்றவேய்புற்றொடும் எரிவனமணிவாழ்
புல்லெயிற்றிளங்கன்னியர் தோள் எனப் பொலிந்த. (சஉ)

படர்ந்தெழுந்தபுல் பசுநிறக்கம்பளம் பரப்பிக்
கிடந்தபோன்றன கேகயம் தோகைகள் கிளர
மடந்தைமார் என நாடகம் வலன்தொறும் நவின்ற
தொடர்ந்தபாணரிற் பாங்கிசை முரன்றன தும்பி. (சங)

காலம்இன்றியும்கனிந்தனகனிநெடுங்கந்தம்
மூலம்இன்றியும்முகிழ்த்தனநிலன்உறமுழுதும்
கோலமங்கையர்ஒத்தனகொம்பர்கள்இன்பச்
சீலம்அன்றியும்செய்தவம்வேறும்ஒன்றுளதோ. (௪௪)

எயினர்தங்கிடம்இருடிகள்இருப்பிடம்எய்ந்த
வயின்வயின்தொறும்மணிநிறக்கோபங்கள்மலர்ந்த
பயில்மரந்தொறும்பரிந்தனபேடையைப்பயிலும்
குயில்இரங்கினகுருந்தம்நின்றரும்பினமுருந்தம். (௪௫)

பந்தருட்புரைபாசறைப்பொருள்வயிற்பருவம்
தந்தகேள்வரைஉயிர்உறத்தழுவினர்பிரிந்த
கந்தஒதியர்சிந்தையிற்கொதிப்பதக்கழலோர்
வந்தபோதவர்மனம்எனக்குளிர்ந்ததவ்வனமே. (௪௬)

வெளிறுநீங்கியபாலையைமெல்லெனப்போனார்
குளிறுவான்மதிக்குழவிதன்சூல்வயிற்றெளிப்பப்
பிளிறுமேகத்தைப்பிடிஎனப்பெரும்பனைத்தடக்கை
களிறுநீட்டும்அச்சித்திரகூடத்தைக்கண்டார். (௪௭)

௭ - வது. வனம்புகுபடலம்முற்றும். ஆக திருவிருத்தம். [௭௱௯௮

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

௮ - வது சித்திரகூடப்படலம்.

நினையும்தேவர்க்கும்நமக்கும்ஒத்தொருநெறிநின்ற
அனகன்அங்கணன்ஆயிரம்பெயர்உடைஅமலன்
சனகன்மாமடமயிற்கத்ச்சந்தனம்செறிந்த
கனகமால்வரைஇயல்பெலாம்தெரிவுறக்காட்டும். (௧)

வாளும்வேலும்விட்டளாயினஅனையகண்மயிலே
தாளின்ஏலமும்மாலமும்தொடர்தருசாரல்
நீளமாமலைதுயில்வனநீர்உண்டகமஞ்சூற்
கோளமேகமும்நாகமும்தெரிகிலகாணாய். (௨)

குருதிவாளெனச்செவ்வரிபரந்தகட்குயிலே
மருவிமால்வரைஉம்பரிற்குதிக்கினறவருடை
சுருதிபோற்றெளிமரகதக்கொழுஞ்சுடர்சுற்றப்
பருதிவானவன்பசும்பரிபுரைவனபாராய். (௩)

வடங்கொள்பூண்முலைமடமயிலேமதக்கதமா
அடங்குபேழ்வயிற்றரவுரிஅமைதொறும்தொடக்கி
தடங்கள்தோறும்நின்றுடுவதண்டலைஅயோத்தி
நுடங்குமாளிகைத்துகிற்கொடிநிகர்ப்பனநோக்காய். (ச)

உவரிவாய்அன்றிப்பாற்கடல்உதவியஅமுதே
துவரிநீண்மணித்தடந்தொறும்இடந்தொறும்துவன்றி
கவரிபால்நிறவால்புடைபெயர்வனகடிதில்
பவளமால்வரைஅருவியைப்பொருவியபாராய். (ரு)

சலந்தலைக்கொண்டசீயத்தால்த்தனிமதக்கதமா
உலந்துவீழ்தலிற்சிந்தினஉதிரத்தின்மடவார்
புலந்தகாலைஅற்றுக்கனகுங்குமப்பொதியில்
கலந்தமுத்தெனவேழமுத்திமைப்பனகாணாய். (சா)

நீண்டமால்வரைமதிஉறநெடுமுடிநிவர்ந்த
தூண்டுமாமணிச்சுடர்அதன்கற்றையிற்சொருக
மாண்டவால்நிறஅருவிஅம்மழவிடைப்பாகன்
காண்டகும்சடைக்கங்கையைநிகர்ப்பனகாணாய். (எ)

தொட்டமாசுணம்சுடர்ஒளிமணியொடும்தாவி
விட்டசென்றனவிடாமதமழையனவேழம்
வட்டவேங்கையின்மலரொடும்ததைந்தனவயங்கும்]
பட்டம்நெற்றியிற்சுற்றியபோல்வனபாராய். (அ)

இழைந்தநூல்இணைமணிக்குடம்சுமக்கின்றதென்ன
குழைந்தநுண்இடைக்குவிஇளவனமுலைக்கொம்பே
தழைந்தசந்தனச்சோலைதன்செலவினைத்தடுப்ப
நுழைந்துபோகின்றதொக்கின்றமதியினைநோக்காய். (கூ)

உருகுகாதலில்த்தழைகொண்டுமழலைவண்டோச்சி
முருகுநாறுசெந்தேனினைமுழைநின்றும்வாங்கி
பெருகுசூல்இளம்பிடிக்கொருபிறைமருப்பியானை
பருகவாயினிற்கையின்நின்றளிப்பதுபாராய். (௰)

அளிக்குநாயகன்மாயைபுக்கடங்கினன்எனினும்
களிப்பில்இந்தியத்தியோகியைக்காக்கிலன்அதுபோல்
ஒளித்துநின்றுளராயினும்உருத்தெரிகின்ற
பளிக்கறைச்சிலபரிமுகமாக்களைப்பாராய். (கக)

ஆடுகின்றமாமயிலினும் அழகியகுயிலை
கூடுகின்றிலர்கொடிச்சியர் தம்மனம்கொதிப்ப
ஊடுகின்றனர்கொழுனனைஉருகினர்நோக்க
பாடுகின்றனகின்னரமிதுனங்கள்பாராய். (கஉ)

வில்லிவாங்கியசிலைஎனப்பொலிநுதல்விளக்கே
வல்லிதாம்கழைதாக்கலில்வழிந்திழிபிரசம்
கொல்லிவாங்கியகுன்றவர்கொடிநெடுங்கவலை
கல்லிவாங்கியகுழிகளைநிறைப்பனகாணாய். (கங)

ஒருவில்பெண்மைஎன்றுரைக்கின்றஉடலினுக்குயிரே
மருவுகாதலின்இனிதுடன்ஆடியமந்தி
அருவிநீர்கொடுவிசத்தான்அப்புறத்தேறி
கருவிமாமழைஉதிர்ப்பதோர்கடுவனைக்காணாய். (கச)

வீறுபஞ்சின்றிஅமுதநெய்மாட்டியவிளக்கே
சீறுவெங்கதிர்செறிந்தனபேர்கலதிரியா
மாறில்மண்டிலம்நிரப்பியமாணிக்கமணிக்கற்
பாறைமற்றொருபரிதியிற்பொலிவனபாராய். (கரு)

சீலம்இன்னதென்றருந்ததிக்கருளியதிருவே
நீலவண்டினம்படிந்தெழவளைந்துடன்நிமிர்வ
சோலைவேங்கையில்கொம்பர்கள்பொன்மலர்தூவி
காலில்நிற்றொருமுழுதழுவனநிகர்ப்பனகாணாய். (கசு)

விற்கொள்வாணுதல்விளங்கிழைஇளந்தளிர்க்கொழுந்தே
எற்கொள்மால்வரைஉம்பரின்இரும்புனம்காக்கும்
கொற்கொள்வேற்கணார்குரீஇஇனத்தெறிகுருவிந்தக்
கற்கள்வானுடைமீன்எனவீழ்வனகாணாய். (கஎ)

வரிகொள்ஒண்சிலைவயவர்தம்கணிச்சியின்மறிந்த
பரியகார்அகில்சுடநிமிர்பசும்புகைப்படலம்
அரியவேதியர்ஆகுதிப்புகையொடும்அளவி
கரியமால்வரைக்கொழுந்தெனப்படர்வனகாணாய். (கஅ)

நானநாண்மலர்நறைஅகில்நாவிதேன்நாறும்
சோனைவார்குழற்சுமைபெறுதிடுகிடைத்தோகாய்
வானயாற்றுமீன்மலர்ந்தனஎனப்புனல்வறந்த
கானயாறுகள்நணமணிஇமைப்பனகாணாய். (கசு)

மஞ்சளாவியமாணிக்கப்பாறையில்மறைவ
செஞ்செவேநெடுமரகதப்பாறையில்தெரிவ
விஞ்சைநாடியர்கொழுநரோடினர்விமலப்
பஞ்சளாவியசீறடிச்சுவடுகள்பாராய். (உ௰)

சுழிந்தசெம்பொனின்தொளைபுரைஉந்திஇன்துணையே
கொழித்தமாமணிஅருவியோடிழிவனகோலம்
அழித்துமேவியஅரம்பையர்அறல்புரைகூந்தல்
கழித்துநீக்கியகற்பகநறுமலர்காணாய். (உக)

அறைகழற்சிலைக்குன்றவர்அகன்புனம்காவற்
பறைஎடுத்தொருகடுவன்நின்றடிப்பதுபாராய்
பிறையைஎட்டினள்பிடித்திதற்கிதுபிழைஎன்று
கறைதுடைக்குறுபேதைஓர்கொடிச்சியைக்காணாய். (உஉ)

அடுத்தபல்பகல்அன்பரிற்பிரிந்தவர்என்ப
தெடுத்துநந்தமக்கியம்புவஎனக்கரிந்திருண்ட
தொடுத்தமாதவிச்சூழலிற்சூர்அரமகளிர்
படுத்துவைகியபல்லவசயனங்கள்பாராய். (உங)

நினைந்தபோதினும்அமிர்தொக்கும்நேரிழைநிறைதேன்
வனைந்தவேங்கையில்கோங்கினில்வயின்தொறும்தொடுத்து
குனிந்தஊசலிற்கொடிச்சியர்எடுத்தஇன்குறிஞ்சி
கனிந்தபாடல்கேட்டசுணமாவருவனகாணாய். (உச)

இலவும்இந்திரகோபமும்புரைஇதழ்இனியோய்
அலவும்நுண்டுளிஅருவிநீர்அரம்பையர்ஆடக்
கலவைசாந்துசெங்குங்குமம்கற்பகம்கொடுத்த
பலவும்தோய்தலிற்பரிமளம்கமிழ்வனபாராய். (உரு)

செம்பொனாற்செய்துகுலிகம்இட்டெழுதியசெப்போர்
கொம்பர்தாங்கியதெனப்பொலிவனமுலைக்கொடியே
அம்பொன்மால்வரைஅலர்கதிர்உச்சிசென்றணுக
பைம்பொன்மாமுடிமிலைச்சியதொப்பதுபாராய். (உசு)

மடந்தைமார்களில்திலதமேமணிநிறத்திணிகல்
தொடர்ந்தபாறையில்வேய்இனம்சொரிகதிர்முத்தம்
இடந்தொறும்கிடந்திமைப்பனஎக்கிளஞ்செக்கர்
படர்ந்தவானிடைத்தாரகைநிகர்ப்பனபாராய். (உஎ)

குழுவுநுண்டொளைவேயினுங்குறிநரம்பெறிவுற்
றெழுவுதண்டமிழ்யாழினும்இனியசொற்கிளியே
முழுவதும்மலர்விரியநாண்முருக்கிடைமிடைந்த
பழுவம்வெங்கனல்கதுவியதொப்பனபாராய். (௨௮)

வளைகள்காந்தளிற்பெய்தனஅனையகைம்மயிலே
தொளைகொள்தாழ்தடக்கைநெடுந்துருத்தியில்த்தூக்கி
அளவில்மூப்பினர்அருந்தவர்க்கருவிநீர்கொணர்ந்து
களபமால்கரிகுண்டிகைசொரிவனகாணாய். (௨௯)

வடுவின்மாவகிர்இவையெனப்பொலிந்தகண்மயிலே
இடுகுகண்ணினர்இடர்உறுமூப்பினர்ஏக
நெடுகுகூனல்வால்நீட்டினஉருகுறுநெஞ்சக்
கடுவன்மாதவர்க்கருநெறிகாட்டுவகாணாய். (௩௰)

பாந்தள்தேர்இவைபழிபடப்பரந்தபேர்அல்குல்
ஏந்துநூல்மணிமார்பினர்ஆகுதிக்கியைந்த
கூந்தன்மென்மயில்குறுகினநெடுஞ்சிறைகோலி
காந்துகுண்டத்தின்வயங்கெரிஎழுப்புவகாணாய். (௩௧)

அலம்புவார்குழல்ஆய்மயிற்பெண்அருங்கலமே
நலம்பெய்வேதியர்மார்பினுக்கியைவுறநாடி
சிலம்பிபஞ்சினிற்சிக்கறத்தெரிந்தநூல்தேமாம்
பலம்பெய்மந்திகள்உடன்வந்துகொடுப்பனபாராய். (௩௨)

தெரிவைமார்க்கொருகட்டளைஎனச்செய்ததிருவே
பெரியமாக்களிற்பலாக்களிற்பிறங்கியவாழை
அரியமாக்கனிகடுவன்கள்அன்புகொண்டளிப்ப
கரியமாகிழங்ககழ்ந்தனகொணர்வனகாணாய். (௩௩)

ஐவனக்குரல்தினைக்கதிர்இறுங்கவைஅவரை
மெய்வணக்குறுவேய்இனம்ஈன்றமெல்அரிசி
பொய்வணக்கியமாதவர்புரைதொறும்புகுந்துன்
கைவணத்தவாய்க்கிள்ளைதந்தளிப்பனகாணாய், (௩௪)

இடிகொள்வேழத்தைஎயிற்றொடும்எடுத்துடன்விழுங்கும்
கடியமாசுணம்கற்றறிந்தவர்எனஅடங்கி
சடைகொள்சென்னியர்தாழ்விலர்தாம்மிதித்தேற
படிகள்தாம்எனத்தாழ்வனகிடப்பனபாராய், (௩௫)

அசும்புபாய்வரை அருந்தவமுடித்தவர் துணைக்கட்
டசும்புவேய்ந்தவர் ஒத்தவர் தமக்குவிண் தருவான்
விசும்புதூர்ப்பன ஆம்என வெயில்என விளங்கும்
பசும்பொன் மானங்கள் பேரவனவருவனபாராய். (ருசு)

இனையயாவையும் எந்திழைக்கியம்பினன் காட்டி
அனையமால்வரை அருந்தவர் எதிர்வரவணங்கி
வினையின் நீங்கிய வேதியர் விருந்தினன் ஆனான்
மனையில் மெய்எனும் மாதவம்புரிந்தவன் மைந்தன் (ருஎ)

வேறு.

மாவியல் உதயம் ஆம் துளபவானவன்
மேவியபகை இருள் அவுணர் வீய்ந்துக
காவியல் குடவரைக்கால நேமிமேல்
ஏவிய திகிரி போல் இரவி ஏகினன். (ருஅ)

சக்கரம் தானவன் உடலில் தாக்குற
எக்கிய சோரியிற் பரந்த செங்கணும்
செக்கர் அத்தியவன் வாயில் தீர்ந்துவே
றுக்கவான் தனி எயிறு ஒத்த திந்துவே. (ருகூ)

ஆனனம் மகளிருக்களித்த தாமரைப்
பூநனி முகிழ்த்தன புலரி போனபின்
மீன் என விளங்கிய வெள்ளி ஆம்பல் வீ
வான் என மணித்தடம் மலர்ந்தளங்குமே. (சய)

மந்தியும் கடுவனும் மரங்கள் நோக்கின
தந்தியும் பிடிகளும் தடங்கள் நோக்கின
நிந்தையில் சகுந்தங்கள் நீளம் நோக்கின
அந்தியை நோக்கினன் அறிவை நோக்கினன். (சக)

மொய்யுறு நறுமலர் முகிழ்த்த ஆம் சில
மையறு நறுமலர் மலர்ந்த ஆம் சில
ஐயனோடு இளவற்கும் அமுதனாளுக்கும்
கைகளும் கண்களும் கமலம் போன்றவே. (சஉ)

மாலைவந்தகன்ற பின் மருங்கிலாளொடும்
வேலைவந்துறைவிடம் மேய தாம் என
கோலைவந்து உமிழ்சிலைத் தம்பி கோலிய
சாலைவந்தெய்தினன் தவத்தின் எய்தினான். (சங)

நெடுங்கழைக்குறுந்துணிநிறுவிமேல்நிரைத்
தொடுங்கவின்நெடுமுகடொழுக்கிலூழ்உற
இடுங்கவில்கைவிசித்தேற்றிஎங்கணும்
முடங்கவில்வரிச்சுமேல்விரிச்சுமூட்டியே. (௪௪)

தேக்கடைப்படலையிற்செறிவுசெய்துபின்
பூக்கிளர்நாணலின்புல்லுவேய்ந்துகீழ்
தூக்கியவேய்களிற்சுவரும்சுற்றுறப்
போக்கிமண்எறுந்தவைபுனலில்த்தீற்றியே. (௪௫)

வேறிடம்இயற்றினன்மிதிலைநாடிக்கும்
கூறினநெறிமுறைகுயிற்றிக்குங்குமச்
சேறுகொண்டழகுறத்திருத்தித்திண்சுவர்
ஆறிடுமணியொடும்கனகம்அப்பியே. (௪௬)

மயில்உடைப்பீலியின்விதானம்மேல்வகுத்
தயில்உடைச்சுரிகையால்அருகுதூக்கறுத்
தெயில்இளங்கழைகளால்இயற்றியாறிடு
செயல்உடைப்புதுமலர்பொற்பச்சிந்தியே. (௪௭)

இன்னணம்இளையவன்இழைத்தசாலையில்
பொன்நிறத்திருவொடும்குடிபுக்கான்அசோ
நன்நெடுந்திசைமுகன்அகத்தும்நம்அனோர்க்
குன்அருஉயிருளும்ஒக்கவைகுவான். (௪௮)

வே று.

மாயம்நீங்கியசிந்தனைமாமறை
தூயபாற்கடல்வைகுந்தம்சொல்லல்ஆம்
ஆயசாலைஅரும்பெறல்அன்பினன்
நேயம்நெஞ்சின்விரும்பிநிரப்பினான். (௪௯)

மேவுகானம்மிதிலையர்கோன்மகள்
பூவின்மெல்லியபாதமும்போந்தன
தாவில்எம்பிகைசாலைசமைத்தன
யாவையாதும்இலார்க்கியையாதவே. (௫௰)

என்றுசிந்தித்திளையவற்பார்த்திரு
குன்றுபோலக்குவவியதோளினாய்
என்றுகற்றனைநீஇதுபோல்என்றான்
துன்றுதாமரைக்கண்பனிசோர்கின்றான். (௫௧)

அடரும்செல்வம்அளித்தவன்ஆணையால்
படரும்நல்அறம்பாலித்திரவியல்
சுடரும்மெய்ப்புகழ்சூடினனென்னன்பதென்
இடருனக்கிழைத்தேன்நெடுநாள்என்றான். (ருஉ)

அந்தவாய்மொழிஐயன்இயம்பலும்
நொந்தசிந்தைஇளையவன்நோக்கினல்
எந்தைகாண்டிஇடரினுக்கங்குரம்
முந்திவந்துமுளைத்ததன்றேஎன்றான். (ருா)

ஆகசெய்தக்கதில்லைஅறத்தினின்
றேகலென்பதரிதென்றுமெண்ணினான்
ஓகைகொண்டவன்உள்இடர்நோக்கினன்
சோகபங்கம்துடைப்பரிதாலென. (ருச)

பின்னும்தம்பியைநோக்கிப்பெரியவன்
மன்னும்செல்வத்திற்குண்டிவாம்பிதற்
கென்னகேடிண்டிவ்எல்லைஇல்இன்பத்தை
உன்னுமேல்வரும்ஊதியத்தோடென்றான். (ருரு)

தேற்றித்தம்பியைத்தேவரும்கைதொழ
நோற்றிருந்தனன்நோன்சிலையோன்இப்பால்
ஆற்றல்மாதவன் ஆணையிற்போனவர்
கூற்றின்உற்றதுகூறல்உற்றாமரோ. (ருசு)

அ - வது. சித்திரகூடப்படலம்முற்றும். ஆக திருவிருத்தம். (எாகூச)

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

கூ-வது. பள்ளிஅடைப்படலம்,

பொருவில்தூதுவர்போயினர்பொய்யிலார்
இரவும்நன்பகலும்கடிதேகினார்
பரதன்கோயில்உற்றார்படிகாரிர்எம்
வரவுசொல்லுதிர்மன்னவற்கேஎன்றார், (க)

தூதர்வந்தனர்உங்கைசொல்லோடெனா
காதல்முந்திக்களிக்கின்றசிந்தையான்
போதுகென்எனப்புக்கவர்கைதொழ
நீதிலன்கொல் திருமுடியோன்என்றான், (உ)

வலியன்என்றவர்கூறமகிழ்ந்தனன்
இலைகொள்பூண்இளங்கோன்எம்பிரானொடும்
உலகில்செல்வத்தனோஎனஉண்டென
தலையின்வந்தினன்தாழ்கடக்கைகளே, (௩)

மற்றுங்கற்றத்துளார்க்கும்வரன்முறை
உற்றதன்மையினளிஉவந்தபின்
இற்றதாகும்எழுதருமேனியாய்
கொற்றவன்தன்திருமுகம்கொள்கென்றார், (௪)

என்றுகூறலும்எத்திஇறைஞ்சினான்
பொன்திணிந்தபொருவில்தடக்கையால்
நின்றுவாங்கிஉருகியநெஞ்சினான்
துன்றுநாண்மலர்ச்சென்னியிற்சூடினான், (௫)

சூடிச்சந்தனம்தோய்த்துடைசுற்றும்மண்
மூடுதோட்டின்முடங்கல்நிமிர்த்தனன்
ஈடுநோக்கிவந்தெய்தியதூதர்க்குக்
கோடிமேலும்நிதியம்கொடுத்தனன், (௬)

வாணிலாநகைதோன்றமயிர்புறம்
பூணவானுயர்காதலிற்பொங்கினான்
தாணிலாமலர்தூவினன்தம்முனைக்
காணலாம்எனும்ஆசைகடாவவே, (௭)

எழுகசேனைஎன்றேவினன்எய்தினன்
தொழுதுகேகயர்கோமகன்சொல்லொடும்
தழுவுதேரிடைத்தம்பியொடேறினான்
பொழுதும்நாளும்குறித்திலன்போயினான், (௮)

யானைசுற்றினதேர்இரைத்தீண்டின
மானவேந்தர்குழுவினர்வாள்உடைத்
தானைசூழ்ந்தனசங்குமுரன்றன
மீனவேலையின்விம்மினபேரியே, (௯)

கொடிநெருங்கினதொங்கல்குழுமின
வடிநெடுங்கண்மடந்தையர்ஊர்மடப்
பிடிதுவன்றினபூண்ஒளிபேர்ந்தன
இடிதுவன்றினமின்எனஎங்குமே, (௰)

பண்டியங்கள்பரந்தனபல்இயம்
கொண்டியம்பினகொண்டலில்கோதையில்
வண்டியம்பினவாளியின்வாவுறும்
செண்டியங்குபரியும்செறிந்தவே. (௧௧)

தொளைமுகத்திற்சுருதிவிளம்பின
இளைமுகத்தினன்உம்பரின்ஏகிட
விளைமுகத்தனல்வேலையின்மீதுசெல்
வளைமுகத்தனவாசியும்வந்தவே. (௧௨)

வில்லின்வேதியர்வாள்செறிவித்தகர்
மல்லின்மல்லர்சுரிகையின்வல்லவர்
கொல்லும்வேல்குந்தம்கற்றுயர்கொற்றவர்
தொல்லைவாரணப்பாகரும்சுற்றினார். (௧௩)

எறிபகட்டினம்ஆடுகள்ஏற்றைமா
குறிகொள்கோழிசிவல்குறும்பூழ்நெடும்
பொறிமயிர்க்கவுதாரிகள்போற்றுறும்
நெறியின்மாக்களும்முந்திநெருங்கினார். (௧௪)

நிறைந்தமாந்தர்நெருங்கினர்நெஞ்சினில்
பறந்துபோதும்கொல்என்றுபதைக்கின்றார்
பிறந்துதேவர்உணர்ந்துபெயர்ந்துமுன்
உறைந்தவான்உறுவார்களைஒக்கின்றார். (௧௫)

ஊன்அளைந்தஉடற்குயிர்ஆம்என
தான்அளைந்துதழுவினதண்ணுமை
தேன்அளைந்துசெவிஉறவார்த்தென
வான்அளைந்ததுமாகதர்பாடலே. (௧௬)

ஊறுகொண்டமுரசுமிழ்ஓதையை
வீறுகொண்டனவேதியர்வாழ்த்தொலி
ஏறுகொண்டெழும்மல்லர்இடிப்பினை
மாறுகொண்டனவந்திகர்ஏத்தரோ. (௧௭)

ஆறும்கானும்அகன்மலையும்கடந்
தேறிஏழ்பகல்நீந்திப்பின்எந்திரத்
தாறுபாகுமடைஉடைத்தொண்முனை
நாறுபாய்வயற்கோசலைநண்ணினான். (௧௮)

ஏர் துறந்தவயல் இளமைந்தர் தோள்
தார் துறந்தன தண்டலை நெல்லினும்
நீர் துறந்தன தாமரை நீத்தெனப்
பார் துறந்தனள் பங்கயச் செல்வியே. (௧௯)

பிதிர்ந்து சாறு பெருந்துறை மண்டிடச்
சிதிர்ந்து சிந்தி அழிந்தன தேங்கனி
முதிர்ந்து கொய்யுநர் இன்மையின் மூக்குமிழ்த்
துதிர்ந்துலர்ந்தன ஒண்மலர் ஈட்டமே. (௨௰)

ஏய்ந்தகாலம் இது இதற்காம் என
ஆய்ந்து மள்ளர் அரிகுநர் இன்மையால்
பாய்ந்த கருதப் பசுநறுந் தேறலால்
சாய்ந்தொசிந்து முளைத்தன சாலியே. (௨௧)

எட்குலா மலர் ஏசிய நாசியர்
புட்குலா வயல் பூசற் கடைசியர்
கட்கிலார் களைகாதற் கொழுநரோ
டுட்கலாம் உடையாரின் உயங்கினர். (௨௨)

ஓதுகின்றில கிள்ளையும் ஓதியர்
தூது சென்றில வந்தில தோழர்பால்
மோதுகின்றில பேரி முழாவிழா
போதுகின்றில பொன் அணிவீதியே. (௨௩)

பாடல் நீத்தன பண்தொடர் பண்குழல்
ஆடல் நீத்த அரங்கொடு அகன்புனல்
சூடல் நீத்தன சூடிகை சூளிகை
மாடம் நீத்தன மங்கலம் வள்ளையே. (௨௪)

நகை இழந்தன வாண்முகம் நாறகிற்
புகை இழந்தன மாளிகை பொங்கழற்
சிகை இழந்தன தீவிகை தேமலர்த்
தொகை இழந்தன தோகையர் ஓதியே. (௨௫)

அலர்ந்த பைங்கூழ் அகன்குளக் கீழன
மலர்ந்த வாயிற் புனல் வழங்காமையால்
உலர்ந்த வன்கண் உலோபர் கடைத்தலை
புலர்ந்து நிற்கும் பரிசிலர் போலவே. (௨௬)

நாவிநீத்தருநல்வளம் துன்னிய
பூவினீத்தெனநாடுபொலிவொரீஇ
தேவிநீத்தருஞ்சேண்னெறிதாவிட
ஆவிநீத்தஉடல்எனல்ஆயதே. (௨௭)

என்றநாட்டினைநோக்கிஇடர்உழந்
தொன்றும்உற்றதுணர்ந்திலன் உன்னுவான்
சென்றுகேட்பதொர்தீங்குளதாம்என
நின்றுநின்றுநெடிதுயிர்த்தான்அரோ. (௨௮)

மீண்டும்எய்திஅம்மெய்எனும்நல்அணி
பூண்டவேந்தன்திருமகன்புந்திதான்
தூண்டுதேரினும்முந்துறத்தூங்குவான்
நீண்டவாயில்நெடுநகர்நோக்கினன். (௨௯)

அண்டம்முற்றும்திரிந்தயர்ந்தாய்அமு
துண்டுபோதிஎன்றொண்கதிர்ச்செல்வனை
விண்டொடர்ந்துவிலக்குவபோல்வன
கண்டிலன்கொடியின்நெடுங்கானமே. (௩௰)

ஈட்டுநன்புகழ்க்கீட்டியயாவையும்
வேட்டவேட்டவர்கொண்மின்விரைந்தென
கோட்டிமாக்களைக்கூவுவபோல்வன
கேட்டிலன்முரசின்கிளர்ஓதையே. (௩௧)

கள்ளமாக்கவர்கண்ணியன்கண்டிலன்
பிள்ளைமாக்களிறும்பிடிஈட்டமும்
வள்ளைமாக்கள்நிதியும்வயிரியர்
கொள்ளைமாக்களிற்கொண்டனர்ஏகவே, (௩௨)

காவல்மன்னவன்கான்முளைகண்டிலன்
ஆவும்மாவும்அழிகவுள்வேழமும்
மேவுகாதல்நிதியும்வெறுக்கையும்
பூவின்வானவர்கொண்டனர்போகவே, (௩௩)

சூழமைந்தசுரும்பும்நரம்பும்தம்
ஏழமைந்தஇசைஇசையாமையால்
மாழைஉண்கண்மயில்எனும்சாயலார்
கூழைசோர்ந்தபொருநர்குழாங்களே (௩௪)

தேரும்மாவும்களிறும்சிவிகையும்
ஊரும்பண்டியும்ஊருநர்இன்மையால்
யாரும்இன்றிஎழில்அழிவீதிகள்
வாரிஇன்றியவாலுகஆற்றினே, (௩௫)

அன்னதன்மைஅகநகர்நோக்கினன்
பின்னைஅப்பெரியோர்தம்பெருந்தகை
மன்னன்வைகும்வளநகர்போலும்ஈ
தென்னதன்மைஇளையவனேஎன்றான், (௩௬)

வேற்றடங்கலர்விண்உறவென்றிடும்
கூற்றடங்கப்பொருநெடுங்கோளினாய்
சேற்றடங்கட்டிருவொடும்நீங்கிய
பாற்றடங்கடல்ஒத்ததுபார்என்றான், (௩௭)

குருமணிப்பூண்அரசிங்கோளரி
இருகைகூப்பிஇறைஞ்சினன்எய்திய
தொருவகைத்தன்றுறுதுயர்ஊழிவாழ்
திருநகர்த்திருதீர்ந்தனள்ஆம்என்றான், (௩௮)

அனையவேலையில்அக்கடைத்தோரண
மனையின்நீள்நெடுமங்கலவீதிகள்
நினையும்மாத்திரத்தேகியநேமியான்
தனையனும்தந்தைசார்விடம்மேவினான், (௩௯)

விருப்பின்எய்தினன்வெந்திறல்வேந்தனை
இருப்புநல்இடம்எங்கணும்கண்டிலன்
அருப்பம்அன்றிதென்றையுறவெய்தினான்
பொருப்புநாணஉயர்ந்தபுயத்தினான், (௪௰)

ஆயகாலையில்ஐயனைநாடித்தன்
நாயகையிற்றொழல்உறுவான்தனை
கூயள்அன்னைகுறுகுதிர்ஈண்டெனா
வேய்கொள்தோளிஒருத்திவிளம்பினாள், (௪௧)

வந்துதாயைஅடியில்வணங்கலும்
சிந்தைஆரத்தழுவினள்தீதிலர்
எந்தைஎன்னையர்எங்கையர்என்றனள்
அந்தம்இல்குணத்தானும்அதாம்என்றான், (௪௨)

வேறு,

மூண்டெழு காதலால் முளரித்தாள் தொழ
வேண்டினென் எய்தினென் உள்ளம் விம்மும் ஆல்
ஆண்டகை நெடுமுடி அரசர் கோமகன்
யாண்டகை யான்பணித்திர் என்றிருகைகூப்பினான். (௪௩)

ஆனவன் உரைசெய அழிவில் சிந்தையாள்
தானவர் வலிதவ நிமிர்ந்த தானை அத்
தேனமர் தெரியலான் தேவர் கைதொழ
வானகம் எய்தினன் வருந்தல் நீ என்றாள். (௪௪)

எறிந்தன கடியசொல் செவியுள் எய்தலும்
நெறிந்தலர் குஞ்சியான் நெடிது வீழ்ந்தனன்
அறிந்திலன் உயிர்த்திலன் அசனி எற்றினால்
மறிந்துயர் மாமரம் மண்ணுற்றென்னவே. (௪௫)

வாய்ஒளி மழுங்கத்தன் மலர்ந்த தாமரை
ஆய் அலர் நயனங்கள் அருவி சோர்தர
தீய் எரி செவியில் வைத்தனைய தீயசொல்
நீயலது உரைசெய நினைப்பரோ என்றான், (௪௬)

எழுந்தனன் ஏங்கினன் இரங்கிப் பின்னரும்
விழுந்தனன் விம்மினன் வெய்துயிர்த்தனன்
அழிந்தனன் அரற்றினன் அரற்றி இன்னன
மொழிந்தனன் பின்னரும் முருகிற் செவ்வியான் (௪௭)

அறந்தனை வேர் அறுத்தருளைக் கொன்றனை
சிறந்த நின் தண் அளித்திருவைத் தேசழித்
திறந்தனை ஆம் எனில் இறைவ நீதியை
மறந்தனை உனக்கிதின் மாசு மேல் உண்டோ, (௪௮)

சினக்குறும் பெறிந்தெழு காமத்தீ அவித்
தினக்குறும்பி யாவையும் எற்றி யாவர்க்கும்
மனக்குறு நெறிசெலும் வள்ளியோய் மறந்
துனக்குறு நெறிசெலல் ஒழுக்கின் பாலதோ, (௪௯)

முதலன் முதலிய முந்தையோர் பழங்
கதையையும் புதுக்கிய தலைவன் கண்ணுடை
நுதலவன் சிலைவிலின் நோன்மை நூறிய
[illegible]கல்வனே எங்களைப் பிரிந்து போயினாய், (௫௰)

செவ்வழிஉருட்டியதிகிரிமன்னவ
எவ்வழிமரபினும்இரவலாளர்தாம்
இவ்வழிஉலகினில்இன்மைகண்பினேர்
அவ்வழிஉலகினும்உளர்கொலோஅய்யா, (ருக)

பற்பகல்நிழற்றும்நின்கவிகைப்பாய்நிழல்
நிற்பனபல்உயிர்உணங்கநீநெடுங்
கற்பகநறுநிழல்காதலித்தியோ
மற்பகமலர்ந்ததோள்மன்னர்மன்னனே, (ருஉ)

இம்பர்நின்றேகினைஇருக்கும்சார்பிழந்
தும்பர்வந்துன்கழல்ஒதுங்கினர்கொல்ஆம்
சம்பரன்அனையஅத்தனைத்தானவர்
அம்பரத்தின்னமும்உளர்கொல்ஆம்ஐயா, (ருங)

இயங்கெழுதானையர்இறுத்தமாத்திறை
உயங்கல்இல்மறையவர்க்குதவிஉம்பரின்
அயங்கெழுவேள்வியோடமரர்க்காக்கிய
வயங்கெரிவளர்த்தனைவைகவல்லையோ, (ருச)

ஏழுயர்மதகளிற்றிறைவஏகினை
வாழியகரியவன்வறியன்கைஎனப்
பாழியம்புயத்துநின்பணியின்நீங்கிலா
ஆழியைஇனிஅவற்களிக்கஎண்ணியோ (ருரு)

பற்றிலைதவத்தினில்பயந்தமைந்தற்கு
முற்றுலகளித்ததுமுறையின்எய்திய
கொற்றவன்முடிமணக்கோலம்காணவும்
பெற்றிலைபோலும்நின்பெரியகண்களால், (ருசு)

ஆற்றலன்இன்னனபன்னிஆவலித்
தாற்றுறுகண்ணினன்உருகுவான்தனைத்
தேற்றினன்ஒருவகைசிறிதுதேறிய
கூற்றுறழ்வரிசிலைக்குருசில்கூறுவான், (ருஎ)

எந்தையும்யாயும்எம்பிரானும்எம்முனும்
அந்தம்இல்பெருங்குணத்திராமன்ஆதலால்
வந்தனைஅவன்கழல்வைத்தபோதலால்
சிந்தைவெங்கொடுந்துயர்தீர்கலாதென்றான், (ருஅ)

அவ்உரைகேட்டனும்அசனிஏறென
வெவ்உரைவல்லவள்மீட்டும்கூறுவாள்
தெவ்அடுசிலையினுய்தேவிதம்பிஎன்
றிவ்இருவோரொடும்கானத்தான்என்றாள். (ருசு)

வனத்தினன்என்றவள்இசைத்தமாற்றத்தை
நினைத்தனன்இருந்தனன்நெருப்புண்டான்என
வினைத்திறம்யாதினிவிளைவதின்னமும்
எனைத்துளகேட்பனதுன்பம்யான்என்றான். (சுய)

ஏங்கினன்விம்மலோடிருந்தஏந்தல்அப்
பூங்கழற்காலவன்வனத்துப்போயது
தீங்கிழைத்ததனிலோதெய்வம்சீறியோ
ஓங்கியவிதியினோயாதினோஎனு. (சுக)

தீயனஇராமனேசெய்யுமேல்அவை
தாய்செயல்அல்லவோதலத்துளோர்க்கெலாம்
போயதுதாதைவிண்புக்கபின்னரோ
ஆயதன்முன்னரோஅருளுவீர்என்றான். (சுஉ)

குருக்களைஇகழ்தலின்அன்றுகூறிய
செருக்கினால்அன்றேருதெய்வத்தாலும்அன்
றருக்கனேஅனையஅவ்அரசர்கோமகன்
இருக்கவேவனத்தவன்ஏகினான்என்றாள். (சுங)

குற்றம்ஒன்றில்லையேல்கொதித்துவேறுளோர்
செற்றதும்இல்லையேல்தெய்வத்தால்அன்றேல்
பெற்றவன்இருக்கவேபிள்ளைகான்புக
உற்றதென்பின்அவன்உலந்ததென்என்றான். (ருச)

வாக்கினால்வரம்தரக்கொண்டுமைந்தனைப்
போக்கினேன்வனத்திடைபோக்கிப்பார்உனக்
காக்கினேன்அவன்அதுபொறுக்கலாமையால்
நீக்கினான்தன்உயிர்நேமிவேந்தென்றாள். (சுரு)

சூடினமலர்க்கரம்சொல்லின்முன்செவி
கூடினபுருவங்கள்குதித்துக்கூத்துநின்
றாடினஉயிர்ப்பினோடழற்கொழுந்துகள்
ஓடினஉமிழ்ந்தனஉதிரம்கண்களே. (சுசு)

துடித்தனகபோலங்கள்சுற்றும்தீச்சுடர்
பொடித்தனமயிர்த்தொளைபுகையும்போர்த்தது
மடித்ததுவாய்நெடுமழைக்கைமண்பக
அடித்தனஒன்றொடொன்றசனிஅஞ்சவே. (௬௭)

பாதங்கள்பெயர்தொறும்பாரும்மேருவும்
போதங்கொள்நெடுந்தனிப்பொருவில்கூம்பொடு
மாதங்கம்வருகலம்மறுகிக்கால்பொர
ஓதங்கொள்கடலில்நின்றுலைவபோன்றவே. (௬௮)

அஞ்சினர்வானவர்அவுணர்அச்சத்தால்
துஞ்சினர்எனைபலசொரிமதத்தொளை
எஞ்சினதிசைக்கரிஇரவிமீண்டனன்
வெஞ்சினக்கூற்றும்தன்விழிபுதைத்ததே. (௬௯)

கொடியவெங்கோபத்தாற்கொதித்தகோளரி
கடியவள்தாய்எனக்கருதுகின்றிலன்
நெடியவன்முனியும்என்றஞ்சிநின்றனன்
இடிஉரும்அனையவெம்மொழிஇயம்புவான். (௭௰)

மாண்டனன்எந்தைஎன்தம்முன்மாதவம்
பூண்டனன்நின்கொடும்புணர்ப்பினால்என்றால்
கீண்டிலென்வாய்அதுகேட்டும்நின்றயான்
ஆண்டனனேஅன்றோஅரசைஆசையால். (௭௧)

நீயினம்இருந்தனையானும்நின்றனென்
ஏயெனும்மாத்திரத்தெற்றுகிற்றிலென்
ஆயகன்முனியும்என்றஞ்சினேன்அலால்
தாய்எனும்பெயர்எனைத்தடுக்கற்பாலதோ (௭௨)

மாளவும்உளன்ஒருமன்னன்வன்சொலால்
மீளவும்உளன்ஒருவீரன்மெய்யபார்
ஆளவும்உளன்ஒருபரதன்ஆகினால்
கோள்அலதறநெறிகுறைஉண்டாகுமோ. (௭௩)

சுழிஉடைத்தாய்உடைக்கொடியசூழ்ச்சியால்
வழிஉடைத்தாய்வரும்மரபைமாய்த்தொரு
பழிஉடைத்தாக்கினன்பரதன்பண்டெனும்
மொழிஉடைத்தாக்கலின்முறைமைவேறுண்டோ. (௭௪)

வேறு.

நோயீர் அல்லீர் நும்கணவன்தன் உயிர்உண்டீர்
பேயீரோநீர் இன்னம்இருக்கப்பெறுவீரோ
மாயீர்மாயர்வன்பழிதந்தீர்முலைதந்தீர்
தாயீரோநீர் இன்னும்எனக்கென்தருவீரோ. (௭௫)

ஒன்றும்பொய்யாமன்னனைவாயால்உயிரோடும்
தின்றும்தீராவன்பழிகொண்டும்திருஎய்தி
என்றும்நீரேவாழஉவந்தீர் அவன்ஏகக்
கன்றும்தாயும்போவனகண்டும்கழியீரோ. (௭௬)

இறந்தான்தந்தைஈந்தவரத்துக்கிழிவென்று
அறந்தான்இதென்றன்னவன்மைந்தன்அரசெல்லாம்
துறந்தான்தாயின்சூழ்ச்சியின்ஞாலம்அவனோடும்
பிறந்தான்ஆண்டான்என்னும்இதென்னாற்பெறல்ஆமே. (௭௭)

மாளும்என்றேதந்தையைஉன்னாவசைகொண்டாள்
கோளும்என்னாலேஎனல்கொண்டான்அதுஅன்றேல்
மீளும்அன்றேஎன்னையும்மெய்யேஉலகெல்லாம்
ஆளும்என்றேபோயினன்அன்றோஅரசாள்வான். (௭௮)

ஓதாநின்றதொல்குலமன்னன்உணர்வப்பால்
யாதானும்தான்ஆகஎனக்கேபணிசெய்வான்
தீதாநின்றசிந்தனைசெய்தான்அவன்என்ன
போதாதோஎன்தாய்இவள்கொண்டபுகழ்அம்மா. (௭௯)

உய்யாநின்றேன்இன்னமும்என்முன்உடன்வந்தான்
கையார்கல்லைப்புல்அடகுண்ணக்கலம்ஏந்தி
வெய்யோன்நான்இன்சாலியின்வெண்சோறமுதென்ன
நெய்யோடுண்ணநின்றதுநின்றார்நினையாரோ. (௮௰)

வில்லார்தோளான்மேவினன்வெங்கானகம்என்ன
கல்லான்அன்றேதுஞ்சினன்நஞ்சேஅனையானை
கொல்லேன்மாயேன்வன்பழியாலேகுறைவற்றேன்
அல்லேனோயான்அன்புடையார்போல்அழுகின்றேன். (௮௧)

பாரோர்கொள்ளார்யான்உயிர்பேணிப்பழிபூணேன்
தீராதொன்றோதுன்பும்இவ்வூரில்திருநில்லாள்
ஆரோடெண்ணிற்றாருணாதந்தாய்அறம்எல்லாம்
வேரோடும்கேடாகமுடித்தென்விளைவித்தாய். (௮௨)

கொன்றேன்நான்என்தந்தையைமற்றுன்கொலைவாயால்
ஒன்றேகானத்தண்ணலைஉய்த்தேன்உலகாள்வான்
நின்றேன்என்றால்நின்பிழைஉண்டோபழிஉண்டோ
என்றேனும்தான்என்புகழ்மாயும்இடம்உண்டோ. (அ௩)

கண்ணாலேஎன்செய்வினைஇன்னும்சிலகாண்பார்
மண்ணார்பாராதெள்ளுவர்வாளாபழிபூண்டாய்
உண்ணாநஞ்சம்கொல்கிலதென்னும்உரைஉண்டென்
றெண்ணாநின்றேன்அன்றிஇரேன்என்உயிரோடே. (அ௪)

ஒன்றும்பாவிக்கும்பிவயிற்றின்இடைவைகி
தோன்றும்தீராப்பாதகம்அற்றென்துயர்தீர
சான்றும்தானேநல்அறம்ஆகத்தகைஞாலம்
மூன்றும்காணமாதவம்யானேமுயல்கின்றேன். (அ௫)

சிறந்தார்சொல்லும்நல்உரைசொன்னேன்செயல்எல்லாம்
மறந்தாய்செய்தாய்ஆகுதிமாயாஉயிர்தன்னை
துறந்தாய்ஆகில்தூயையும்ஆதிஉலகத்தே
பிறந்தாய்ஆதிஈதலதில்லைபிறிதென்றான். (அ௬)

வேறு.

இன்னணம்இனையனஇயம்பியானும்இப்
பன்னருங்கொடுமனப்பாவிபாடிரேன்
துன்னருந்துயர்கெடத்தூயகோசலை
பொன்னடிதொழுவென்என்றெழுந்துபோயினான். (அ௭)

ஆண்டகைகோசலைஅருகர்எய்தினன்
மீண்டும்மண்கிழிதரவீழ்ந்துகேழ்கிளர்
காண்டகுதடக்கையிற்கமலச்சீறடி
பூண்டனன்கிடந்தனன்புலம்பினன்அரோ. (அஅ)

எந்தைஎவ்வுலகுளான்எம்முன்யாண்டையான்
வந்ததுதமியென்இம்மறுக்கம்காணவோ
சிந்தையின்உறுதுயர்தீர்த்திர்ஆல்எனும்
அந்தரத்தமரரும்அழுதுசோரவே. (அ௯)

அடித்தலம்கண்டிலென்யான்என்ஐயனை
படித்தலம்காவலன்பெயரற்பாலனே
பிடித்திவிர்போலும்நீர்பிழைத்திராஎனும்
பொடித்தலம்தோள்உறப்புரண்டுசோர்கின்றான். (௯௰)

கொடியவர்யாவரும்குலங்கள்வேர்அற
நொடிகுவென்யான்அதுநுவல்வதெங்கணம்
கடியவள்வயிற்றினில்பிறந்தகள்வனேன்
முடிகுவென்அருந்துயர்முடியஎன்னும்ஆல். (௬௧)

இரதம்ஒன்றூர்ந்துபார்இருளைநீக்கும்அவ்
வரதனில்ஒளிபெறவளர்ந்ததொல்குலம்
பரதன்என்றொருபழிபடைத்ததென்னும்ஆல்
மரதகமலைஎனவளர்ந்ததோளினான். (௬௨)

வாடொடுதானையான்வானில்வைகிட
காடொருதலைமகன்எய்தக்கண்ணிலா
நாடொருதுயரிடைநைவதேஎன்னும்
தாடொடுதடக்கைஅத்தருமமேஅனான். (௬௩)

புலம்புறுகுரிசில்தன்புலர்வுநோக்கினள்
குலம்பொறைகற்பினைசுமந்தகோசலை
நிலம்பொறைஆற்றலன்நெஞ்சம்தூய்தென
சலம்பிறிதுறமனம்தளர்ந்துகூறுவாள். (௬௪)

மையறுமனத்தொருமாசுளான்அலன்
செய்யனேஎன்பதுதேரும்சிந்தையாள்
கய்கயர்கோமகள்இழைத்தகைதவம்
ஐயநீஅறிந்திலைபோலும்ஆல்என்றாள். (௬௫)

தாள்உறுகுரிசில்அத்தாய்சொல்கேட்டலும்
கோள்உறுமடங்கலிற்குமுறிவிம்முவான்
நாள்உறுநல்அறம்நடுங்கநாவினால்
சூள்உறுகட்டுரைசொல்லல்மேயினான். (௬௬)

அறம்கெடமுயன்றவன்அருளில்நெஞ்சினன்
பிறன்கடைநின்றவன்பிறரைச்சீறினோன்
மறம்கொடுமன்உயிர்கொன்றுவாழ்ந்தவன்
துறந்தமாதவர்க்கருந்துயரம்சூழ்ந்துளோன். (௬௭)

குரவரைமகளிரைவாளிற்கொன்றுளோன்
புரவலன்உறுபொருள்புனைவில்வாரினோன்
விரவலர்வெரிநிடைவிழிக்கமீண்டுளோன்
இரவலர்அருநிதிகிளறிக்கௌவினோன். (௬௮)

தழைத்ததண் துளவினோன் தலைவன் அல்லனென்
றழைத்தவன் அறநெறி அந்தணாளரில்
பிழைத்தவன் பிழைப்பிலாமறையைப்பேணலா
திழைத்தவன் பொய்எனும் இழுதைநெஞ்சினேன். (௯௯)

தாய்பசிஉழந்துயிர்தளரத்தான்தினி
பாய்பெரும்பாழ்வயிறளிக்கும்பாவியும்
காயகன்படநடந்தவனும்நண்ணும்அத்
தீய்எரிநரகத்துக்கடிதுசெல்கயான். (௱)

தாளினில்அடைந்தவர்தம்மைத்தற்கொரு
கோள்உறஅஞ்சினன்கொடுத்தபேதையும்
காளினும்அறம்மறந்தவனும்நண்ணுறும்
மீள்அருநரகிடைக்கடிதுவீழ்கயான். (௱௧)

பொய்க்கரிகூறினேன்போருக்கஞ்சினேன்
கைக்கொளும்அடைக்கலம்கரந்தவவ்வினேன்
எய்த்திடத்திடர்செய்தோன்என்றின்னோர்புகும்
மெய்க்கொடுநரகிடைவிரைவின்வீழ்கயான். (௱௨)

அந்தணர்உறையுளை அனலிஊட்டினேன்
மைந்தனைக்கொன்றுளோன்வழக்கிற்பொய்த்துளோன்
நிந்தனைதேவரைநிகழ்த்தினேன்புகும்
வெந்துயர்நரகத்துவீழ்கயானுமே. (௱௩)

கன்றுயிர்ஓய்ந்துகக்கறந்துபால்உண்டோன்
மன்றிடைப்பிறர்பொருள்மறைத்துவவ்வினேன்
நன்றியைமறந்திடும்நயம்இல்லாவினேன்
என்றிவர்உறுநரகென்னதாகவே. (௱௪)

ஆறுதன்உடன்வரும்அஞ்சொல்மாதரை
ஊறுகொண்டலைக்கத்தன்உயிர்கொண்டேகினேன்
சோறுதன்அயலுளோர்பசிக்கத்துய்த்துளோன்
ஏறும்அக்கதியிடையானும்ஏறவே. (௱௫)

எஃகெறிசெருமுகத்தேற்றதெவ்வருக்
கொஃகினன்உயிர்வளர்த்துண்ணும்ஆசையான்
அஃகலில்அறநெறிஆக்கியோன்பொருள்
வெஃகியமன்னன்வீழ்நரகின்வீழ்கயான். (௱௬)

அழிவருஅரசியல்எய்திஆகும்என்
றிழிவருசிறுதொழில்இயற்றிஆண்டதின்
வழிவருதருமத்தைமறந்துமற்றொரு
பழிவருநெறிபடர்பதகன்ஆகயான். (௩௭)

தஞ்செனஒதுங்கினர்தனதுபாருளோர்
எஞ்சலில்மறுக்கினேடிரியல்போயுற
வஞ்சிசென்றிறுத்தவன்வாகைமீக்கொள
அஞ்சின்மன்னவன்ஆகயானுமே. (௩௮)

கன்னியைஅழிசெயக்கருதினேன்குருப்
பன்னியைநோக்கினேன்பருகினேன்நறை
பொன்இகழ்களவினில்பொருந்தினேன்என
இன்னவர்உறுகதிஎன்னதாகவே. (௩௯)

ஊண்நலஉண்வழிநாயின்உண்டவன்
ஆண்அலன்பெண்அலன்ஆர்கொல்ஆம்என
நாணலன்நரகம்உண்டென்னும்நல்உணா
பேணலன்பிறர்பழிபிதற்றிஆகயான், (௩௰)

மறுவில்தொல்குலங்களைமாசிட்டேற்றினேன்
சிறுவிலைஎளியவர்உணவுசிந்தினேன்
நறியனஅயலவர்நாவில்நீர்வர
உறுபதம்நுங்கியஒருவன்ஆகயான். (௩௧௧)

வில்லினும்வாளினும்விரிந்தஆண்தொழில்
புல்லிடைஉகுத்தனென்பொய்மையாக்கையைச்
சில்பகல்ஓம்புவான்செறுனர்சீறிய
இல்லிடைஇடுபதம்ஏற்களன்கையால். (௩௧௨)

ஏற்றவற்கொருபொருள்உள்ளதின்றென்று
மாற்றலன்உதவலன்வரம்பில்பல்பகல்
ஆற்றினன்உழற்றும்ஓர்ஆதன்எய்தும்அக்
கூற்றுறுநரகின்ஓர்கூறுகொள்கயான். (௩௧௩)

பிணிக்குறுமுடைஉடல்பேணிப்பேணலார்த்
துணிக்குறுவயிரவாள்தடக்கைதூக்கிப்போய்
மணிக்குறுநகைஇளமங்கைமார்கள்முன்
தணிக்குறிபகைஞரைத்தாழ்களன்தலை. (௩௧௪)

கரும்பலர் செந்நெல் அம்கழனிக் கானநா
டரும்பகைகவர்ந்துண ஆவிபேணினென்
இரும்பலர் நெடுந்தளை ஈர்த்தகாலொடும்
விரும்பலர் முகத்தெதிர் விழித்துநிற்கயான். (௱௧௫)

வேறு.

தூயவாசகம்சொன்னதோன்றலை
தியகானகம்திருவின்நீங்கிமுன்
போயினான்வரக்கண்டபொம்மலாள்
ஆபகாதலால்அழுதுபுல்லினாள். (௱௧௬)

செம்மைநன்மனத்தண்ணல்செய்கையும்
அம்மைதீமையும்அறிதல்கேற்றினாள்
கொம்மைவெம்முலைகுமுறுபால்உக
விம்மல்விம்மநின்றழுதுவீங்கினாள். (௱௧௭)

முன்னைநுங்குலமுதல்உளோர்கள்தாம்
நின்னையாவரோநிகர்க்கும்நீர்மையார்
மன்னர்மன்னவா என்றுவாழ்த்தினாள்
உன்னஉன்னநைந்துருகிவிம்முவாள். (௱௧௮)

உன்னஉன்னநைந்துருகிஅன்புகூர்
அன்னைதாளில்வீழ்ந்திளையஅண்ணலும்
சொன்னநீர்மையால்தொழுதுமாழ்கினான்
இன்னவேலைவாய்முனிவன்எய்தினான். (௱௧௯)

வந்தமாதவன்தாளில்வள்ளல்வீழ்ந்
தெந்தையாண்டையான்இயம்புவீர்எனா
நொந்துமாழ்கினான்நுவல்வதோர்கிலா
அந்தமாதவன்அழுதுபுல்லினான். (௱௨௰)

மறுவில்மைந்தனேவள்ளல்உந்தையார்
இறுதிஎய்திநாள்எழ்இரண்டின
சிறுவர்செய்கடன்செய்துதீர்த்திஎன்
றுறுவல்மேயினான்உரையின்மேயினான். (௱௨௧)

அன்னைஏவினாள்அடிஇறைஞ்சினான்
பொன்னின்வார்சடைப்புனிதனோடும்போய்
தன்னைநல்கிஅத்தருமம்நல்கினான்
பன்னுதொல்அறப்படிவம்நோக்கினான். (௱௨௨)

மண்ணின்மேல்விழுந்தலறிமாழ்குவான்
அண்ணல்ஆழியான்அவனிகாவலான்
எண்ணெய்உண்டபொன்எழில்கொள்மேனியை
கண்ணநீரினாற்கழுவிஆட்டினான். (௱௨௩)

பற்றிஅவ்வையின்பரிவின்வாங்கினார்
சுற்றும்நான்மறைத்துறைசெய்கேள்வியார்
கொற்றமண்கணைக்குழுறமன்னனை
மற்றோர்பொன்னின்மாமானம்ஏற்றினார். (௱௨௪)

கணைசெய்வேலைபோல்நகரிகைஎடுத்
துணைசெய்பூசலிட்டுயிர்துளங்குற
அணைசவேலைசூழ்ந்தழுதுகைதொழ
புணைசைஆனையிற்கொண்டுபோயினார். (௱௨௫)

சங்குபேரியும்தழுவுசின்னமும்
எங்கும்எங்கும்நின்றிரங்கிஏங்குவ
மங்குல்தோய்நகர்மகளிர்ஆம்என
பொங்குகண்புடைத்தழுவபோன்றவே. (௱௨௬)

மாவும்யானையும்வயங்குதேர்களும்
கோவும்நான்மறைக்குழுவும்முன்செல
தேவிமாரொடும்கொண்டுதெண்டிரை
தாவுவார்புனற்சரயுஎய்தினார். (௱௨௭)

எய்திநூலுளோர்மொழிந்தயாவையும்
செய்துதீக்கலம்திருத்திச்செல்வனை
வெய்தின்ஏற்றினார்வீரநுந்தைபால்
பொய்இல்மாக்கடன்கழித்திபோந்தென்றார். (௱௨௮)

என்னும்வேலையில்எழுந்தவீரனை
அன்னதீமையால்அரசன்நின்னையும்
துன்னுதுன்பத்தால்துறந்துபோயினான்
முன்னரோஎனமுனிவன்கூறினான். (௱௨௯)

துறந்துபோயினான்எனவேதோன்றல்நீ
பிறந்துபேர்அறம்பிழைத்ததென்றல்போல்
இறந்துபோயினான்இருந்ததாண்டது
மறந்துவேறொருமைந்தன்ஆம்கொல்ஆம். (௱௩௰)

இடிக்கண்வாள் அரா இடைவதாம்என
படிக்கண் வீழ்ந்தகம்பதைக்கும்நெஞ்சினன்
நடுக்கல்ஆகலாத்துயரம்தன்உளே
துடிக்கவிம்மிநின்றழுதுசொல்லுவான். (௱௩௰௧)

உரைசெய்மன்னன்மற்றன்னில்என்னில்யார்
இரவிதன்குலத்தெந்தைமுந்தையோர்
பிரதபூசனைக்குரியபேறிலேன்
அரைசுசெய்யவோஆவதாயினேன். (௱௩௰௨)

பூவில்நான்முகன்புதல்வன்ஆதிஆம்
தாவில்மன்னர்தம்தருமநீதியால்
தேவர்ஆயினார்சிறுவன்ஆகியே
ஆவநான்பிறந்தவத்தன்ஆனவா. (௱௩௰௩)

துன்னுதாள்வளம்சுமந்ததாழையில்
பன்னுவான்குலைப்பதடிஆயினேன்
என்னைஎன்னையேஈன்றுகாத்தஎன்
அன்னையார்எனக்கழகுசெய்தவா. (௱௩௰௪)

என்றுகூறிநொந்திடரின்மூழ்கும்அந்
துன்றுதாரவற்கிளையதோன்றலால்
அன்றுநேர்கடன்அமைவதாக்கினான்
நின்றுநான்மறைநெறிசெய்நீர்மையான். (௱௩௰௫)

இழையும்ஆரமும்இடையும்மின்னிட
குழையும்மாமலர்க்கொம்பனார்கள்தாம்
தழைஇல்முண்டகம்தழுவுகானிடை
முழையில்மஞ்ஞைபோல்எரியில்மூழ்கினார். (௱௩௰௬)

அங்கிநீரினும்குளிர அம்புய
திங்கள்வாண்முகம்திருவிளங்குற
சங்கைதீர்ந்துதம்கணவர்பின்செலும்
நங்கைமார்புகும்உலகம்நண்ணினார் (௱௩௰௭)

அனையசெய்கையால்அரசர்கோமகற்
கினையதன்மையால்இயைவசெய்துபின்
மனையின்எய்தினன்மரபின்வாழ்வினை
வினையின்எய்தும்ஓர்பிணியின்வேலையான். (௱௩௰௮)

ஐந்தும்ஐந்தும்நாள்ஊழிஆம்என
மைந்தன்வெந்துயர்க்கடலின்வைகினன்
தந்தைதன்வயிற்றருமம்பாவையும்
முந்துநூலுளோர் முறையின்முற்றினன், (ாகூகூ)

முற்றும்முற்றுவித்துதவிமும்மைநால்
சுற்றம்யாவையும்தொடரத்தோன்றினன்
வெற்றிமாதவன் வினைமுடித்தவன்
கொற்றவேல்நெடுங்குமரற்கூடினன், (ாசய)

மன்னர்இன்றியேவையம்வைகல்தான்
தொன்மைஅன்றெனத் துணியும்நெஞ்சினர்
அன்னமாநிலத் தறிஞர்தம்மொடும்
மூன்னமந்திரக்கிழவர்முந்தினர், (ாசக)

கூ - வது-பள்ளிஅண்டப்படலமுற்றும். ஆக திருவிருத்தம் (கூாகூயரு)

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

ய - வது, ஆற்றுப்படலம்.

வரன்முறைதெரிந்துணர்மறையின்மாதவத்
தருமறைமுனிவனும் ஆண்டையான்என
விரைவின்வந்தீண்டினர்விரகின்எய்தினர்
பரதனைவணங்கினர் பரியும்நெஞ்சினர். (க)

மந்திரக்கிழவரும் நகரமாந்தரும்
தந்திரத்தலைவரும்தரணிபாலரும்
அந்தரமுனிவரோடறிஞர்யாவரும்
சுந்தரக்குரிசிலைமரபிற்சுற்றினர். (உ)

சுற்றினர்இருந்துழிசுமந்திரப்பெயர்
பொற்றடந்தேர்வலான்புலமைஉள்ளத்தான்
கொற்றவற்குறுபொருள்குறித்தகொள்கையான்
முற்றுணர்முனிவனைமுகத்துநோக்கினன். (ங)

நோக்கினல்சுமந்திரன் நுவலல்உற்றதை
வாக்கினல்அன்றியேஉணர்ந்தமாதவன்
காக்குதிஉலகுநின்கடனதாம்என
கோக்குமாரனுக்கது தெரியக்கூறுவான். (ச)

வேதியர்அருந்தவர்விருத்தர்வேந்தர்கள்
ஆதியர்நின்வயின் அடைந்தகாரியம்
நீதியும்தருமமும்நிறுவநீஇது
கோதறுகுணத்தினாய் மனத்துட்கோடிஆல். (ரு)

தருமம்என்றொருபொருள்தந்துநாட்டுதல்
அருமைஎன்பதுபெரிதறிதிஐயநீ
இருமையும்தருவதற்கியைவதீண்டிது
தெருள்மனத்தார்செயும்செயலிதாகும்ஆல். (சு)

வள்உறுவயிரவாள் அரசில்வையகம்
நள்உறுகதிர்இலாப்பகலும்நாளொடும்
தெள்உறுமதிஇலா இரவும்தேவுடன்
உள்உறைஉயிர்இலா உடலும்ஒக்குமே. (எ)

தேவர்தம்உலகினும்தீமைசெய்துழல்
மாவலிஅவுணர்கள்வைகும்நாட்டினும்
ஏவெவைஉலகம்என்றிசைக்கும்அன்னவை
காவல்செய்தலைவரை இன்மைகண்டிலம். (அ)

முறைதெரிந்தொருவகைமுடியநோக்குறின்
மறையவன்வகுத்தன மண்ணில்வானிடை
நிறைபெருந்தன்மையின் நிற்பசெல்வன
இறைகளை இல்லனயாவைகாண்கிலம். (கூ)

பூத்தநாள்மலர்அயன்ஆதிப்புண்ணியர்
ஏத்துவான்புகழினர்இன்றுகாறும்கூ
காத்தனர்பின்ஒருகளைகண்இன்மையால்
நீத்தநீர்உடைகலநீரதாகும்ஆல். (ய)

உந்தையோஇறந்தனன்உம்முன்நீத்தனன்
வந்ததும்அன்னைதன்வரத்தில்மைந்தநீ
அந்தம்இல்பேர்அரசளித்திஅன்னது
சிந்தனைஎமக்கெனத்தெரிந்துகூறினான். (கக)

தஞ்சம்இவ்உலகம்நீதாங்குவாய்என
செஞ்செவேமுனிவரன்செப்பக்கேட்டலும்
நஞ்சினைநுகர்எனநடுங்குவாரினும்
அஞ்சினான் அயர்ந்தனன் அருளின்கண்ணினான். (கஉ)

நடுங்கினன்நாத்தடுமாறினாட்டமும்
இடுங்கினன்மகளிரின் இரங்கும்நெஞ்சினன்
ஒடுங்கியஉயிரினன்உணர்வுகைதர
தொடங்கினன் அரசவைக்குள்ளம்சொல்லுவான். (கங)

மூன்றுலகினுக்கும்ஓர்முதல்வன் ஆம்முதல்
தோன்றினன் இருக்கயான்மகுடம்சூடுதல்
சான்றவர்உரைசெயத்தருமம்ஆதலால்
ஈன்றவள் செய்கையின் இழுக்குண்டாகுமோ. (கச)

அடைவருங்கொடுமைஎன் அன்னைசெய்கையை
நடைவரும்தன்மைநீர்நன்றிதென்றிரேல்
இடைவரும்காலம்ஈண்டிரண்டும்நீத்தது
கடைவரும்தீநெறிக்கலியின் ஆட்சியோ. (கரு)

வேத்தவைஇருந்தநீர்விபலன் உந்தியில்
பூத்தவன்முதலியபுவியுள் தோன்றினர்
மூத்தவர் இருக்கவேமுறைமையால்நிலம்
காத்தவர்உளர்எனிற்காட்டிக்காண்டிர் ஆல். (கசு)

நன்னெறிஎன்னினும்நான்இந்நானிலை
இன்உயிர்ப்பொறைசுமந்திருந்துவாழ்கிலேன்
அன்னவன்தனைக்கொணர்ந்தலங்கல்மாமுடி
தொன்னெறிமுறைமையிற்சூட்டிக்காண்டிர் ஆல். (கஎ)

அன்றெனில்அவனொடும்அரியகானிடை
நின்றினிதிருந்தவம்நெறியின் ஆற்றுவென்
ஒன்றினிஉரைக்கில்என் உயிரைநீக்குவென்
என்றனன் என்றபோதிருந்தபேர் அவை (கஅ)

ஆன்றபேர் அரசனும்இருப்பஐயனும்
ஏன்றனன்மணிமுடிஎந்தல்வேந்தநீ
வான்றொடர் திருவினைமறுத்திமன் இளந்
தோன்றல்கள்யாருளர்நின்னிற்றோன்றினர். (கக)

ஆழியைஉருட்டியும்அறங்கள்போற்றியும்
வேள்வியைஇயற்றியும்வளர்க்கவேண்டுமோ
ஏழினோடேழ்எனும்உலகும்எஞ்சினும்
வாழியநின்புகழ்என்றுவாழ்த்தினர். (உ0)

குரிசிலும்தம்பியைக்கூவிக்கொண்டவண்
முரசறைந்திந்நகர்முறைமைவேந்தனை
தருதும்ஈண்டென்பதுசாற்றித்தானையை
வினைவினில்எழுகெனவிளம்புவாய்என்றான் (உக)

நல்லவன்உரைசெயநம்பிகூறலும்
அல்லலில்அழுங்கியஅன்பின்மாநகர்
ஒல்லெனஇரைத்ததால்உயிர்இல்யாக்கையை
சொல்எனும்அமிர்தினால்துளித்ததென்னவே. (உஉ)

அவித்தஐம்புலத்தவர்ஆதிஆப்உள
புவித்தலைஉயிர்எலாம்இராமன்பொன்முடி
கவிக்கும்என்றுரைக்கவேகளித்ததால்அது
செவிப்புலம்நுகர்வதோர்தெய்வத்தேன்கொல்ஆம். (உங)

படுமுரசறைந்தனர்பரதன்தம்முனைக்
கொடிநகர்தரும்அவற்கொணரச்சேனையை
முடுகுகஎன்றசொல்முரிமாநகர்
உடுபதிவேலையின்உதயம்போன்றதே. (உச)

எழுந்ததுபெரும்படைஎழுவேலையின்
மொழிந்தபேர்ஊழியின்முழங்கிமுந்தெழ
அழிந்ததுகேகயன்மடந்தைஆசைபோய்க்
கழிந்ததுதுயர்நெடுங்காதல்தூண்டவே. (உரு)

பண்ணினபகடுதேர்புரவிபண்டியும்
மண்ணினைமறைத்தனவளர்ந்தமாக்கொடி
விண்ணினைமறைத்தனவிரிந்தமாத்துகள்
கண்ணினைமறைத்தனகமலத்தோனையே. (உசு)

ஈசன்இவ்உலகினைஅழிக்கும்நாள்எழும்
ஓசையில்நிமிர்ந்துளதொல்லென்பேர்ஒலி
காசைஇல்காரியவற்காணமூண்டெழும்
ஆசையில்நிமிர்ந்ததவ்அணிகராசியே. (உஎ)

படியொடுதிருநகர்துறந்துபல்மரம்
செடியொடுகொடுவனம்நோக்கிச்சீதைஆம்
கொடியொடுநடந்தஅக்கொண்டல்ஆம்எனா
பிடியொடுநடந்தனபெருங்கைவேழமே. (உஅ)

சேற்றிளமரைமலர்சிறந்தஆம்என
காற்றளம்பொலிதருகன்னிமாரொடும்
ஏற்றிளம்பிடிக்குலம்இகலில்இன்நடை
தோற்றிளமகளிரைச்சுமப்பபோன்றவே. (௨௯)

வேதனைவெயிற்கதிர்தணிக்கமென்மழைச்
சீதநீர்கொடுநெடுங்கொடியும்சென்றன
கோதைவெஞ்சிலையவன்கோலம்காண்கிலா
மாதரின்நுடங்குவவரம்பில்கோடியே. (௩௰)

வெண்மதிமீச்செலமேகம்ஊர்ந்தென
அண்ணல்வெங்கதிரவன்அளவில்மூர்த்திஆய்
மண்ணிடைஇழிந்தொருவழிக்கொண்டால்என
எண்அருமன்னவர்களிற்றின்ஏகினார். (௩௧)

தேர்மிசைசென்றதோர்சிந்துசெம்முகக்
கார்மிசைக்கழிந்ததார்கலிஓர்கார்க்கடல்
ஏர்மிசைஇவுளிமேல்ஏகிற்றெங்கணும்
பார்மிசைப்படர்ந்ததுபதாதிப்பௌவமே. (௩௨)

தாரையும்சங்கமும்தாளம்கொம்பொடு
வார்மிசைப்பம்பையும்துடியும்மற்றவும்
பேரியும்இயம்பலசென்றபேதமைப்
பூரியர்குழாத்திடைஅறிஞர்போலவே. (௩௩)

தாவருநாள்முதல்அணியலால்தகை
மேவருங்கலன்களைவெறுத்தமேனியர்
தேவரும்மருள்கொளத்தெரியும்காட்சியர்
பூவுதிர்கொம்பெனமகளிர்போயினார். (௩௪)

அதிர்கடல்வையகம்அனைத்தும்காத்தவன்
விதிவரும்தனிக்குடைமீதிலாப்படை
பொதிபலகவிகைமீன்பூத்ததாகிலும்
கதிர்மதிநீங்கியகங்குல்போன்றதே. (௩௫)

செல்லியசெலவினாற்சிறியதிக்கென
சொல்லியசேனையைச்சுமந்ததேஎனில்
ஒல்லியல்வேலைநீர்உடுத்தபாரைஓர்
மெல்லியல்என்றவர்மெலியரோகொல்ஆம். (௩௬)

தங்குசெஞ்சாந்தகில்கலவைசார்கில
குங்குமம்கொட்டிலகோவைமுத்தில
பொங்கிளங்கொங்கைகள்புதுமைவேறில
தெங்கிளநீர்எனத்தெரிந்தகாட்சியே. (௩௭)

இன்றுணையவர்முலைஎழுதுசாந்தினும்
மன்றல்அம்தாரினும்மறைந்திலாமையால்
துன்றிளங்கொடிமுதல்தூசுநீங்கிய
குன்றெனப்பொலிந்தனகுவவுத்தோள்களே. (௩௮)

நறைஅறுகோதையர்நாட்செய்கோலத்தின்
துறைஅறஅஞ்சனம்துறந்தநாட்டங்கள்
குறைஅறநிகர்த்தனகொற்றம்முற்றுவான்
கறைஅறக்கழுவியகாலவேலையே. (௩௯)

விரிமணிமேகலைவிரவிஆர்க்கில
தெரிவையர்அல்குல்தார்ஒலிஇல்தேர்என
பரிபுரம்ஆர்க்கிலாப்பவளச்சீறடி
அரிஇனம்ஆர்க்கிலாக்கமலம்அன்னவே. (௪௰)

மல்கியகேகயன்மடந்தைவாசகம்
நல்கியதரிவையர்நடுவிற்கேகொல்ஆம்
புல்கியமலர்வடம்பூண்கிலாமையால்
ஒல்கியஒருவகைபொறைஉயிர்க்கவே. (௪௧)

கோமகன்பிரிதலில்கோலம்நீத்துள
தாமரைச்செல்வியும்தவத்தைமேவினள்
காமனும்அருந்துயர்க்கடலின்மூழ்கினன்
ஆமெனநிகழ்ந்ததவ்அளவில்சேனையே. (௪௨)

மண்ணையும்வானையும்வயங்குதிக்கையும்
உண்ணியநிமிர்கடல்ஒக்கும்என்பதென்
கண்ணினும்மனத்தினும்கமலத்தண்ணல்தன்
எண்ணினும்நெடிதவண்எழுந்தசேனையே. (௪௩)

அலைநெடும்புனல்அறக்குடித்தலால்அகம்
நிலைபெறநிலைநெறிநிறுத்தலால்நெடு
மலைகளைமண்உறஅழுத்தலால்தமிழ்த்
தலைவனைஒத்ததத்தயங்குதானையே. (௪௪)

அறிஞரும் சிறிஞரும் ஆதி அந்தமா
செறி பெருந் தானையும் திருவும் நீங்கலால்
குறியவன் புனல் எலாம் வயிற்றிற் கொண்டநாள்
மறிகடல் ஒத்ததவ் அயோத்தி மாநகர். (௪௫)

பெருந்திரை நதிகளும் வயலும் பெட்புறு
மரங்களும் மலைகளும் மண்ணும் கண்ணுறத்
திருந்தல் இல் அயோத்தி ஆம் தெய்வ மாநகர்
அருங்தெரு ஒத்ததப் படை செல் ஆறரோ. (௪௬)

தார்கடாம் கோதை தாம் தாமந் தாம் தகை
ஏர்கடாம் கலவை தாம் கமழ்ந்தின்றென்பரால்
கார்கடாம் என மிகக் கடுத்த கைம்மலை
வார்கடாம் அல்லதம் மன்னன் சேனையே. (௪௭)

ஆள் உலாம் கடலினும் அகன்ற அக்கடல்
தோள் உலாம் குண்டலம் முதல தொல் அணி
கேள் உலாம் மின் ஒளி கிளர்ந்ததில்லை ஆல்
வாள் உலாம் நுதலியர் மருங்குல் போலவே. (௪௮)

மத்தளம் முதலிய வயங்கு பல் இயம்
ஒத்தன சேறலில் உரை இலாமையில்
சித்திரக் கவர் நெடுஞ் சேனை தீட்டிய
பத்தியை நிகர்த்ததப் படையின் ஈட்டமே. (௪௯)

ஏடறு கோதையர் விழியின் எய்த கோல்
ஊடுற உரம் தொளைத்துயிர் உணுவகை
ஆடவர்க்கு அரும் பெருங் கவசம் ஆயது
காடுறை வாழ்க்கை அக்கண்ணன் நண்ணவே. (௫௰)

கனங்குழைக் கைகயன் மகளிற் கண்ணிய
சினங்கிடந் தெரிதலில் தீய்ந்த வே கொல் ஆம்
அனங்கன் ஐங் கொடுங்கணை கடந்த ஆடவர்
மனங்கிடந்துண்கில மகளிர் கொங்கையே. (௫௧)

இன்னணம் நெடும்படை ஏகவந்தலும்
தன்னுடை நெடு அரைச் சீரை சாத்தினன்
பின்னிளையவனொடும் பிறந்த துன்பொடும்
நன்னெடுந் தேர்மிசை நடத்தல் மேயினன். (௫௨)

தாயரும்அருந்தவத்தவரும்தந்தையின்
ஆயமந்திரியரும்அளவில்சுற்றமும்
தூயஅந்தணர்களும்தொடர்ந்துசூழ்வர
போயினன்திருநகர்ப்புரிசைவாயிலே. (௫௩)

மந்தரைக்கூற்றமும்வழிச்செல்வாரொடும்
உந்தியேபோதல்கண்டிளவல்ஓடிஆர்த்
தந்தரத்தெற்றுவான்அழன்றுபற்றலும்
சுந்தரத்தோளவன்விலக்கிச்சொல்லுவான். (௫௪)

முன்னையர்முறைகெடமுடித்தபாவியை
இன்னபின்னம்செய்தென்சினத்தைத்தீர்வெனேல்
என்னைஇன்றென்ஐயன்துறக்குமென்றலால்
அன்னைஎன்றுணர்ந்திலென்அய்யநான்என்றான். (௫௫)

ஆதலால்முனியும்என்றய்யன்அந்தமில்
வேதனைக்கூனியைவெகுண்டும்என்னினும்
கோதிலாஅருமறைகுலவும்நூல்வலாய்
போதும்நாம்என்றுகொண்டரிதிற்போயினான். (௫௬)

மொய்பெருஞ்சேனையும்மூரிமாக்களும்
கய்பரந்தபல்ஒருகடலிற்சுற்றிட
அய்யனும்தேவியும்இளையஆளியும்
வய்கியசோலையில்தானும்வைகினான். (௫௭)

அல்லணைநெடுங்கண்நீர்அருவிஆடினன்
கல்லணைகிழங்கொடுகனியும்உண்டிலன்
வில்லணைத்துயர்ந்ததோள்வீரன்வைகிய
புல்லணைமருங்கில்தான்பொடியின்வைகினான். (௫௮)

ஆண்டுநின்றண்டகைஅடியின்ஏகினான்
ஈண்டியநெறிஎனத்தானும்ஏகினான்
தூண்டிடுதேர்களும்துரகராசியும்
காண்டகுகரிகளும்தொடரக்காலினே. (௫௯)

ம-வது. ஆற்றுப்படலம்முற்றும். ஆக-திருவிருத்தம்[௧௱௧௰௪]

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

பூவிரிபொலன்கழல்புனைவில்தானையான்
காவிரிநாடன்னகழனிநாடொரீஇ
தாவரசங்கமம்என்னும்தன்மைய
யாவையும்இரங்கிடக்கங்கைஎய்தினான். (௧)

எண்ணருஞ்சுரும்புதம்இனத்துக்கல்லது
கண்ணகன்பெரும்புனற்கங்கைஎங்கணும்
அண்ணல்வெங்கரிமதத்தருவிபாய்தலால்
உண்ணவும்குடையவும்உரித்தன்றாயதே. (௨)

அடிமிசைத்தூளிபுக்கடைந்ததேவர்தம்
முடிஉறப்புலர்ந்ததோர்முறைமைதேர்ந்திலென்
நெடிதுயிர்த்துண்டவும்நீந்தநின்றவும்
பொடிமிசைப்புரண்டவும்புரவிஈட்டமே. (௩)

பாலையேய்நிறத்தொடுபண்டுதான்படர்
ஓலையேய்நெடுங்கடல்ஓடிற்றில்லைஆல்
மாலையேய்நெடுமுடிமன்னன்சேனைஆம்
வேலையேமடுத்ததக்கங்கைவெள்ளமே. (௪)

கான்றலைநண்ணியகாலைபின்படர்
தோன்றலைஅவ்வழிதொடர்ந்துசென்றன
ஆன்றவர்உணர்த்தியஅக்குரோணிகள்
மூன்றுபத்தாயிரத்திரட்டிமுற்றுமே. (௫)

அப்படைகங்கையைஅடைந்தஆயிடை
துப்புடைக்கடலின்நீர்சுமந்தமேகத்தை
ஒப்புடைஅண்ணலோடுடற்றவேகொல்ஆம்
இப்படைஎடுத்ததென்றெடுத்தசீற்றத்தான். (௬)

குகன்எனப்பெயரியகூற்றின்ஆற்றலான்
தொகைமுரட்சேனையைத்துகளின்நோக்குவான்
நகைமிகக்கண்கள்தீநாறநாசியில்
புகைஉறக்குனிப்புறும்புருவப்போர்விலான். (௭)

மைஉறஉயிர்எலாம்இறுதிவாங்குவான்
கைஉறுகவர்அயில்பிடித்தகாலன்தான்
ஐஐநூறாயிரம்உருவம்ஆயின
மெய்உறுதானையான்வில்லின்கல்வியான். (௮)

கட்டியசுரிகையன்கடித்தவாயினன்
வெட்டியமொழியினன்விழிக்கும்தீயினன்
கொட்டியதுடியினன்குறிக்கும்கொம்பினன்
கிட்டியதமர்எனக்கிளர்ந்ததோளினன். (௯)

ஒலிஎலாம்இப்படைஅரவம்யான்என
ஒலிஉலாம்சேனையைஉவந்துகூயினன்
வலிஉலாம்உலகினில்வாழும்வள்உகிர்ப்
புலிஎலாம்ஒருவழிபுகுந்தபோலவே. (௰)

மருங்கடைதென்கணாவந்துதோன்றினன்
ஒருங்கடைநெடும்படைஒல்என்ஆர்ப்பினோ
டருங்கடையுகந்தனில்அசனிமாமழை
கருங்கடல்கிளர்ந்தெனக்கலந்துசூழவே. (௰௧)

தோன்றினபுளிஞரைநோக்கிச்சூழ்ச்சியின்
ஊன்றியசேனையைஉம்பர்ஏற்றுதற்
கேன்றனென்என்உயிர்த்துணைவற்கீகுவான்
ஆன்றபேர்அரசுநீர்அமைதிர்ஆம்என்றான். (௰௨)

துடிஎறிநெறிகளும்துறையும்சுற்றுற
ஓடியெறிஅம்பிகள்யாதும்ஓட்டலிர்
கடிஎறிகங்கையின்கரைவந்தோர்களைப்
பிடிஎறிபடஎனப்பெயர்த்தும்கூறுவான். (௰௩)

வேறு.

அஞ்சனவண்ணன்என்ஆர்உயிர்நாயகன்ஆளாமே
வஞ்சனையால்அரசெய்தியமன்னரும்வந்தாரே
செஞ்சரம்என்பனதீஉமிழ்கின்றனசெல்லாவோ
உஞ்சிவர்போய்விடில்நாய்குகன்என்றெனைஓதாரோ. (௰௪)

ஆழநெடும்புனல்கங்கைகடந்திவர்போவாரோ
வேழநெடும்படைகண்டுவிலங்கிடும்வில்லாளோ
தோழமைஎன்றவர்சொல்லியசொல்ஒருசொல்அன்றோ
ஏழமைவேடன்இறந்திலன்என்றெனைஏசாரோ. (௰௫)

முன்னவன்என்றுநினைந்திலன்மொய்ப்புலிஅன்னான்ஓர்
பின்னவன்நின்றனன்என்றிலன்அன்னவைபேசானேல்
என்இவன்என்னைஇகழ்ந்ததிவ்எல்லைகடந்தன்றோ
மன்னவர்நெஞ்சினில்வேடர்விடும்சரம்வாயாவோ. (௰௬)

பாவமுநின்றபெரும்பழியும்பகைஞரோடும்
ஏவமுமென்பவைமண்ணுலகாள்பவர்எண்ணாரோ
ஆவதுபோகஎன்ஆருயிர்த்தோழமைதந்தான்மேல்
போவதுசேனையும்ஆருயிரும்கொடுபோயன்றோ. (௧௭)

அருந்தவம்என்துணைஆளஇவன்புவிஆள்வானோ
மருந்தெனின்அன்றுயிர்வண்புகழ்கொண்டுபின்மாயேனோ
பொருந்தியகேண்மைஉகந்தவர்தம்மொடுபோகாதே
இருந்ததுநன்றுகழிக்குவென்என்கடனின்றோடா. (௧௮)

தும்பியுமாவும்மிடைந்தபெரும்படைசூழ்வாரும்
வம்பியல்தாரிவர்வாள்வலிகங்கைகடத்தன்றோ
வெம்பியவேடருள்வீர்துறைஓடம்விலக்கீரோ
நம்பிமுன்னேஇனிநம்முயிர்மாய்வதுநன்றன்றோ. (௧௯)

போனபடைத்தலைவீரர்தமக்கினைபோதாஇச்
சேனைகிடக்கிடுதேவர்வரிற்கிழுமாமேகம்
சோனைபடக்குடர்சூறைபடச்சுடர்வாளோடும்
தானைபடத்தனியானைபடத்திரள்சாயேனோ. (௨௰)

நின்றகொடுக்கைகளென்அன்பன்உடுக்கநெடுஞ்சினை
அன்றுகொடுத்தவள்மைந்தர்பலந்தைஎன்அம்பாலே
கொன்றுகுவித்தபிணம்கொள்பிணக்குவைகொண்டோடி
துன்றுதிரைக்கடல்கங்கைமடுத்திடதூராதோ. (௨௧)

ஆடுகொடிப்படைசாடிஅறத்தவரோஆள
வேடுகொடுத்ததுபாரெனும்இப்புகழ்மேவீரோ
நாடுகொடுத்தஎன்நாயகனுக்கிவர்நாம்ஆளும்
காடுகொடுக்கிலர்ஆகியெடுத்ததுகாணீரோ. (௨௨)

மாமுனிவர்க்குறவாகிவனத்திடையேவாழும்
கோமுனியத்தகும்என்றுமனத்திறைகொள்ளாதே
ஏழமைஉற்றிடில்ஏழுகடற்படைஎன்றாலும்
ஆழமையிற்சிறுகூழ்எனஇப்பொழுதாகாதோ. (௨௩)

என்பனசொல்லிஇரும்பனமேனியர்ஏனோர்முன்
வன்பணைவில்லினன்மல்உயர்தோளினன்வாள்வீரற்
கன்பனும்நின்றனன்நின்றதுகண்டனன்மன்னா
முன்பனில்வந்துமொழிந்தனன்மூரிப்பேர்வல்லான். (௨௪)

வேறு.

கங்கைஇருகரைஉடையான்கணக்கிறந்தநாவாயான்
உங்கள்குலத்தனிநாதற்குயிர்த்துணைவன்உயர்தோளான்
வெங்கரியின்ஏறனையான்விற்பிடித்தவேலையினான்
கொங்கலருநறுந்தண்டார்க்குகன்என்னுங்குறிஉடையான். (௨௫)

கற்காணுந்திண்மையான்கரைகாணாக்காதலான்
அற்காணிற்கண்டனைய அழகமைந்தமேனியான்
மற்காணுந்திருநெடுந்தோள்மழைகாணும்மணிநிறத்தாய்
நிற்காணும்உள்ளத்தான்நெறிஎதிர்நின்றனன்என்றான். (௨௬)

என்றுமுன்னே அவன்தன்மைதன்துணைவன்முந்துரைத்த
சொன்முன்னேஉவக்கின்றதுருசிலாத்திருமனத்தான்
மன்முன்னேதழீஇக்கொண்டமனக்கினியதுணைவனேல்
என்முன்னேஅவற்காண்பென்யானேசென்றெனஎழுந்தான். (௨௭)

என்றெழுந்ததம்பியொடும்எழுகின்றகாதலொடும்
குன்றெழுந்துசென்றதெனக்குளிர்கங்கைக்கரைகுறுகி
நின்றவனைநோக்கினான்திருமேனிநிலைஉணர்ந்தான்
துன்றுகருநறுங்குஞ்சிஎயினர்கோன்துண்என்றான். (௨௮)

வற்கலையின்உடையானைமாசடைந்தமெய்யானை
நற்கலைஇல்மதிஎன்னநகைஇழந்தமுகத்தானை
கற்கனியக்கனிகின்றதுயரானைக்கண்ணுற்றான்
விற்கையின்நின்றிடைவீழவிம்முற்றுநின்றொழிந்தான். (௨௯)

நம்பியும்என்நாயகனைஒக்கின்றான்அயல்நின்றான்
தம்பியையும்ஒக்கின்றான்தவவேடந்தலைநின்றான்
துன்பம்ஒருமுடிவில்லைதிசைநோக்கித்தொழுகின்றான்
எம்பெருமான்பின்பிறந்தார்இழைப்பரோபிழைப்பென்றான். (௩௰)

உண்டிடுக்கண்ஒன்றுடையான்உலையாதஅன்புடையான்
கொண்டதவவேடமேகொண்டிருந்தான்குறிப்பெல்லாம்
கண்டுணர்ந்துபெயர்கின்றேன்காமின்கள்நெறிஎன்னா
தண்டுறைஓர்நாவாயில்ஒருதனியேதான்வந்தான். (௩௧)

வந்தெதிரேதொழுதானைவணங்கினான்மலர்இருந்த
அந்தணனுந்தனைவணங்கும்அவனும்அவன்அடிவீழ்ந்தான்
தந்தையினுங்களிகூரத்தழுவினான்தகவுடையோர்
சிந்தையினுஞ்சென்னியினும்வீற்றிருக்குஞ்சீர்த்தியான். (௩௨)

வேறு.

தழுவினபுளினர்வேந்தன்தாமரைச்செங்கணானை
எழுவினும்உயர்ந்ததோளாய்எய்தியதென்னைஎன்ன
முழுதுலகளித்ததந்தைமுந்தையோர்முறையின்நின்றும்
வழுவினன்அதனைநீக்கமன்னனைக்கொணர்வான்என்றான். (௬௩)

கேட்டனன்கிராதர்வேந்தன்கிளர்ந்தெழும்உயிரன்ஆகி
மீட்டும்மண்ணதனில்வீழ்ந்தான்விம்மினன்உவகைவீங்க
தீட்டருமேனிமைந்தன்சேவடிக்கமலப்பூவில்
பூட்டியகையன்பொய்இல்உள்ளத்தன்புகலல்உற்றான். (௬௪)

தாய்உரைகொண்டுதாதைஉதவியதரணிதன்னை
தீவினைஎன்னநீத்துச்சிந்தனைமுகத்தில்தேக்கி
போயினைஎன்றபோழ்துபுகழினோய்தன்மைகண்டால்
ஆயிரம்இராமர்நின்கேள்ஆவரோதெரியில்அம்மா. (௬௫)

என்புகழ்கின்றதேழைஎயினனேன்இரவிஎன்பான்
தன்புகழ்க்கற்றைமற்றைஒளிகளைத்தவிர்க்குமாபோல்
மன்புகழ்பெருமைநுங்கள்மரபினோர்புகழ்கள்எல்லாம்
உன்புகழ்ஆக்கிக்கொண்டாய்உயர்குணத்துரவுத்தோளாய் (௬௬)

எனைஇவைஅன்னமாற்றம்இயைவனபலவும்கூறி
புனைகழற்புலவுவேற்கைப்புளினர்கோன்பொருவில்காதல்
அனையவற்கமைவிற்செய்தான்ஆர்அவற்கன்பிலாதார்
நினைவருங்குணம்கொடன்றேஇராமன்மேல்நிமிர்ந்தகாதல். (௬௭)

அவ்வழிஅவனைநோக்கிஅருள்தருவாரிஅன்ன
செவ்வழிஉள்ளத்தண்ணல்தென்திசைசெங்கைகூப்பி
எவ்வழிஉறைந்தான்நம்முன்என்றலும்எயினர்வேந்தன்
இவ்வழிவீரயானேகாட்டுவல்எழுகஎன்றான். (௬௮)

கார்எனக்கடிதுசென்றான்கல்லிடைப்படுத்தபுல்லின்
வார்சிலைத்தடக்கைவள்ளல்வைகியபள்ளிகண்டான்
பார்மிசைப்பதைத்துவீழ்ந்தான்பருவரற்பரவைபுக்கான்
வார்மணிப்புனலால்மண்ணைமண்ணுநீராட்டும்கண்ணான். (௬௯)

இயன்றதென்பொருட்டினால்இவ்இடர்உனக்கென்றபோழ்தும்
அயின்றனைகிழங்கும்காயும்அமிர்தெனஅரியபுல்லில்
துயின்றனைஎனவும்ஆவிதுறந்திலென்சுடரும்காசு
குயின்றுயர்மகுடம்சூடும்செல்வமும்கொள்வென்யானே. (௭௰)

தூண்டரநிவந்ததோளான் பின்னரும்சொல்லுவான் அந்
நீண்டவன் துயின்றசூழல் இதுஎனநிமிர்ந்தநேயம்
பூண்டவன் தொடர்ந்துபின்னே போந்தவன் பொழுதுநீத்த
தியாண்டெனஇனிது கேட்டான் எயினர்கோன் இதனைச்சொன்னான்.

அல்லைஆண்டமைந்தமேனி அழகனும் அவளும் துஞ்ச
வில்லைஊன்றியகையோடும்வெய்துயிர்ப்போடும்வீரன்
கல்லைஆண்டுயர்ந்ததோளாய்கண்கள்நீர்சொரியக்கங்குல்
எல்லைகாண்பளவும்நின்றான் இமைப்பிலன்நயனம்என்றான். (௪௨)

என்பதைக்கேட்டமைந்தன் இராமனுக்கிளையார்என்று
முன்பெத்ததோற்றத்தேயில்யான்என்றும்முடிவிலாத
துன்பத்துக்கேதுவானேன் அவன்அதுதுடைக்கநின்றான்
அன்பத்துக்கெல்லைஉண்டோ அழகிதென் அடிமைஎன்றான். (௪௩)

அவ்விடைஅண்ணல்தானும் அன்றரும்பொடியின்வைகி
தெவ்விடைதாங்கிநின்றார்க்கும்செறிகழற்புலிஞர்கோமான்
இவ்விடைக்கங்கைஆற்றின் எற்றினைஆயின்எம்மை
வெவ்விடர்க்கடல்நின்றேற்றிவேந்தன்பால்விடுத்தியென்றான். (௪௪)

நன்றெனப்புலிஞர்வேந்தன்நண்ணினன்தமரைநாவாய்
சென்றனதிரண்டுஎன்னவந்தனசிவன்சேர்வெள்ளிக்
குன்றெனக்குனிக்கும்அம்பொற்குவடெனக்குபேரன்மானும்
ஒன்றெனநாணிப்பல்வேறுருவுகொண்டனையஆன. (௪௫)

நங்கையர்நடையின்அன்னம்நாணுறுசெலவின்நாவாய்
கங்கையும்இடம்இலாமைமிடைந்தனகலந்தஎங்கும்
அங்கொடிங்கிழித்திவற்றும்அமைதியின்அமரர்வைபத்
திங்கொடங்கிழித்திவற்றும்இருவினைஎன்னல்ஆன. (௪௬)

வந்தனவரம்பில்நாவாய்வரிசிலைக்குரிசில்மைந்த
சிந்தனையாவதென்றுசிருங்கிபேரியர்கோன்செப்ப
சுந்தரவரிவிலானும்சுமந்திரன்தன்னைநோக்கி
எந்தைஇத்தானைதன்னைஏற்றுதிவிரைவின்என்றான். (௪௭)

குரிசிலதேவலால்அக்குரகதத்தேர்வலானும்
வரிசையின்வழாமைநோக்கிமரபுளிவகையின்ஏற்ற
கரிபரிஇரதம்காலாள்கணக்கறுகணாயில்வேலை
எரிமணித்திரையின்வீசும்கங்கையாறேறிற்றன்றே. (௪௮)

இடிபடுமுழக்கம்பொங்கஇனமழைமகரநீரை
முடிவுறமுகப்பஊழிஇறுதியின்மொய்ப்பபோல
கொடியொடுவங்கம்வேலைகூம்பொடுபடர்வபோல
நெடியனகைஎடுத்துநீட்டிநீந்தினநெடுங்கைவேழம். (சகூ)

சங்கமும்மகரமீனும்தரளமும்மணியும்தள்ளி
வங்கநீர்க்கடலும்வந்துதன்வழிப்படரமானப்
பொங்குவெங்களிறுநூக்கக்கரைஒரீஇப்போயிற்றம்மா
கங்கையும்இராமற்காணும்காதலதென்னமாதோ. (ருo)

கொடிஞ்சொடுதட்டும்அச்சும்ஆழியும்கோத்தமொட்டும்
நெடுஞ்சுவர்கொடியும்யாவும்நெறிவருமுறையின்நீக்கி
விடுஞ்சுவற்புரவியோடும்வேறுவேறேற்றிச்சென்ற
மடிஞ்சபின்உடம்புகூட்டும்வினைஎனவயிரத்தேர்கள். (ருக)

நால்இரண்டாயகோடிநவைஇல்நாவாய்கள்மீதா
சேல்திரண்டனையஆயகதியொடும்நதியிற்சென்ற
பால்திரண்டனையமெய்யபயம்திரண்டனையநெஞ்ச
கால்திரண்டனையகாலகடுநடைக்கலினப்பாய்மா. (ருஉ)

ஊடுறநெருக்கிஓடத்தொருவர்முன்ஒருவர்கிட்டி
சூடகத்தளிர்க்கைமாதர்குழுமினர்துவன்றித்தோன்ற
பாடியல்களிநல்யானைப்பந்திஅம்கடையிற்குத்த
கோடுகள்மிடைந்தஎன்னமிடைந்தனகுவவுக்கொங்கை. (ருங)

பாங்கின்உத்தரியம்மானப்படர்திரைதவழப்பாரின்
வீங்குநீர்அழுவம்தன்னுள்விழுமதக்கலுழிவெள்ளத்
தோங்கல்கள்தலைகள்தோன்றஒளித்தவண்உயர்ந்தகும்பம்
பூங்குழற்கங்கைநங்கைமுலைஎனப்பொலிந்தமாதோ. (ருச)

பொலன்குழைமகளிர்நாவாய்போக்கின்ஒன்றொன்றுதாக்க
மலங்கினர்இரண்டுபாலும்மறுகினர்வெருவிநோக்க
அலங்குநீர்வெள்ளம்தள்ளிஅழிதரஅங்கும்இங்கும்
கலங்கலின்வெருவிப்பாயும்கயற்குலம்நிகர்த்தகண்கள். (ருரு)

இயல்வுறுசெலவின்நாவாய்இருகையும்எயினர்தூண்ட
துயல்வனதுடிப்புவீசும்துவலைகள்மகளிர்மென்தூ
சுயல்வுறுபரவைஅல்குல்ஒளிப்புறத்தளிர்ப்பஉள்ளத்
தயர்வுறுமதுகைமைந்தர்க்கயர்வுயிர்ப்பளித்ததம்மா. (ருசு)

இக்கரை இரைத்தசேனை எறிகடல்முகந்து ஏந்தி
அக்கரை அடையவீசி வறியன அணுகும்நாவாய்
புக்கலை ஆழிநன்னீர் பொறுத்தன போக்கிப்போக்கி
அக்கணத்து வரிமீளும் அகன்மழை நிகர்த்த அம்மா. (௫௭)

அகிலிடு தூபம் அன்ன ஆய்மயிற் பீலி ஆர்த்த
முகில்முகடு ஒத்தகூடம் பொன்முகிலின் வண்ணத்
துகிலொடு தொடுத்த செம்பொற் கட்டிடை தொடுத்த முத்தம்
நகுகொடி நெடியபாயின் நவ்வெனச் சென்ற நாவாய். (௫௮)

ஆனனம் கமலத்து அன்ன மின்அன்ன அமிர்தச் செவ்வாய்த்
தேனனை குழலார் ஏறும் அம்பிகள் சிந்து முத்தம்
மீன்என விரிந்த கங்கை விண்எனப் பண்ணை முற்றி
வானவர் மகளிர் ஊரும் மானமே நிகர்த்த மாதோ. (௫௯)

துளிபடத் துழாவு திண்கோல் துடுப்பிருகாலில் தோன்ற
நளிர்புனல் கங்கை ஆற்றின் நடந்தெனச் செல்லும் நாவாய்
களிஉடை மஞ்ஞை அன்ன கனங்குழை கயற்கண் மாதர்
ஒளிர் அடிக்கமலம் தீண்ட உயிர்படைத்தன வேஒத்த. (௬௰)

மையறு விசும்பில் மண்ணில் மற்றும்ஓர் உலகில் முற்றும்
மெய்வினை தவமே அன்றி மேலும்ஒன்று உளதோ கீழோர்
செய்வினை நாவாய் ஏறித் தீண்டலர் மனத்தில் செல்லும்
மொய்விசும்பு ஓடம் ஆகத் தேவரின் முனிவர் போனார். (௬௧)

வேறு.

அறுபதினாயிரம் அக்குரோணிஎன்
றுறுதிசெய் சேனையும் எல்லை தீர்நகர்
மறுவறு மாக்களும் மகளிர் வெள்ளமும்
செறிதிரைக் கங்கையின் கிடக்கச் சென்றவே. (௬௨)

சுழித்துநீர் வருதுறை ஆற்றைச் சூழ்படை
கழித்து நீங்கியதெனக் கள்ள ஆசையை
அழித்து வேறவனி பண்டாண்ட வேந்தனை
இழித்து மேல்ஏறினான் தானும் ஏறினான். (௬௩)

தன்னன தம்பியும் தாயர் மூவரும்
சொன்ன தேர்வலவனும் தூய தோழனும்
துன்னினர் ஏறலும் துழாதுடுப்பெனும்
நன்னயக் காலினால் நடத்தல் மேயினான். (௬௪)

வேறு.

சுற்றத்தார்தேவரொடும்தொழநின்றகோசலையைத்தொழுதுநோக்கி
வெற்றித்தார்க்குரிசில்இவர்ஆர்என்றுகுகன்வினவவேந்தர்வைகும்
முற்றத்தான்முதற்றேவிமூன்றுலகும்ஈன்றானைமுன்ஈன்றானை [ன்
பெற்றத்தால்பெறும்செல்வம்யான்பிறத்தலால்துறந்தபெரியாள்என்று
என்றலுமேஅடியின்மிசைநெடிதுவீழ்ந்தழுவானைஇவன்யார்என்று
கன்றுபிரிகாராவின்துயர்உடையகொடிவினவகழற்கால்மைந்தன்தான்
இன்றுணைவன்இராகவனுக்கிலக்குவற்கும்இளையவற்கும்எனக்கும்மூத்
குன்றனையதிருநெடுந்தோட்குகன்என்பான்இந்நின்றகுரிசில்என்றான்
நைவீர்அலீர்மைந்தீர்இனித்துயரால்நாடிறந்துகாடுநோக்கி
மெய்வீரர்பெயர்ந்ததுவும்நலம்ஆயிற்றாம் அன்றேவிலங்கல்திண்தோ
கைவீரக்களிறனையகாளைஇவன்தன்னோடும்கலந்துநீர்கள் [ள்
ஐவீரும்ஒருவீர்ஆய்அகலிடத்தைநெடுங்காலம்அளித்திர்என்றாள். ()
அறந்தானேஎன்கின்றஅயல்நின்றாள்தனைநோக்கிஐயஅன்பின்
நிறந்தாளைஉரைஎன்னநெறிதிறம்பாத்தன்மெய்மைநிற்பதாக்கி
இறந்தான்தன்இளந்தேவியாவர்க்கும்தொழுகுலம் ஆம்இராமன்பின்பு
பிறந்தானும்உளன்என்னப்பிரியாதான்தனைப்பயந்தபெரியாள்என்றான்.
சுடுமயானத்திடைதன்துணைஏகத்தோன்றல்துயர்க்கடலின்ஏக
கடுமைஆர்கானகத்துக்கருணைஆர்கலிஏகக்கழற்கால்மாயன்
நெடுமையால்அன்றளந்தகெல்லாம்தன்மனத்தேநினைந்துசெய்யும்
கொடுமையால்அளந்தாளைஆர்இவர்என்றுரைஎன்னக்குரிசில்கூறும்.
படரெலாம்படைத்தாளைப்பழிவளர்க்கும் செவிலியைத்தன்பாழ்த்தபா
குடரிலேநெடுங்காலம்கிடந்தேற்கும்உயிர்ப்பாரம்குறைந்துதேயு [விக்
உடர்எலாம்உயிர்இலாஎனத்தோன்றும்உலகத்தேஒருத்திஅன்றே
இடர்இலாமுகத்தாளைஅறிந்திலையேல்இந்நின்றாள்என்னைஈன்றாள். ()

வேறு.

என்னக்கேட்டவ்இரக்கம்இலாளையும்
தன்னற்கையின்வணங்கினன்தாய்என
அன்னப்பேடைசிறைஇலதாய்க்கரை
துன்னிற்றென்னவும்வந்ததுதோணியே.
இழிந்ததாயர்சிவிகையின்ஏறத்தான்
பொழிந்தகண்ணில்புதுப்புனல்போயினான்
ஒழிந்திலன்குகனும்உடன்ஏகினான்
கழிந்தனன்பலகாவதம்காலினே. (௭௨)

பரத்தின்நீங்கும்பரத்துவன்என்னும்பேர்
வரத்தில்மிக்குயர்மாதவன்வைகிடம்
அருத்திகூர அணுகினன்ஆண்டவன்
விருத்திவேதியரோடெதிர்மேவினன். (௭௧)

௰௧-வது. குகப்படலம்முற்றும். ஆக-திருவிருத்தம்.[௩௬௰௭]

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

௰௨-வது கிளைகண்டுநீங்குபடலம்.

வந்தமாதவத்தோனை அம்மைந்தனும்
தந்தைஆம்எனத்தாழ்ந்துவணங்கினன்
இந்துமௌலிஅன்னானும்இரங்கினன்
அந்தம்இல்குணத்தாசிகள்கூறினன். (௧)

எடுத்தமாமுடிசூடிநின்பால்இயைந்
தடுத்தபேர்அரசாண்டிலைஐயநீ
முடித்தவார்சடைக்கற்றையைமுசுதா
சுடுத்துண்ணுதற்குற்றிளைதியாதென்றான். (௨)

சினக்கொடுந்திறற்சீற்றவெந்தீயினன்
மனக்கடுப்பினன்மாதவத்தோங்கலை
எனக்கடுத்ததியம்பிலைநீஎன்றான்
உனக்கடுத்ததும்அன்னதேவோஎன்றான். (௩)

மறையின்கேள்வற்குமனஇளங்கோன்றல்பின்
முறையின்நீங்கிமுழுநிலம்கொள்கிலேன்
இறைவன்காக்கிலன்ஆம்எனில்யாண்டெலாம்
உறைவென்கானத்தொருங்குடனேஎன்றான். (௪)

உரைத்தவாசகம்கேட்டலும்உள்எழுந்
திரைத்தகாதல்இருந்தவத்தோர்க்கெலாம்
குரைத்தமேனியொடுள்ளம்குளிர்ந்ததால்
அரைத்தசாந்துகொடப்பியதென்னவே. (௫)

ஆயகாதலோனையனைக்கொண்டுதன்
தூயசாலைஉறைவிடம்துன்னினன்
மேயசேனைக்கனைத்தும்விருந்தென
தீயின்ஆவுதிசெங்கையின்நீக்கினன். (௬)

துறந்தசெல்வன்கிளையத்துறக்கம்தான்
பறந்துவந்துபடிந்ததுபல்சனர்
பிறந்துவேறொருலகுபெற்றார்என
மறந்துவைகினர்முன்னைத்தம்வாழ்வெலாம். (௭)

நந்தல்இல்அறம்நந்தினர்ஆம்என
அந்தரத்தின்அரம்பையர்அன்பினர்
வந்துவந்தெதிர்ஏத்தினர்மைந்தரை
இந்துவிற்சுடர்கோயில்கொண்டேகினர். (௮)

நானம்நன்குறைத்தார்நளிர்வானிடை
ஆனகங்கைஅரும்புனல்ஆட்டினர்
தானமாமணிக்கற்பகம்தாங்கிய
ஊனம்இல்மலர்ஆடைஉடுத்தினர். (௯)

கொம்பின்நின்றுநுடங்குறுகொள்கையார்
செம்பொனின்கலநாசிதிருத்தினர்
அம்பரத்தின்அரம்பையர்அன்பொடும்
உம்பர்கோன்நுகர்இன்அமிர்தூட்டினர். (௰)

அஞ்சடுத்தஅமளிஅலத்தகப்
பஞ்சடுத்தபரிபுரப்பல்லவ
நஞ்சடுத்தநயனியர்நவ்வியில்
துஞ்சஅத்தனைமைந்தருந்துஞ்சினர். (௧௧)

ஏந்துசெல்வத்திமையவர்ஆம்எனக்
கூந்தல்தெய்வமகளிர்கொண்டாடினர்
வேந்தர்ஆதிசிவிகையின்வீங்குதோள்
மாந்தர்காறும்விசைவழாமலே. (௧௨)

மாதர்யாவரும்வானவர்தேவியர்
கோதில்செல்வத்துவைகினர்கொவ்வைவாய்
தீதில்செல்வமடந்தையர்சேடியர்
தாதிமார்எனத்தம்பணிகேட்பவே. (௧௩)

நந்தநந்தவனங்களில்நாண்மலர்
கந்தம்உந்தியகற்பகக்காவில்நின்
றந்தர்வந்தெனஅந்திதன்கைதர
மந்தமந்தமணந்ததுவாடையே. (௧௪)

மான்றளிக்குலம்நன்மதம்வந்துண
தேன்றளித்தகவளமும்செங்கதிர்
கான்றநெற்றழைக்கற்றையும்கற்பகம்
ஈன்றளிக்கநுகர்ந்தனயானையே. (௧௫)

நாகதர்க்கறம்நல்குநலத்தநீர்
காகதக்கரிகால்நிமிர்த்துண்டன
மரகதத்தின்கொழுந்தெனவார்ந்தபுல்
குரகதத்தின்குழாங்களும்கொண்டவே, (௧௬)

இன்னர்இன்னணம்யாவரும்இந்திரன்
துன்னுபோகங்கள்துய்த்தனர்தோன்றல்தான்
அன்னகாயும்கிழங்கும்உண்டப்பகல்
பொன்னின்மேனிபொடிஉறப்போக்கினன், (௧௭)

நீலஅல்இருள்நீங்கலும்நீங்கும்அம்
மூலம்இல்கனவில்திருமுற்றுற
ஏலும்நல்வினைதுய்ப்பவர்க்கிறுசெல்
காலம்என்னக்கதிரவன்தோன்றினன், (௧௮)

ஆறிநின்றறம்ஆற்றலர்வாழ்வென
பாறிவீய்ந்ததுசெல்வம்பரிந்திலர்
தேறிமுந்தைத்தம்சிந்தையர்ஆயினர்
மாறிவந்துபிறந்தன்னமாட்சியார். (௧௯)

வேறு.

காலைஅன்றெழுந்ததுகண்டுவானவர்
வேலைஅன்றனிகமேஎன்றுவிம்அற
சோலையும்கிரிகளும்சுண்ணம்ஆய்எழ
பாலைசென்றடைந்ததுபரதன்சேனையே. (௨௦)

எழுந்ததுதுகள்அதின்எரியும்வெய்யவன்
அழுந்தினன்அவிப்பருவெம்மைஆறினன்
மொழிந்தனகரிமதம்பொடிவெங்கானகம்
இழிந்தனஅடிநடந்தேறுமைமையே. (௨௧)

வடிஉடைஅயிற்படைமன்னர்வெண்குடை
செடிஉடைநெடுநிழல்செய்ததீப்பொதி
படிஉடைப்பரல்உறைப்பாலைமேல்உயர்
கொடிஉடைப்பந்தரிற்குளிர்ந்ததெங்குமே. (௨௨)

பெருகியசெல்வம்நீபிடிஎன்றுள்வயின்
திருகியசீற்றத்தால்செம்மைஆய்நிறம்
கருகியஅண்ணலைக்கண்டுகாதலின்
உருகியதளிர்த்தனஉலவைஈட்டமே　　　(உங)

வன்றெறுபாலையைமருதம்ஆம்எனச்
சென்றதுசித்திரகூடம்சேர்ந்ததால்
ஒன்றுணைத்துயிரினும்ஒழுக்கம்நன்றெனப்
பொன்றியபுரவலன்பொருவில்சேனையே.　　　(உச)

தூளியின்படலையும்துரகம்தேரொடு
மூளிருஞ்சினக்கரிமுழங்கும்ஓதையும்
ஆளிருங்குழுவினர்ஆரவாரமும்
கோளிரும்படைஇதென்றுணரக்கூறவே.　　　(உரு)

எழுந்தனன்இளையவன்ஏறினான்நிலம்
கொழுந்துயர்ந்தனயதோர்நெடியகுன்றின்மேல்
செழுந்திரைப்பரவையைச்சிறுமைபேசிய
கழுந்துடைவரிசிலைக்கடலைநோக்கினான்.　　　(உசு)

பரதன்இப்படைகொடுபார்கொண்டாள்மறம்
கருதிஉள்கிடந்ததோர்கறுவுகாதலால்
விரதம்உற்றிருந்தவன்மேல்வந்தான்இது
சரதம்மற்றிலதெனத்தழங்குசீற்றத்தான்.　　　(உஎ)

குதித்தனன்பாரிடைகுவடுநீறெழ
மிதித்தனன்இராமனைவிரைவின்எய்தினான்
மதித்திலன்பரதன்நின்மேல்வந்தான்மதில்
பதிப்பெருஞ்சேனையின்பரப்பினான்என்றான்.　　　(உஅ)

கட்டினன்சுரிகையும்கழலும்பல்கணைப்
புட்டிலும்பொறுத்தனன்கவசம்பூட்டமைத்
திட்டனன்எடுத்தனன்வரிவில்ஏந்தலை
தொட்டடிவணங்கிநின்றினையசொல்லினான்.　　　(உகூ)

இருமையும்இழந்தஅப்பரதன்ஏந்துதோள்
பருமையும்அன்னவன்படைத்தசேனையின்
பெருமையும்நின்ஒருபின்புவந்தஎன்
ஒருமையும்கண்டினிஉவத்திஉள்ளம்நீ.　　　(௩0)

படர்எலாம்படப்படும்பருமயானையின்
திடர்எலாம்உருட்டினதேரும்சர்த்தன
குடர்எலாம்திரைத்தனகுருதிஆறுகள்
கடர்எலாம்மடுப்பனபலவும்காண்டிஆல். (௩௧)

கருவியும்கைகளும்கவசமார்பமும்
உருவினஉயிரினேடுதிரம்தோய்வில
திரிவனசுடர்க்கணைதிசைக்கையானைகள்
வெருவரச்செய்வனகாண்டிவீரநீ. (௩௨)

கோடகத்தேர்படுகுதிரைதாவிய
ஆடகத்தட்டிடைஅலகைஅற்றுகு
கேடகத்தடக்கைகள்கவ்விக்கிதத்தின்
நாடகம்நடிப்பனகாண்டிநாதநீ. (௩௩)

பண்முதிர்களிற்றெருடுபரதன்சேனையின்
எண்முதல்அறுத்துநான்இமைப்பில்நீக்கலால்
விண்முதுகுளுக்கவும்வேலைஆடையின்
மண்முதுகாற்றவும்காண்டிவள்ளல்நீ (௩௪)

நிவந்தவான்குருதியின்நீத்தம்நீந்திமெய்
செவந்தசாதகரொடுசிறுகட்கூளியும்
கவந்தமும்உலகம்நின்கையதாயதென்
றுவந்தனகுனிப்பனகாண்டிஉம்பர்போல் (௩௫)

சூழிவெங்கடகரிதுரகராசிகள்
பாழிவன்புயத்திகல்வயவர்பட்டற
வீழிவெங்குருதியால்அலைந்தவேலைகள்
ஏழும்ஒன்றாகிநின்றிரைப்பக்காண்டிஆல். (௩௬)

ஆள்அறஅலங்குதேர்அழியஆடவர்
வாள்அறவரிசிலைதுணியமாக்கரி
தாள்அறத்தலைஅறப்புரவிதாளொடும்
தோள்அறவடிக்கணைதொடுப்பக்காண்டிஆல். (௩௭)

தழைத்தவான்சிறையனதசையும்கவ்வின
அழைத்தவான்பறவைகள்அலங்குபொன்வடிம்
பிழைத்தவான்பகழிபுக்கிருவர்மார்பிடை
புழைத்தவான்பெருவழிபோதக்காண்டிஆல். (௩௮)

ஒருமகள்காதலின்உலகைநோய்செய்த
பெருமகன்ஏவலில்பரதன்தான்பெறும்
இருநிலம்ஆள்கைவிட்டின்றென்ஏவலால்
அருநரகாள்வதுகாண்டிஆழியாய் (௩௯)

வையகம்துறந்துவந்தடவிவைகுதல்
எய்தியதுனக்கென்நின்னைஈன்றவள்
நைதல்கண்டுவந்தவள்நவையின்ஓங்கிய
கைகயன்மகள்விழுந்தரற்றக்காண்டிஆல். (௪௰)

அரஞ்சுடஅழல்நிமிர்அலங்கல்வேலினாய்
விரஞ்சொருநொடியில்இவ்அணிகவேலையை
உரஞ்சுடுவடிக்கணைஒன்றில்வென்றுமுப்
புரஞ்சுடும்ஒருவனிற்பொலிவென்யான்என்றான். (௪௧)

இலக்குவஉலகம்ஓர்ஏழும்ஏழும்நீ
கலக்குவன்என்பதுகருதினால்அது
விலக்குவதரிததுவிளம்பல்வேண்டுமோ
புலக்குரித்தொருபொருள்புகலக்கேட்டிஆல். (௪௨)

நங்குலத்துதித்தவர்நவையுள்நீங்கினர்
எங்குலப்புறுவர்கள்எண்ணில்யாவரே
தங்குலத்தொருவரும்தருமம்நீங்கினர்
பொங்குலத்திரளொடும்பொருததோளினாய். (௪௩)

எனைத்துள்மறைஅவைஇயம்பற்பாலன
பனைத்திரள்கரக்கரிப்பரதன்செய்கையே
அனைத்திறம்அல்லனஅல்லஅன்னது
நினைத்திலைஎன்வயின்நேயநெஞ்சினால். (௪௪)

பெருமகன்என்வயிற்பிறந்தகாதலின்
வரும்எனநினைகையும்மண்ணைஎன்வயின்
தரும்எனநினைகையும்தவிரத்தானையால்
பொரும்எனநினைகையும்புலமைப்பாலதோ. (௪௫)

பொன்னெடும்பொருகழற்பரதன்போந்தனன்
நன்னெடும்பெரும்படைநல்கல்அன்றியே
என்னொடும்பொரும்எனஇயம்பற்பாலதோ
மின்னொடும்பொருவுறவிளங்கும்வேலினாய். (௪௬)

சேனுயர் தருமத்தின் தேவை செம்மையின்
ஆணியை அன்னது நினைக்கல் ஆகுமே
பூணியல் மொய்ம்பினாய் போந்த திண்டெனக்
காணிய நீ இது பின்னும் காண்டி ஆல். (௪௭)

என்றனன் இளவலை நோக்கி ஏந்தலும்
நின்றனன் பரதனும் நிமிர்ந்த சேனையை
பின்றருகென்று தன் பிரிவில் காதலில்
தன்றுணைத் தம்பியும் தானும் முந்தினான். (௪௮)

தொழுதுயர் கையினன் துவண்ட மேனியன்
அழுதழி கண்ணினன் அவலம் ஈதென
எழுதிய படிவம் ஒத்தெய்துவான்றனை
முழுதுணர் சிந்தையான் முடிய நோக்கினான். (௪௯)

கார்ப்பொரு மேனி அக்கண்ணன் காட்டினான்
ஆர்ப்புறு வரிசிலை இளைய ஐய நீ
தேர்ப்பெருந் தானையால் பரதன் சீறிய
போர்ப்பெருங் கோலத்தைப் பொருந்த நோக்கென. (௫௰)

எல்லொடுங்கிய முகத்திளவல் நின்றனன்
மல்லொடுங்கிய புயத்தவனை வைதெழும்
சொல்லொடும் சினத்தொடும் உணர்வு சோர்தர
வில்லொடும் கண்ண நீர் நிலத்து வீழவே. (௫௧)

கோதறத் தவம் செய்து குறிப்பின் எய்திய
நாதனைப் பிரிந்தனள் நலத்து நீங்கினாள்
வேதனைத் திருமகள் மெலிகின்றாள் விடு
தூதெனப் பரதனும் தொழுது தோன்றினான். (௫௨)

அறந்தனை நினைந்திலை அருளை நீத்தனை
துறந்தனை முறைமையை என்னும் சொல்லினான்
மறந்தனன் மலர் அடி வந்து வீழ்ந்தனன்
இறந்தனன் தாதையை எதிர் கண்டென்னவே. (௫௩)

உண்டுகொல் உயிர் என ஒடுங்கினான் உரு
கண்டனன் நின்றனன் கண்ணன் கண் எனும்
புண்டரீகம் பொழி புனல் அவன் சடா
மண்டலம் நிறைந்து போய் வழிந்து சோரவே. (௫௪)

அயாஉயிர்த்தழுகணீர் அருவிமார்பிடை
உயாஉறத்திருஉளம்உருகப்புல்லினன்
நியாயம் அத்தனைக்கும்ஓர்நிலயம்ஆகினன்
தயாமுதல்அறத்தினைத்தழுவிஎன்னவே. (ருரு)

புல்லினன்நின்றவன்புனைந்தவேடத்தை
பல்முறைநோக்கினன்பலவும்உன்னினன்
அல்லலின்அழுங்கினைஐயவாளுடை
மல்உயர்தோளினன்வலியனோஎன்றான். (ருசா)

அரியவன்உரைசெயப்பரதன்ஐயநின்
பிரிவெனும்பிணியினல்என்னைப்பெற்றஅக்
கரியவள்வரம்எனும்காலனல்தனக்
குரியமெய்நிறுவிபோய்உம்பரான்என்றான். (ருஎ)

விண்ணிடைஅடைந்தனன்என்றவெய்யசொல்
புண்ணிடைஅயில்எனச்செவிபுகாமுனம்
கண்ணொடுமனம்சுழல்கறங்குபோலஆய்
மண்ணிடைவிழுந்தனன்வானின்உம்பரான். (ருஅ)

இருநிலம்சேர்ந்தனன்இறைஉயிர்த்திலன்
உருமின்நைஅரஎனஉணர்வின்நீங்கினன்
இருமையின்உயிர்வாஅயாஉயிர்த்தகம்
பொருமினன்பல்முறைபுலம்பினன்அரோ. (ருசு)

வேறு.

நந்தாவிளக்கனையநாயகனேநானிலத்தோர்
தந்தாய்தனிஅறத்தின்தாயேதயாநிலையே
எந்தாய்இகல்வேந்தர்ஏறேஇறந்தனையே
அந்தோஇனிவாய்மைக்கார்உளரோமற்றென்றான். (சூ0)

சொற்பெற்றநோன்பின்துறையோன்அருள்வேண்டி
நற்பெற்றவேள்விநவைநீங்கநீஇயற்றி
எற்பெற்றுநீபெற்றநின்உயிர்போய்நீங்கலோ
கொற்பெற்றவெற்றிக்கொலைபெற்றகூர்வேலோய். (சூக)

மன்உயிர்க்குநல்குரிமைமண்பாரம்நான்சுமக்க
பொன்உயிர்க்கும்தாரோய்பொறைஉயிர்த்தஆறிதுவோ
உன்உயிர்க்கும்கூற்றாய்உலகாளஉற்றேனே
மின்உயிர்க்கும்தீவாய்வெயில்உயிர்க்கும்வெள்வேலோய். (சூஉ)

என்பரத்ததாக்கிஅரசுரிமைஇந்தியங்கள்
வெம்பவத்தின்வீயத்தவம்விளைத்தஆறிதுவோ
சம்பரப்பேர்த்தானவனைத்தள்ளிச்சதமகன்தன்
அம்பரத்தின்நீங்காஅரசளித்தஆழியாய். (௬௩)

வேண்டுதிறத்தாரும்வேண்டாஅரசாட்சி
பூண்டிவ்உலகுக்கிடர்கொடுத்தபுல்லனேன்
மாண்டுமுடிவதல்லால்மாயாஉடம்பிதுகொண்
டாண்டுவருவதினிஆர்முகத்தேநோக்கவோ. (௬௪)

தேன்அடைந்தசோலைத்திருநாடுகைவிட்டு
கான்அடைந்தேன்என்னத்தரியாதுகாவலநீ
வான்அடைந்தாய்இன்னம்இருந்தேன்நான்வாழ்வுகந்தே
ஊன்அடைந்ததெவ்வர்உயிர்அடைந்தஒள்வேலோய். (௬௫)

வண்மைஇயும்மானமும்மேல்வானவர்க்கும்பேர்க்கிலாத்
திண்மைஇயும்செங்கோல்நெறியும்திறம்பாத
உண்மைஇயும்எல்லாம்உடனேகொண்டேகினையே
தண்மைஇதனைமதிக்கும்ஈய்ந்தகனிக்குடையோய். (௬௬)

என்றெடுத்துப்பற்பலவும்பன்னிஇடருழக்கும்
குன்றெடுத்தஒக்கும்குவவுத்தோள்கோள்அரியை
வன்றடக்கைத்தம்பியரும்மற்றுள்ளமன்னவரும்
சென்றெடுத்துத்தாங்கினார்மாவதிட்டன்தேற்றினான். (௬௭)

புன்னரியநோன்பின்பரத்துவனேஆதிஆம்
பின்னுசடையோரும்பேர்உலகம்ஓர்ஏழின்
மன்னவரும்மந்திரியர்எல்லாரும்வந்தடைந்தார்
தன்னுரிமைச்சேனைத்தலைவோரும்தாம்அடைந்தார். (௬௮)

மற்றும்வரற்பாலர்எல்லாரும்வந்தடைந்தார்
சுற்றும்இருந்தஅமைதியினில்துன்புழக்கும்
கொற்றக்குரிசில்முகநோக்கிக்கோமலரோன்
பெற்றபெருமைத்தவமுனிவன்பேசுவான். (௬௯)

வேறு.

துறத்தலும்நல்லறத்துறையும்அல்லது
புறத்தொருதுணையிலைபொருந்தும்மன்உயிர்க்
கிறத்தலும்பிறத்தலும்இயற்கைஎன்பதை
மறத்தியோமறைகளின்வரம்புகண்டநீ. (௭௰)

உண்மையில்பிறவிகள் உலப்பில்கோடிகள்
தண்மையில்வெம்மையில்தழுவினவ்வெனும்
வண்மையைநோக்கியவழியகூற்றின்பால்
கண்மையும்உளதெனக்கருதல்ஆகுமோ. (௭௧)

பெறுவதன்முன்உயிர்பிறிதல்காண்டிஆல்
மறுவறுகற்பினில்வையம்யாவையும்
அறுவதினாயிரம்ஆண்டும்ஆண்டவன்
இறுவதுகண்டவற்கிரங்கல்வேண்டுமோ. (௭௨)

சீலமும்தருமமும்சிதைவில்செய்கையும்
சூலமும்திகிரியும்சொல்லும்தாங்கிய
மூலம்வந்துதவிய மூவர்க்காயினும்
காலம்என்றொருவலைகடக்கல்ஆகுமோ. (௭௩)

கண்முதற்காட்சியகளைஇல்நீளத்த
உண்முதற்பொருட்கெலாம் ஊற்றம்ஆவன்
மண்முதற்பூதங்கள்மாயும்என்றபோ
தெண்முதல்உயிர்க்குநீஇரங்கல்வேண்டுமோ. (௭௪)

புண்ணியநறுநெய்யில்பொருவில்காலம்ஆம்
திண்ணியதிரியினில்விதிஎன்தீயினில்
எண்ணியவிளக்கவை இரண்டும்எஞ்சினால்
அண்ணலேஅவிவதற்கையம்ஆவதோ. (௭௫)

இவ்வுலகத்தினும்இடரினேகிடந்
தவ்வுலகத்தினும்நரகின்ஆழ்ந்துபின்
வெவ்வினைதுய்ப்பன விரிந்தயோனிகள்
எவ்வளவிற்செல எண்ணல்ஆகுமே. (௭௬)

உண்டுகொல்இதுவலதுதவிநீசெய்வ
தெண்டகுகுணத்தினாய்தாதைஎன்றலால்
புண்டரீகத்தனிமுதற்கும்போக்கரு
விண்டுவின்உலகிடைவிளங்கினான்அரோ. (௭௭)

ஐயநீஆதொன்றும்அவலிப்பாய்அலை
உய்திறம்அவற்கினிஇதனின்ஊங்குண்டோ
செய்வனவரன்முறைதிருத்திச்சேர்ந்தநின்
கையினால்ஒழுக்குதிகடன்எலாம்என்றான். (௭௮)

விண்ணுநீர்மொக்குளின்விளியும்யாக்கையை
எண்ணிநீ அழுங்குதல்இழுதைப்பாலதால்
கண்ணில்நீர்உகுத்தலில்கண்டதில்லைபோய்
மண்ணுநீர்உகுத்திதாமரைக்கையால்என்றான். (எகூ)

என்றபின்வந்தலைவந்திவேந்தரும்
பொன்றிணிந்தனசடைப்புனிதனேடும்போய்ச்
சென்றனர்செறிதிரைப்புனலில்செய்கென
நின்றனர்இராமனும் நெறியைநோக்கினன். (அ௰)

புக்கனன்புனலினில் முழுகிப்போந்தனன்
தக்கநன்மறையவன் சடங்குகாட்டத்தான்
முக்கையின்நீர்விதிமுறையின்ஈய்ந்தனன்
ஒக்கநின்றுயிர்தொறும் உணர்வுநல்குவான். (அக)

ஆனவன்பிறஉளஆவும்ஆற்றிப்பின்
மானமந்திரத்தவர் மன்னர்மாதவர்
ஏனையர்பிறர்களும்சுற்றஏகினன்
சானகிஇருந்தஅச்சாலைஎய்தினன். (அஉ)

எய்தியவேலையில்தமியள்எய்திய
தய்யலைநோக்கினன்சாலைநோக்கினன்
கைகளில்கண்மலர்புடைத்துக்கால்மிசை
அய்யன்அப்புரதன்வீழ்ந்தரற்றினன்அரோ. (அங)

வெந்துயர்தொடர்தர விம்மல்விம்மநீர்
உந்தியநிரந்தரம் ஊற்றுமாற்றில
சிந்தியகுரிசில்அச்செம்மல்சேர்ந்தகண்
இந்தியங்களில்எறிகடல்உண்டென்னவே. (அச)

அந்நெடுந்துயர்உறும்அரியவீரனை
தன்நெடுந்தடக்கையால் இராமன்தாங்கினன்
நன்நெடுங்கூந்தலைநோக்கிநாயகன்
என்நெடும்பிரிவினில் இறந்திட்டான்என்றான். (அரு)

துண்எனும்நெஞ்சினள்துளங்கினள்துணைக்
கண்எனும்கடல்நெடுங்கலுழிகான்றிட
மண்எனும்செவிலிமேல்வைத்தகையினள்
பண்எனும்கிளவியால் பன்னிஏங்கினள். (அகூ)

கன்னகுதிரள்புயக்கணவன்பின்செல
நன்னகர்ஒத்ததுநடந்தகானமும்
மன்னவன்துஞ்சினன்என்றமாற்றத்தால்
அன்னமும்துயர்க்கடல்அடிவைத்தாள்அரோ. (அ௭)

ஆயவள்தன்னைநேர்ந்தங்கைவந்தினர்
தாயரின்முனிவர்தம்தருமபன்னியர்
தூயநீர்ஆட்டினர்துயரம்நீக்கினர்
நாயகற்சேர்த்தினர்நவையுள்நீங்கினர். (அஅ)

தேன்தரும்தெரியல்அச்செம்மல்நால்வரை
ஈன்றவர்மூவரோடிருமைநோக்குறும்
சான்றவர்குழாத்தொடும்தருமம்நோக்குறும்
தோன்றல்பால்சுமந்திரன்தொழுதுதோன்றினன். (அ௬)

வேறு.

எந்தையாண்டையான்இயம்புவீர்என
வந்ததாயர்தம்வயங்குசேவடி
சிந்தினின்றனன்சேந்தகண்ணநீர்
முந்தைநான்முகத்தவற்கும்முந்தையான். (௬௰)

தாயரும்தலைப்பெய்துதாம்தழீஇ
ஓய்வில்அன்பினால்உரறல்ஒங்கினர்
ஆயசேனையும்அணங்கனார்களும்
தீயில்வீழ்ந்துதீமெழுகில்தேம்பினர். (௬௧)

பின்னவ்வீரனைப்பெற்றபெற்றிஅப்
பொன்னனார்களும்சனகன்பூவையை
துன்னிமார்புறத்தொடர்ந்துபுல்லினர்
இன்னல்வேலைபுக்கிழிந்தழுந்துவார். (௬௨)

சேனைவீரரும்திருநன்மாநகர்
மானமாந்தரும்மற்றுளோர்களும்
ஏனைவேந்தரும்பிறரும்யாவரும்
கோனைஎய்தினர்குறையும்சிந்தையார். (௬௩)

படம்செய்நாகணைப்பள்ளிநீங்கினன்
இடம்செய்தொல்குலத்திறைவன்ஆதலால்
தடம்செய்தேரினன்தானும்நீரினல்
கடம்செய்வான்எனக்கடலில்மூழ்கினன். (௬௪)

அன்றுதீர்ந்தபின் அரசவேலையும்
துன்றுசெஞ்சடைத்தவரும்சுற்றமும்
தன்றுணைத்திருத்தம்பிமார்களும்
சென்றுசூழஆண்டிருந்தசெம்மல்தான். (௬௫)

வரதன்துஞ்சினன்வைப்பம்ஆணையால்
சரதம்நின்னதேமகுடம்தாங்கலாய்
விரதவேடம்நீஎன்கொல்வேண்டுவான்
பரதகூறெனப்பரிந்துகூறினன். (௬௬)

என்றலும்பதைத்தெழுந்துகைதொழா
நின்றுதோன்றலைநெடிதுநோக்கிநீ
அன்றியாவரோஅறத்துளோர்அதர்
பின்றுவாய்கொல்ஆம்என்னப்பேசுவான். (௬௭)

மனக்கொன்றுதனவரத்தில்நின்னையும்
நினக்கொன்றுநிலைநிறுவிநேமியான்
தனக்கொன்றுள்தரும்தனயன்ஆதலால்
எனக்கொன்றுதவம்அடுப்பதெண்ணினல். (௬௮)

நோவதாகஇவ்உலகைநோய்செய்த
பாவகாரியிற்பிறந்தபாவியேன்
சாவதோர்கிலேன்தவம்செய்வேன்அலேன்
யாவன்ஆகிஇப்பழிநின்றேறுவேன். (௬௯)

நிறையின்நீங்கியமகளிர்நீர்மையும்
பொறையின்நீங்கியதவமும்பொங்கருள்
துறையின்நீங்கியஅறமும்தொல்லையோர்
முறையின்நீங்கியஅரசின்முந்துமோ. (௱)

பிறந்துநீஉடைப்பிரிவில்தொல்பதம்
துறந்துமாதவம்தொடங்குவாய்என்றால்
மறந்துநீதியில்திறம்பிவாளிற்கொன்
றறந்தின்றால்எனஅரசதாள்வெனோ. (௱௧)

ஓதாகையில்அன்பினல்இறைவன்துஞ்சநீ
புகையும்வெஞ்சுரம்புகுதப்புந்தியால்
வகையில்வஞ்சனய்அரசுவவ்வயான்
பகைவனேகொல்ஆம்இறவுபார்க்கின்றேன். (௱௨)

உந்தைதீமையும்உலகுறுதநோய்
தந்ததீவினைத்தாய்செய்தீமையும்
எந்தைநீங்கமீண்டரசுசெய்கென
சிந்தைஆவதும்தெரியக்கூறினன்; (௱௩)

சொற்றவாசகத்துணிவுணர்ந்தபின்
இற்றதோஇவன்மனம்என்றெண்ணுவான்
வெற்றிவீரயான்விளம்பக்கேள்என
முற்றநோக்கினன்மொழிதன்மேயினன். (௱௪)

முறையும்வாய்மையும்முயலும்நீதியும்
அறையும்மேன்மையோடறனும்ஆதிஆம்
துறையும்யாவையும் சுருதிநூல்விடா
இறைவர்ஏவலால்இயல்வகாண்அய்யா (௱௫)

பரவுகேள்வியும்பழுதில்ஞானமும்
விரவுசீலமும்வினையின்மேன்மையும்
உரவிலோய்தொழற்குரியதேவரும்
குரவரோஎனப்பெரிதுகோடிஆல். (௱௬)

அந்தநற்பெருங்குரவர்ஆர்எனச்
சிந்தைதேர்வுறத்தெரியநோக்கினல்
தந்தைதாயர்என்றிவர்கள்தாம்அலால்
எந்தைகூறவேறெவரும்இல்லைஆல் (௱௭)

தாய்வரம்கொளத்தந்தைஏவலால்
மேயநம்குலத்தருமம்மேவினேன்
நீய்வரங்கொளத்தவிர்தல்நீர்மையோ
ஆய்வரும்புலத்தறிவுமேவினய். (௱௮)

தனையர்ஆயினர்தந்தைதாயரை
வினையின்நல்லதோர்இசையைவேய்தலோ
நினையல்ஒவிடாநெடியவன்பழி
புனைதலோஅய்யபுதல்வர்ஆதல்தான் (௱௯)

இம்மைபொய்உணாத்திவறிஎந்தையார்
அம்மைவெம்மைசேர்நரகம்ஆளயான்
கொம்மைவெம்முலைக்குவையின்வைகிவாழ்
செம்மைசேர்நிலத்தரசுசெய்வெனோ (௱௰)

வீரனில்உந்தைசொல்மரபினால்உடை-
தாரணிநின்னதென்றியைந்ததன்மையால்
ஊரனில்நீபிறந்துரிமைஆதலால்
அரசுநின்னதேஆள்களென்னவே. (௩௧௧)

முன்னர்வந்துதித்துலகம்மூன்றினும்
நின்னைஒப்பிலாநீபிறந்தபார்
என்னதாதில்யான்இன்றுதந்தனென்
மன்னபோந்துநீமகுடம்சூடென. (௩௧௨)

மலங்கிவையகம்வருந்துவைகல்நீ
உலங்கொள்தோள்உளக்குறுவசெய்தியோ
கலங்குறுவணம்காத்திபோந்தென
பொலங்குலாவுதாள்பூண்டுவேண்டினான். (௩௧௩)

பசைந்தசிந்தைநீபரிவின்வையம்என்
வசம்செய்தால்அதுமுறைமையோவசைக்
கசைந்தஎந்தையார்அருளஅன்றுநான்
இசைந்தஆண்டெலாம்இன்றேடேறுமோ. (௩௧௪)

வாய்மைஎன்னும்ஈதன்றிவையகம்
தூய்மைஎன்றும்ஒன்றுண்மைசொல்லுமோ
தீய்மைதான்அதில்தீர்தல்அன்றியே
ஆய்மெய்ஆகவேறறையல்ஆவதே. (௩௧௫)

எந்தைஏவஆண்டேழொடேழென
வந்தகாலம்நான்வனத்துள்வைக நீ
தந்தபாரகம்தன்னைமெய்ம்மையால்
அந்தநாள்எலாம்ஆள்என்ஆணையால், (௩௧௬)

வேறு.

மன்னவன்இருக்கவேயும்மணிஅணிமகுடம்சூடு
கென்னயான்இயைந்ததன்றன்ஏயதுமறுக்கஅஞ்சி
அன்னதுநினைந்தும்நீஎன்ஆணையைமறுக்கல்ஆமோ
சொன்னதுசெய்திஐயதுயர்உழந்தயரல்என்றான். (௩௧௭)

ஒள்ளியோன்இனையஎல்லாம்உரைத்தலும்உரைக்கல்உற்ற
பள்ளநீர்வெள்ளம்அன்னபரதனைவிலக்கிப்பண்டு
தெள்ளியகுலத்தோர்செய்கைசிக்கறச்சிந்தைநோக்கி
வள்ளியோய்கேட்டிஎன்னாவசிட்டமாமுனிவன்சொன்னான். (௩௧௮)

வேறு.

கிளர்அகன்புனலுள்நின்றரிஓர்கேழல்ஆய்
இளைஎனும்திருவினைஏந்தினான்அரோ
உளைவரும்பெருமைஓர்எயிற்றின்உட்புரை
வளர்இளம்பிறையிடைமறுவில்தோன்றவே. (௩௧௯)

ஆதிய அமைதியின் இறுதிஐம்பெரும்
பூதமும்வெளிஒழித்தெவையும்புக்கபின்
நாதன்அவ்அகன்புனல்நல்கிநண்அருஞ்
சோதிஆம்தன்மையில்துயில்தல்மேயினான். (௩௨௰)

ஏற்றஇத்தன்மையின்அமரர்க்கின்னமு
தூற்றுண்டக்கடல்வணன்உந்திஉந்திய
நூற்றிதழ்க்கமலத்தின்நொய்தின்யாவையும்
தோற்றுவித்துதவிடமுதல்வன்தோன்றினான். (௩௨௧)

அன்றவன்உலகினைஅளிக்கஆகிய
துன்றனிக்குலம்முதல்உள்ளவேந்தர்கள்
இன்றளவினும்முறைஇகந்துளார்இலை
ஒன்றுளதுரைஇனம்உணரக்கேட்டிஆல். (௩௨௨)

இதவியல்இயற்றியகுரவர்யாரினும்
மதவியல்களிற்றினாய்மறுவில்விஞ்சைகள்
பதவியஇருமையும்பயக்கப்பண்பினால்
உதவியஒருவனேஉயரும்என்பர்ஆல். (௩௨௩)

என்றலால்யான்உனைஎடுத்துவிஞ்சைகள்
ஒன்றலாதனபலஉதவிற்றுண்மையால்
அன்றெனாதின்றெனதாணைஅய்யநீ
நன்றுபோந்தளிஉனக்குரியநாடென்றான். (௩௨௪)

கூறியமுனிவனைக்குவிந்ததாமரை
சீறியகைகளாத்தொழுதுசெங்கணான்
ஆறியசிந்தனைஅறிஞஒன்றுரை
கூறுவதுளதெனக்கூறல்மேயினான் (௩௨௫)

சான்றவர்ஆகதன்குரவர்ஆகதாய்
போன்றவர்ஆகமெய்ப்புதல்வர்ஆகதான்
தேன்றருமலர்உளான்சிறுவசெய்வென்என்
றேன்றபின்அவ்உரைமறுக்கும்ஈட்டதோ. (௩௨௬)

தாய்பணித்துவந்தனதந்தைசெய்கென
ஏயனப்பொருள்களும்இறைஞ்சிமேற்கொளா
தீயஅப்புலையனில்செய்கைதேர்கிலா
நாய்எனத்திரிவதுநல்லதல்லதோ. (௩௨௭)

முன்னுறப்பணித்தவர்மொழியையான்என
சென்னியிற்கொண்டதுசெய்வென்என்றதின்
பின்னுறப்பணித்தனைபெருமையோய்எனக்
கென்னினிச்செய்வதைஉரைசெய்கென்றான். (௩௨௮)

முனிவனும்உரைப்பதோர்முறைமைகண்டிலெம்
இனிஎனஇருந்தனன்இளையமைந்தனும்
அனையதேல்ஆள்பவர்ஆள்கநாடுநான்
பனிபடர்காடுடன்படர்தல்மெய்என்றான். (௩௨௯)

அவ்வழிஇமையவர்அறிந்துகூடினர்
இவ்வழிஇராமனைஇவன்கொண்டேகுமேல்
செவ்வழித்தன்றுநம்செயல்என்றெண்ணினர்
கவ்வைபர்விசும்பிடைக்கழறல்மேயினர். (௩௩௰)

ஏத்தரும்பெருங்குணத்திராமன்இவ்வழி
போத்தரும்தாதைசொல்புரக்கும்பூட்சியான்
ஆத்தஆண்டேழினோடேழும்அங்கிலம்
காத்தல்உன்கடன்இவைகடமைஎன்றனர். (௩௩௧)

வானவர்உரைத்தலும்மறுக்கற்பாலதன்
றியான்உனைஇரந்தனன்இனிஎன்ஆணையால்
ஆனதோர்அமைதியின்அளித்திபார்எனா
தானவன்துணைமலர்த்தடக்கைபற்றினான். (௩௩௨)

ஆமெனில்எழிரண்டாண்டில்ஐயநீ
நாமநீர்நெடுநகர்நண்ணிநானிலம்
கோமுறைபுரிகிலைஎன்னில்கூர்எரி
சாமிதுசரதம்நின்ஆணைசாற்றினேன். (௱௩௩)

என்பதுசொல்லியபரதன்யாதும்ஓர்
துன்பிலன்அவனதுதுணிவைநோக்கினான்
அன்பினன்உருகினன்அன்னதாகென்றான்
தன்புகழ்தன்னினும்பெரியதன்மையான். (௱௩௪)

விம்மினன்பரதனும்வேறுசெய்வதொன்
றின்மையின்அரிதெனஎண்ணிஎங்குவான்
செம்மையின்திருவடித்தலம்தந்தீகென
எம்மையும்தருவனஇரண்டும்நல்கினான். (௱௩௫)

அடித்தலம்இரண்டையும்அழுதகண்ணினான்
முடித்தலம்இவைஎனமுறையிற்சூடினான்
படித்தலத்திறைஞ்சினன்பரதன்போயினான்
பொடித்தலம்இலங்குறுபொலம்கொள்மேனியான். (௱௩௬)

ஈன்றவர்முதலியஎண்ணில்சுற்றமும்
சான்றவர்குழுவொடுதவத்துளோர்களும்
வான்றருசேனையும்மற்றும்சுற்றுற
மூன்றுநூல்கிடந்ததோள்முனியும்போயினான். (௱௩௭)

பண்ணடைநூல்தெரிபரத்துவனும்போயினான்
மண்டுநீர்நெடுநகர்மாந்தர்போயினார்
விண்டுறைதேவரும்விலகிப்போயினார்
கொண்டல்தன்ஆணையால்குகனும்போயினான். (௱௩௮)

பாதுகம்தலைக்கொடுபரதன்பைம்புனல்
மோதுகங்கையின்கரைகடந்துமுந்தினான்
போதுகுங்கடிபொழில்அயோத்திபுக்கிலன்
ஓதுகங்குலின்நெடிதுறக்கம்நீங்கினான். (௱௩௯)

நந்தியம்பதியிடைநாதன்பாதுகம்
செந்தனிக்கோல்முறைசெலுத்தச்சிந்தையான்
இந்தியங்களைஅவித்திருத்தல்மேயினான்
அந்தியும்பகலும்நீர்அருதகண்ணினான். (௱௪௰)

குன்றினில்இருந்தனன்என்னும்கொள்கையான்
நின்றவர்நிவரால்நேயத்தால்எனா
தன்றுணைத்தம்பியும்தானும்தையலும்
தென்றிசைநெறியினைச்சேறல்மேயினான். (௱௪௧)

௰௨ - வது. கிளைகண்டுநீங்குபடலமுற்றும். ஆக திருவிருத்தம்[௲௨௱௮.]

மேற்போனபாலகாண்டம்-௧-க்கு திருவிருத்தம்[௲௪௱௰௭.]

ஆக காண்டம்-௨-க்கு-படலம்-௩௰௬க்கு-திருவிருத்தம். ௨௲௬௱௨௰௫.]

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

அயோத்தியாகாண்டம்

முற்றும்.

ஸ்ரீ

படலஅகராதி.

படல - அகராதி - முற்றுப்பெற்றது.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.